வணிகத்தளிர்
VANIKATHTHALIR



2015 | தளிர்-13

யா/திருக்குடும்ப கன்னியர் மடம்
J/HOLY FAMILY CONVENT

வணிகத்தளிர்

திருக்குடும்ப கன்னியர் மடம்
தேசிய பாடசாலை

J/HOLY FAMILY CONVENT
LIBRARY
DATE:-10.07.2015
NATIONAL SCHOOL JAFFNA.

வணிக மாணவர் ஒன்றியம்

தளிர் 13

LIBRARY

யா/ திருக்குடும்ப கன்னியர் மடம்

வணிக மாணவர் ஒன்றியம்

Vision

தூரநோக்கு

சர்வதேச ரீதியில் ஆளுமைத்திறன்மிக்க

மாணவர்களை உருவாக்குதல்

Mission

இலட்சிய நோக்கு

வணிகத்துறை சார்ந்த அறிவினை வளர்க்கும் பரவச்

செய்யும் அனுபவக்களங்களின்வழி மாணவிகளின்

கல்வித்தர மேம்பாட்டினை உறுதிசெய்தல்

வணிக கீதம்

போற்று முயர்திருக்குடும்பம் எனப்புகழ்
ஆற்றும் கன்னியரின்
ஏற்முற மடம் ஈட்டும் வணிகமன்று
ஆக்கும் பணி வளர்க
ஆக்கும் பனி வளர்க.

நேற்று வளர் தளிர் ஏற்று மலர் மணம்
சேர்த்து எழில் மிகவே
ஊற்று வரப் பயன் தூக்கி நுகர்வுற
வீற்று மகிழ்வுறுவோம்.

கேற்று முயர் நெறி தேவன் கருணையால்
கீர்த்தி பெறு முறுதி
பீற்று வரப்பலம் ஊட்டி பெம் மண்ணிலே
பீடுற வாழ்வோமே.

ஆசிச் செய்தி

வருடம் தோறும் வணிக மன்றத்தினால் வெளிவரும் "வணிக தளிருக்கு" ஆசிச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

மாணவர்கள் தமது கற்றலோடு மட்டும் நின்றுவிடாது புதிய தேடல்கள், அனுபவங்கள், எண்ணக்கருத்துக்கள் யாவற்றையும் ஒன்று சேர்த்து சிறந்த படைப்பாக இந்நூலை வெளியிட்டுள்ளனர்.

இவர்களின் முயற்சியையும் அர்ப்பணிப்பையும் கூட்டுப்பொறுப்பினையும் நான் மனதாரப் பாராட்டுகின்றேன். ஏனைய மாணவரும் இந்நூலை படித்துப் பயன் பெறுவார்களாக, சிறந்த நூலாக வணிகத்தளிர் வெளிவர உழைத்த மாணவர்களையும், ஊக்கப்படுத்திய பொறுப்பாசிரியரையும் வாழ்த்தி தொடர்ந்தும் வணிகத்தளிர் வருடந்தோறும் வெளிவர வேண்டும் என ஆசித்து இறையாசி வேண்டி நிற்கின்றேன்.

அருட்சகோதரி தயாநாயகி செபமாலை,
அதிபர்,
யா/திருக்குடும்ப கன்னியர் மடம்.

ஆசிச் செய்தி

யா/ திருக்குடும்பக் கன்னியர்மட தேசியப் பாடசாலையினது வணிக மன்றத்தினால் வெளியிடப்படும் வணிகத்தளிர் சஞ்சிகைக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

வணிக பாடத்தினைக் கற்கும் மாணவர்களுக்கு பயன்தரத்தக்க வகையில், அவர்களது அறிவினை மேம்படுத்தும் நோக்கில் இச்சஞ்சிகை வெளிவருகின்றது. இச்சஞ்சிகையில் உள்ள ஆக்கங்கள் மாணவர்களது வணிக பாடம் தொடர்பான அறிவினை வளர்ப்பதோடு, பொதுப் பரீட்சைகளில் உயர் அடைவுகளைப் பெறுவதற்கும் வழிவகுக்கும்.

ஆசிரியர்கள், மாணவர்களது ஆக்கங்களைத் தாங்கி வெளிவரும் இச்சஞ்சிகை தொடர்ந்து வெளிவர காரணகர்த்தாக்களான அனைவரையும் பாராட்டுகின்றேன். இச்சஞ்சிகை தொடர்ந்து வெளிவந்து மாணவர்களுக்குப் பயன்தரவேண்டி வாழ்த்துகின்றேன்.

செ. உதயகுமார்,
வலயக் கல்விப் பணிப்பாளர்.

வணிகத்தளிர் தழைத்தோங்க

யாழ்ப்பாணத்தின் தேசிய பாடசாலைகளில் ஒன்றாக விளங்கும் யாழ். திருக்குடும்ப கன்னியர் மடத்தின் வணிக மன்றத்தினரால் வெளியிடப்படும் இவ்வணிகத் தளிருக்கான வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் பெரும் உவகையடைகின்றேன்.

இவ்வணிகத்தளிரானது வணிகக் கல்வியைக் கற்கும் மாணவர் களுக்கு மட்டுமல்லாது கல்வி கற்கும் அனைவருக்கும் அறிவினையும் தகவல்களையும் வழங்க வல்லதாக அமைந்துள்ளது.

இத்தளிரானது அனைவரும் படித்து பயன்பெறும் வகையில் அமைவதற்காக அயராது உழைத்த மாணவர்களையும் ஆசிரியர்களையும் இப்பாடசாலையின் அதிபரையும் போற்றுவ தோடு இவ்வணிகத்தளிரானது தொடர்ந்தும் பல துளிர்களை விட்டுத் தழைத்தோங்க இறை பெருமையும் வேண்டி வாழ்த்தி நிற்கின்றேன்.

திருமதி வே. பாலேந்திரா,
உதவிக் கல்விப் பணிப்பாளர்.
(தொழில்நுட்ப பாடங்கள்)

மன்ற பொறுப்பாசிரியரின் வாழ்த்து

வணிகத்தளிரின் 13 வது இதழ் மலர்கின்றது. வணிகத்துறை அறிவின் எல்லைகளை விரிவாக்கும் காலப்பணியில் புதிய இதழின் வரவு பெருமை தருகின்றது.

இன்றைய வாழ்வின் அனைத்து முகங்களிலும் வணிகத்துறை சார்ந்த அறிவின் தேவை உணரப்படுகின்றது. கிராமிய மேம்பாட்டுக்கான சமூக முயற்சியாண்மையிலிருந்து தேசங்களைத் தாண்டிய சர்வதேசவர்த்தகம் வரை எமது கல்விப்புலத்தின் எல்லைகள் விரிந்துள்ளன. இன்றைய உலகை வெல்லுவதற்கான திறன்கள் யாவும் கல்வி அனுபவமாகவே எம் மாணவர் வசப்படுகின்றன.

இந்த பொருண்மைகளிலிருந்து தேர்ந்தெடுத்த ஆக்கங்களுடன் இதழ் வடிவமைக்கப்பட்டுள்ளது. எங்கள் மாணவ செல்வங்களின் ஆற்றலை வளர்த்திடும் பயில்களமாக அமையும் வணிகத்தளிருக்கு உரமளிப்பதாக துறைசார் அறிஞர்களின் ஆக்கங்களும் நேர்காணலும் அணி செய்கின்றன.

தாயாகி நின்று எங்கள் தளிரின் வரவுக்கான ஊக்கத்தினை தந்திட்ட எங்கள் அருட் சகோதரி தயாநாயகி செபமாலை அவர்களுக்கும், உபஅதிபர் செல்வி. மே.பூ.பெனடிக்ற் அவர்களுக்கும், ஆசிச்செய்தி வழங்கிய யாழ், வலயக்கல்விப்பணிப்பாளர் திரு.எஸ். உதயகுமார் அவர்களுக்கும், யாழ், உதவிக்கல்விப்பணிப்பாளர் (தொழில்நுட்பப்பாடங்கள்) திருமதி. வேழினி பாலேந்திரா அவர்களுக்கும், மற்றும் வணிகத்துறைசார்ந்த ஆசிரியர்களான திருமதி பு.திருஞானசம்பந்தன், திருமதி.து.சந்திரமோகன், திருமதி.ஜெ.ஜெபநேசன், திருமதி இ.ஜேம்ஸ் மைக்கல், திரு. மறோ மக்சோன், மற்றும் ஆங்கில ஆசிரியர்களான திருமதி இ.எம். சி.தேவராஜா, திரு.ஏ.ஜெ.ரவீந்திரன் ஆகியோருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

எல்லாவற்றுக்கும் மேலாக இந்த ஆக்கப்பணியிலே அர்ப்பணிப்புடன் செயற்பட்ட எங்கள் மாணவச் செல்வங்களுக்கும் எல்லையில்லா என் அன்பு வாழ்த்துக்கள்.

வணிகத்தளிர் மென்மேலும் வளர்ந்து செழித்திட எல்லாம்வல்ல இறைவனின் ஆசியை வேண்டுகின்றேன்.

திருமதி.கௌரி சண்முகலிங்கம்,
வணிக ஒன்றியப் பொறுப்பாசிரியர்.

தலைவரின் உள்ளத்திலிருந்து

யாழ்/ திருக்குடும்பக் கன்னியர் மடத்தின் வணிக மன்றத்தின் சார்பாக 2015ம் ஆண்டிற்கான 13வது வணிகத் தளிரானது வெளியிடப் படுகின்றது.

இவ் வணிகத் தளிரானது மாணவர்களினது ஆக்கங்களையும் துறைசார் வல்லுநர்களினது ஆக்கங்களையும் தன்னகத்தே தாங்கி ஒரு பயன்மிக்க இதழாக வெளிவருவதனையிட்டு நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

விஞ்ஞானத்தின் விந்தையினால் மாற்றமடைந்து ஒரு கிராமமாக மாறியுள்ள உலகில் எமது வணிகத்துறையானது போட்டியிட்டு முன்னணியில் நிற்கின்றது. சந்தைப்படுத்தல், தொழில்நுட்பம் போன்றவற்றினால் முன்னேற்றம் அடைந்துவரும் எம் நாட்டுப் பொருளா தாரத்தை வளர்ச்சியடையச் செய்யும்முகமாக நாளைய தலைவர்களாக விளங்கப் போகும் எம் மாணவர்களின் சிந்தனையை மேம்படுத்த வேண்டிய நிலை இன்று பெரிதும் தோன்றி யுள்ளது. இந்நிலையில் எம் பாடசாலை வணிக மாணவர்களால் வெளியிடப்படுகின்ற இம்மலர் பலர் உள்ளங்களை கவரும் என்பதில் ஐயமில்லை.

இவ் வணிகத்தளிரை எமது பாடசாலை வணிக மன்றத்தின் அயராத முயற்சியுடனும் உயர் பங்களிப்புடனும் உருவாக்கி உங்கள் கரங்களில் கிடைக்கச் செய்துள்ளோம். மாணவர்களிடையே வணிக அறிவை வளர்க்கும் பொருட்டு வெளிவரும் இந்நூலின் ஆக்கங்கள் அனைத்து மாணவர்களுக்கும் நன்மைபயக்கும் என நம்புகின்றேன்.

இத்தளிர் சிறந்த முறையில் வெளிவர பல வழிகளில் உதவி புரிந்த அனைவருக்கும் எனது நன்றிகளை தெரிவிப்பதோடு இனிவரும் காலங்களில் தொடர்ந்தும் இவ்வணிகத்தளிர் சிறப்பான முறையில் தளிர்விட்டு வளர உங்கள் அனைவரினதும் ஆதரவையும் ஆசிகளையும் வேண்டி நிற்கின்றேன்.

செல்வி ஆனந்தி ஆனந்தராஜன்,
தலைவி.

செயலாளர் சிந்தனையிலிருந்து

எமது பாடசாலையின் வருடாந்த வெளியீடாகிய "வணிகத்தளிர்" சஞ்சிகையின் 13வது மலர் இன்று உங்கள் கைகளில் தவழ்கிறது. பயன்மிக்க கட்டுரைகள், மாணவர்களது முத்தான ஆக்கங்கள் பலவும் இம் மலரை மணம் வீசச் செய்கின்றன.

தகவல் தொழிநுட்ப வளர்ச்சியினால் மிக வேகமாக வளர்ந்துவரும் இவ் உலகிலே வணிகத்துறையும் உலக மயமாதலின் விளைவாக உச்சவேகத்தில் வளர்ச்சியடைந்து காணப்படுகின்றது. அதனால் நவீன உலகில் வாழுகின்ற மனிதர்களும், அத்துறை தொடர்பான அறிவினை பெற்றிருப்பது அவசியமாகும். அந்தவகையில் மாணவர்களது வணிக அறிவினை வளர்க்கும் நோக்கோடு எமது மன்றமானது இத்தளிரை வெளியிடுகின்றது.

இச் சஞ்சிகையானது வெளிவர எமக்கு ஆக்கமும், ஊக்கமும் தந்த எமது அதிபர், அருட்சகோதரி. தயாநாயகி செபமாலை அவர்களுக்கும், உப அதிபர் செல்வி. பூபதி பெனடிற் அவர்களுக்கும் நன்றிகளைக் கூறிக்கொள்ளுகிறோம். அத்துடன் எமக்கு நல்ல ஆலோசனைகளை தந்து வழிநடத்திய எமது மன்ற பொறுப்பாசிரியர் திருமதி. கௌரி சண்முகலிங்கம் அவர்களுக்கும், மற்றும் மன்ற உறுப்பினர்கள், துறை சார்ந்த பெரியோர்கள், ஆக்கங்களைத் தந்த மாணவர்கள், பழைய மாணவர்கள், விளம்பர உதவியாளர்கள் அனைவருக்கும் என் உளம் கனிந்த நன்றிகள்.

இனிவரும் காலங்களிலும் இம் மலரை எம் மாணவர்கள் ஆர்வத்துடனும், உற்சாகத்துடனும் வெளியிடுவார்கள் என நம்புகின்றேன்.

மேரி பிரியங்கா,
செயலாளர்.

இதழாசிரியரின் இதயத்திலிருந்து...

யா/திருக்குடும்ப கன்னியர்மட தேசிய பாட சாலையின் வணிக மாணவ மன்றமானது தனது 13ஆவது "வணிகத் தளிர்" என்னும் இதழை வெளியிடு கின்றது.

எமது பாடசாலையில் வணிக மன்றமானது வாணிபம் தொடர்பாகப் பல்வேறு செயற்பாடுகளை ஆற்றி வருகின்றது. இவ்வகையில் வணிகத்தளிர் என்னும் சஞ்சிகை யினையும் வெளியிடுகின்றது. இந்த வகையில் 2015ம் ஆண்டு வணிக மன்றமானது தனது 13வது வணிகத் தளிரை வெளியீடு செய்கின்றது.

இன்றைய 21ம் நூற்றாண்டு காலப்பகுதியிலே அனைத்து நாடுகளும் இலத்திரனியல் வணிகத்தினதும் தொடர்பாடல் தொழில்நுட்பத்திலும் சிறந்து விளங்குகின்றது. இதனூ டாக அனைத்து நாடுகளிலும் பொருளாதார அபிவிருத்தியை மேன்மேலும் விருத்தி செய்வதற்கு இன்றைய மாணவ சமுதாயத்திடையே இலத்திரனியல் வணிகம் தொடர்பான அறிவினை ஊட்டுவதை நோக்கமாகக் கொண்டு எமது "வணிகத் தளிர்" எனும் சஞ்சிகை வெளியிடப்படுகின்றது.

மாணவர்கள் தமது இடைவிடாத கற்றலின் மத்தியில் இத்தளிருக்காக ஆக்கங்களைப் படைத்துள்ளனர். அவர்களின் ஆக்கத்திறன்களுக்கு வணிகத்தளிர் சிறந்த ஒரு தளமாக அமையும் என்பதில் ஐயமில்லை.

வணிகத் தளிருக்காக ஆக்கங்களைத் தந்ததுதவிய அனைத்து நல்உள்ளங் களுக்கும் நன்றிகளைக் கூறிக்கொள்கின்றோம்.

செல்வி ஸ்ரெபினியா பிரான்சிஸ்,
செல்வி ஆரபி கலியுகவரதன்,
இதழாசிரியர்கள்.

வணிக மன்ற உறுப்பினர்கள்

தலைவர்

ஆனந்தி ஆனந்தராஜன்

உபதலைவர்

லுசியா செல்வராசா

செயலாளர்

மேரி பிரியங்கா மரியதாஸ் குரூஸ்

பொருளாளர்

ஜஸ்ரீனா செபனேசன்

இதழாசிரியர்கள்

ஸ்ரெபினியா பிரான்சிஸ்

ஆரபி கலியுகவரதன்

விளம்பர பொறுப்பாளர்கள்

ஸ்ரெபிக்கா ஸ்ரான்லி ஜெயசீலன்

மாலின் பெலிசியா பொனிபஸ்

OUR PRINCIPAL

Rev.Sr.Thayanayaki Sebamalai, B.A, Dip.in Edu., SLPS 2.1



யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம் - வணிக மாணவர் ஒன்றியம் - 2015

இடமிருந்து வலம் (இருப்பவர்கள்): ம.மேரி பிரியங்கா (செயலாளர்), செல்வி மே.பு.பெனற்ஷ் (உப அதிபர்), அருட்சகோதரி தயாநாயகி செபமாலை (அதிபர்), திருமதி கௌரி சண்முகலிங்கம் (பொறுப்பாசிரியர்), ஆ.ஆனந்தி (தலைவர்)

இடமிருந்து வலம் (நிற்பவர்கள்): செ.ஜஸ்ரினா, பி.ஸ்ரெபினியா (இதழாசிரியர்), ஸ்.ஸ்ரெபிக்கா, செ.லுசியா (உபதலைவர்), க.ஆரபி (இதழாசிரியர்)

யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம் - வணிக மாணவர் - 2015 அணி

யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம் - வணிக மாணவர் - 2016 அணி

தளிரின் உள்ளே...

நேர்காணல்

❒ யாழ். பல்கலைக்கழக தொலைக்கல்வி - வெளிவாரிப் பட்டப்படிப்புகள் பரீட்சை அலகின் கல்வி இணைப்பாளர் - திரு.கந்தையா சிவராஜா 1

❒ **கணக்கீடு**

1. பொதுவரையறுக்கப்பட்ட கம்பனிகளுக்கான நிதிக்கூற்றுக்களினை பிரசுரித்தல் 9
2. பெறுமதி கூட்டப்பட்ட வரி 19
3. நிறைவில் பதிவு 25
4. இலாபநோக்கற்ற நிறுவனங்களின் கணக்குகள் 30
5. கட்டுப்பாட்டுக் கணக்குகள் 37
6. குத்தகைக் கணக்கீட்டு நியமம் LKAS -17 43
7. நிதிக்கூற்றே நீடுழி வாழ்க 49

❒ **வணிகக் கல்வி**

8. சந்தை துண்டமாக்கலும் இலக்குச்சந்தையும் 53
9. காப்புறுதிச் சேவையில் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் 57
10. தீர்மானம் எடுத்தல் 61
11. நிறுவன வளர்ச்சியில் ஊக்கப்படுத்தல் 63
12. வணிக உலகில் விளம்பரத்தின் பங்கு 65
13. பங்குச் சந்தையின் விலைச்சுட்டிகள் 68
14. உற்பத்திகளுக்கான விலையிடல் முறைகள் 70
15. பொருளாதாரக் கட்டளைக் கணியம் 73

❒ **பொருளியல்**

16. அரச வரவு செலவுத் திட்டமும் : அண்மைய போக்குகளும் 79
17. சர்வதேச வர்த்தகம் 86
18. வெளிவாரி விளைவுகள் 90
19. சந்தை சமநிலை மாற்றங்கள் 95
20. பணநிரம்பல் 98
21. போலி நாணயத்தாள்களும் பாதுகாப்புக் குறியீடுகளும் 102
22. குறுக்கெழுத்துப் புதிர் 109
23. சமூக வலைத்தளங்களும் அகயாளும் முறைகளும் 111
24. கணினி ஊடுருவல் தாக்குதல்களும் பாதுகாப்பு வழிமுறைகளும் 114
25. The Pleasures of learning 117
26. Easy ways of presenting and explaining in English 119
27. குறுக்கெழுத்துப் புதிருக்கான விடை 120

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தொலைக்கல்வி வெளிவாரி பட்டப்படிப்புக்கள் பரீட்சை அலகின் கல்வி இணைப்பாளர் திரு. கந்தையா சிவராஜா அவர்களுடனான நேர்காணல்

* தமிழில் வணிகக் கல்வியை உயர்தர வகுப்பில் பயில ஆரம்பித்த முதல் தொகுதி மாணவர். ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் முதல் தொகுதியின் தொழில் நிர்வாகமாணி பட்டதாரி.
* ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக பட்டபின்படிப்பு முகாமைத்துவ நிறுவனத்தில் உயர் டிப்ளோமா பட்டம்.
* களனி பல்கலைக்கழகத்தில் தொழில் நிர்வாகமாணி விரிவுரையாளர்.
* யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடத்தின் சந்தைப்படுத்தல் துறை விரிவுரையாளர்.
* யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தொலைக்கல்வி - வெளிவாரிப்பட்ட படிப்பு பரீட்சைகள் அலகின் கல்விசார் இணைப்பாளர்.
* தொழில்துறை ஆலோசகர்.

☐ எங்கள் புலத்தின் வணிகக்கல்வி முன்னோடிகளில் ஒருவராக பெருமை பெறுகின்றீர்கள் இந்தத் துறையை எவ்வாறு தேர்ந்தெடுத்தீர்கள்?

புதியதுறை ஒன்றினை கற்கவேண்டும் என்ற ஆர்வம் இளவயதிலேயே முளை விட்டிருந்தது. அதனை சாத்தியமாக்கிய பெருமைக்குரியவர்களான இருவரை இங்கு குறிப்பிடவேண்டும். யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் இடைநிலைக் கல்வியில் கணக்குப் பதிவை முதன்முதலில் தமிழில் கற்கும் வாய்ப்பினைத் தந்தவர் கலைப்புலவர் க.நவரத்தினம். அவ்வாறே புகழ்பூத்த முன்னாள் மத்திய கல்லூரியின் அதிபர் திருவாளர் இ.சபாலிங்கம் அவர்களின் தீர்க்கதரிசனத்தில் உயர்தர வகுப்பில் வணிகக்கல்வி முதன் முதலாக எங்கள் காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. அது எங்களுக்கான புதியதொரு வாய்ப்பானது.

☐ வணிகத்துறைசார்ந்த கல்வியானது உங்கள் தொழில்வாண்மை, மேம்பாட்டில் எத்தகைய பங்களிப்பினைச் செய்துள்ளது எனக் கூறுவீர்களா?

புதியதொரு துறையில் கிடைத்த இந்தப் பட்டத்தினால் களனிப் பல்கலைக்கழகத்திலும் பின்னர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் விரிவுரையாளனாகும் வாய்ப்பு கிடைத்தது. அவ்வாறே ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் உயர்பட்டப்படிப்பு வாய்ப்பும் கைவசமானது. மிகச்சிறந்த பேராசிரியர்களின் வழிகாட்டலில் இத்துறை சார்ந்த ஆற்றல்களை வளர்த்துக்கொள்ள முடிந்தது. பன்மைச் சமூகச் சூழலில் பல இன மக்களுடனும் இணைந்து கற்ற சூழலினால் இன்று தேசத்தின் பல்வேறு தொழில் புலங்களிலும் சிறப்பாக விளங்கும் பலருடைய நட்பும் கிடைத்தது. முகாமைத்துவம் என்பது மனிதநேய அடிப்படையிலான உறவுகளின் வழியிலேயே வெற்றிபெறும் என்ற இக்கால மனிதவள முகாமைத்துவ கோட்பாடுகளை அனுபவப்பாடமாக, உள்ளார்ந்த பண்பாக நான் பெற்றுக்கொள்ள முடிந்தது.

☐ வணிகக் கல்வி சார்ந்த எங்களுக்கான உயர் கல்வி வாய்ப்புக்கள் பற்றிக் கூறுவீர்களா?

வணிக பாடநெறியைப் பயில்வோர்க்கான உயர் கல்வி வாய்ப்புக்களை இரு வேறு புலங்களில் நோக்கலாம். ஒன்று பல்கலைக்கழகங்களில் தொடரக்கூடியதான கல்விசார் பட்டப்படிப்புக்கள். இரண்டாவது தொழில் வாண்மைசார் பாடநெறிகள் விரிவாகக் கூறுவதாயின் இன்று இலங்கையில் காணப்படுகின்ற 15 பல்கலைக்கழகங்களில் வணிக முகாமைத்துவம்சார் பீடங்களினால் வழங்கப்படுகின்ற வணிகமாணி விசேட கற்கை நெறிகள், தொழில்மாணி தொடர்பான இளமாணிப் பாடநெறிகள், குறிப்பாக கணக்கீடு, சந்தைப்படுத்தல், மனிதவள முகாமைத்துவம், நிதிமுகாமைத்துவம், சுற்றுலா முகாமைத்துவம், பொதுநிர்வாகம், தோட்ட நிர்வாகம், போன்ற நெறிகளுடன் பல்கலைக்கழகம் தவிர்ந்த உயர்தொழில்நுட்ப நிறுவனங்களில் கணக்கீடு, முகாமைத்துவம், தொடர்பான உயர் டிப்ளோமா பாடநெறிகள் இவற்றிற்கும் மேலாக இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் தொழில் நிர்வாகமாணி பாடநெறி, தொழில் நிர்வாக டிப்ளோமா பாடநெறி போன்ற வாய்ப்புக்கள் காணப்படுகின்றன.

மறுபுறத்தில் இலங்கைப் பட்டயக் கணக்காளர் பாடநெறிகளுடன், முகாமைத்துவப் பட்டயக் கணக்காளர் பாடநெறி, இங்கிலாந்து பட்டயக் கணக்காளர் பாடநெறி போன்ற வாண்மைக் கல்விநெறிகளும் நிறையவே காணப்படுகின்றன.

☐ யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தொலைக் கல்வி – வெளிவாரி பட்டப்படிப்புக்கள் பரீட்சைகள் அலகின் இணைப்பாளராக கடந்த 7 ஆண்டுகளாக மிகச்சிறப்பாக பணியாற்றி வருகின்றீர்கள். இக்கல்வி அலகின் முக்கியத்துவம், குறிப்பாக வணிக மாணவருக்கு அதனால் எத்தகைய நலன்கள் கிடைக்கின்றன எனக் கூறுவீர்களா?

வெளிவாரி பட்டப்படிப்பானது எங்களின் பல்கலைக்கழக அனுமதிக்கான போட்டி நிலைமையில் மிகச் சிறந்த ஒரு வரப்பிரசாதமாகும். ஒவ்வொரு ஆண்டும் தகுதி பெறும் மாணவர்களில் ஐந்து வீதமானவர்களே உள்வாரி அனுமதியைப் பெற்றுக்கொள்கின்றார்கள். ஏனையவர்களின் நிலை கேள்விக்குறியாகும். வெளிவாரிப்பட்டப் படிப்புக்கள் பாதிக்கப்படும் இந்த மாணவர்களுக்கு பெரிய வாய்ப்பானது.

இதற்கும் அப்பால் எங்களுடைய சூழலில் நேர்ந்த தொடர் இடப்பெயர்வுகள், போர் போன்ற அவலங்களினால் தங்கள் கல்வி வாய்ப்பினை தொலைத்த மாணவர்களுக்கும் கற்றலுக்கான மீள்வாய்ப்பு தொலைக்கல்வி மூலம் திறக்கப்படுகின்றது.

வணிக பாடங்கள் மூன்றையும் உயர் பரீட்சையில் கற்றுத்தேறியும் பல்கலைக் கழகங்களில் அனுமதியைத் தவறவிட்டவர்கள் எமது வெளிவாரி அலகில் தம்மை இணைத்துக் கொள்வதன் மூலம் உலக கல்விப்புலங்களில் நீண்ட காலமாக கணிப்பினைப் பெறுகின்ற நான்கு ஆண்டுகால வணிகமாணிப் பட்டப்படிப்புக்களை பூர்த்தி செய்துகொள்ள முடியும். அத்துடன் மூன்றாண்டுக் கற்கைநெறியான தொழில் முகாமைத்துவ பாடநெறியினை இணையவழி மூலமாகக் பூர்த்தி செய்துகொள்ள முடியும். வளர்ச்சிபெற்றுவரும் தொழில்நுட்ப விரிவாக்கத்தின் பலனாக இரண்டாவதாக குறிப்பிட்ட இணையவழிக் கல்வி மிகவும் பிரபல மாகியுள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் இலங்கைப் பல்கலைக்கழகங்களில் தொலைக்கல்வி மேம்பாட்டுக்கென வகுக்கப்பட்ட இந்தத் திட்டத்தினை எமது பல்கலைக்கழகமும் பேராதனைப் பல்கலைக்கழகமும் மட்டுமே பயன்படுத்திக் கொண்டன என்பதை இங்கு குறிப்பிட்டேயாகவேண்டும்.பல்வேறு தொழில் துறைகளில் உள்ளவர்கள் தங்கள் தொழில் வாண்மை விருத்திக்கும் தொழில் சார்ந்த உயர்வுகளுக்குமென இப்பட்டப் படிப்புக்களை நாடி நிற்கின்றார்கள்.

☐ தற்பொழுது வெளிவாரி பரீட்சைகள் தொடர்பாகப் பல சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அறிகின்றோம். அவை பற்றிக் கூறுவீர்களா?

வெளிவாரி பட்டப்படிப்புக்களின் தரம், கலைத்திட்டம், பரீட்சை முறைகள் என்பன மீளமைக்கப்பட்டு வருகின்றன. 21ஆம் நூற்றாண்டுக்கான உயர்கல்வி என்ற இலக்குடன் இதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டு அமுலாக்கப்படுகின்றன. உலக வங்கியின் நிதியுதவியுடன் பலவிரிவாக்கங்கள் ஏற்கனவே செய்யப்பட்டுள்ளன. வெளிவாரி மாணவர்களுக்கான கணினி ஆய்வுகூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றினைவிட மாணவர்களுக்கான கைநூல்கள், பாடத்துறை சார்ந்த E-Books எனப்படும் இலத்திரனியல் நூல்களை உருவாக்கும் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. வெகு விரைவில் புதிய தொகுதி மாணவர்களை சேர்ப்பதற்கான அறிவிப்புக்களை எதிர்பார்க்கலாம்.

☐ **தொழிற்றுறை ஆலோசகராக எங்கள் புலத்தில் தடம் பதித்துள்ளீர்கள். போரின் கொடு முகத்தில் நலிந்து போன மக்களிடையே பல வலுவூட்டல் களங்களில் உங்கள் சிறப்பான பணி பற்றி அறிந்திருக்கின்றோம். இந்த ஈடுபாடு எப்படி ஏற்பட்டது?**

வணிகக்கல்வியை சமூக அரசியல் வெளிக்கு அழைத்துச் சென்ற கிளை விரிவாக்கமாக முயற்சியாண்மையைக் குறிப்பிடலாம். தன்நம்பிக்கையும் சுயமுன்னேற்றமும் அடிப்படைகளாக சிறந்து விளங்கிய எங்களுடைய சமூக அமைப்பானது காலனித்துவத்தின் வருகையுடன் வெள்ளைக் கொலர் உத்தியோகங்களையே நாடி நிற்கும் அவல நிலைக்கு எம்மை இட்டுச் சென்றது. எமக்கு கிடைத்த கல்வி அமைப்பும் பிள்ளைகளின் ஆக்கத்திறன், புதியது புனையும் ஆற்றல்களுக்கான வாய்ப்பினைத் தரவில்லை. பரீட்சைமையக் கல்வியில் பள்ளிக்கூடமும், ரியூசனுமாக பாலர் வகுப்பிலேயே தொடங்கிவிடும் ஓட்டப்போட்டி உயர்தர வகுப்பில் அதிவேக மாகவே தொடர்கின்ற நிலைமையினை அனுபவப்பாடமாகவே நீங்கள் உணர்ந்திருப்பீர்கள்.

எங்களைப் பொறுத்தவரையில் நாட்டில் நடந்த நெருக்கடியான சூழலினாலே வாழ்வு பற்றிய நம்பிக்கைகளையும் வாழ்வாதார வசதிகளையும் இழந்துபோன மக்களின் எண் ணிக்கை அதிகரித்துள்ளது. கூடவே நிவாரணங்களில் தங்கி வாழும் மனோபாவமும் ஏற்பட்டுள்ளது. இந் நிலையில் மக்களுக்கு நம்பிக்கை தந்து அவர்களை வலுவூட்டும் சமுதாய முயற்சியாண்மை சார்ந்த செயற்பாடுகள் அவசியமாகும். இந்தத் தேவையின் அவசியத்தை உணர்ந்து GTZ (German Technical co-operation) உருவாக்கிய CEFE என்ற அமைப்பு வழங்கிய பயிற்சியாளர்களுக்கான நிபுணத்துவ பயிற்சி ஒன்றிற்காக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்னைத் தெரிவுசெய்து அரிதான ஒரு வாய்ப்பைத்தந்தது. இந்த பயிற்சி எனக்குள் ஏற்படுத்திய ஆழ்ந்த ஆர்வத்தின் விளைவாக சமுதாய மேம்பாட்டுக்கான நிகழ்ச்சித் திட்டங்கள் பலவற்றில் பங்குபற்றவும் பின்நாளில் நானே பல நிகழ்ச்சித்திட்டங்களை வகுத்து நடத்தவும் வழிசமைத்தது. 90களில் ஆரம்பித்த இந்தப் பணி சிறிது காலம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் CEFE அலகு என்ற பெயரில் இயங்கியது. இப்பொழுது CEFE- Center for Excellence என்ற நிறுவன வடிவத்தைப் பெற்றுள்ளது. இற்றை வரை யாழ்ப்பாண மாவட்டத்தில் மட்டும் பல்லாயிரக்கணக்கான அடிமட்ட மக்களுக்கு நுண்தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தும் பயிற்சி நெறிகளை வழங்க முடிந்துள்ளது. அதேவேளை சிறியளவிலான நூற்றுக்கணக்கான தொழில் முயற்சிகள் எமது பயிற்சியின் பேறாக ஆரம்பிக்கப்பட்டுள்ளமையையும் இங்கு குறிப்பிடாமல் இருக்க முடியாது. இப்பொழுது வன்னி பெருநிலப்பரப்பில் எங்கள் பணிகளை விரிவாக்கியுள்ளோம்.

☐ **நுண்நிலை முயற்சியாண்மைக்கு அப்பால் எங்கள் சமூகத்தில் நடுத்தர நிலையிலான முயற்சியாண்மை செயற்பாடுகள் இன்று ஏற்படுத்தியுள்ள சவாலான நிலைமைகள் பற்றி குறிப்பிடுவீர்களா?**

இன்றைய சூழலில் வணிகத்துறை சார்ந்த மாணவர்களுக்கு மட்டுமன்றி எங்கள் வணிக சமூகத்தினருக்கும் முக்கியமான ஒரு கேள்வி இது. திட்டமிடல் ஏதுமின்றி, முன் அனுபவ பயிற்சியின்றி பாரிய முதலீடுகளை செய்த வணிகர்கள் பலரும் இன்று தம் முதலீட்டுக் கான வருமானமின்றி அந்தரிப்பதைக் காணலாம். பல சந்தர்ப்பங்களில் ஒரே விதமான தொழில்களுக்குள் முதலிட்டோ அன்றி பாரிய கட்டடங்கள், வாகனங்கள் போன்றவற்றுக்குள்

பணத்தினை முடக்கியோ இன்று பாரிய நெருக்கடிகளை இவர்கள் சந்திக்கின்றார்கள். இன்று விரிந்துள்ள திறந்த வியாபார போட்டிச் சந்தையில் இவர்கள் மூடிய கட்டடங்களுக்குள் முடங்கி யிருக்க வெளியிலிருந்து வரும் பண்டங்கள் வீதியிலே அமோகமாக விற்பனையாகும் நிலை யினை எடுத்துக்காட்டாக இங்கு குறிப்பிடலாம்.

புதிய சூழலின் சவால்களை எதிர்கொள்ளக் கூடிய திறன்களை வளர்த்துக் கொள்ளாத வரை இவர்களின் மேம்பாடு என்பது கேள்விக்குறியே. போருக்குப் பிந்திய புனர்வாழ்வு என்ற நிலையில் புதிது புதிதாக இங்கு திறக்கப்பட்ட நிதி நிறுவனங்கள் - லீசிங் கம்பனிகள் நிறைந்த ஆசைகாட்டி இவர்களை பெரும் கடனாளிகள் ஆக்கின. திட்டமில்லாத முயற்சியாண்மையுடன் திட்டமில்லாத நுகர்வுப் பண்பாடும் சேர்த்துக்கொள்ள இன்று தங்கள் உயிர்களையே மாய்க்கு மளவிற்கு இவர்களின் நிலைமை சென்றுள்ளமை கவலைக்குரியதே. கிட்டத்தட்ட நாற்பதுக்கும் மேற்பட்டோர் தற்கொலை செய்து கொண்டதாக அண்மைய புள்ளிவிபரம் ஒன்று கூறும். இந்த நிலையிலிருந்து எங்கள் வணிகர் குழாத்தினை, முயற்சியாளர்களை மீட்க வேண்டியது ஒரு பெரும் சமூகப் பொறுப்பாகும். இத்துறை சார்ந்தவர்களும் சமூக மேம்பாட்டில் உள்ளார்ந்த அக்கறை கொண்டோரும் இதற்கான விழிப்புணர்வுச் செயற்பாடுகளை தாமதமின்றி தொடங்க வேண்டும். மாணவர்களாகிய நீங்கள் உங்கள் குடும்பம், சுற்றம் சார்ந்து இந்த விடயம் தொடர்பான விழிப்புணர்வுக்கு பங்களிக்க முடியும்.

☐ **வணிகத்துறை மாணவர்களாகிய எங்களுக்காக நீங்கள் கூறும் அறிவுரை என்ன?**

பல்கலைக்கழகக் கல்வி என்ற உயர்ந்த இலக்குடன் மிகுந்த கரிசனையோடு உங்கள் பாடங்களை ஆழக் கற்றுக்கொள்ளுங்கள். கூடவே நவீன உலகின் இன்றியமையாத திறன் களான ஆங்கிலம், கணினி தொழில் நுட்பம் ஆகியவற்றிலும் வல்லவர்களாக வளருங்கள். அனைத்துக்கும் அப்பால் வெறும் புத்தகப் பூச்சிகளாக இருந்துவிடாமல் உங்கள் வணிக பாடம் வேண்டிநிற்கும் முயற்சியாண்மை கொண்ட பிரஜைகளாக தன்நம்பிக்கையுடனும் ஆக்கத்திறனுடனும் ஆற்றல்களை வளர்த்துக்கொள்ளுங்கள்.

நீங்கள் பயிலும் வணிகக்கல்வி இத்தகைய அடைவுகளுக்கான மிகச்சிறந்த களமாகும். எதிர்காலத்தில் எங்கள் அறிவுப் புலத்திலும் வணிக முகாமைத்துவ செயற்பாடுகளிலும் சமுதாய முயற்சியாண்மை செயற்பாடுகளிலும் உங்கள் பங்கும் பணியும் சிறந்திட வாழ்த்துகின்றேன்.



அள்ள சத்திரம் ஆயிரம் வைத்தல், ஆலயம் பதினாயிரம் நாட்டல்,
பின்னருள்ள தருமங்கள் யாவும், பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல்,
அன்னமாவிலும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்
பாரதியார்...

☐ கணக்கீடு

பொது வரையறுக்கப்பட்ட கம்பனிகளிற்கான நிதிக்கூற்றுக்களினை பிரசுரித்தல்.

பேராசிரியர்.தி.வேல்நம்பி,
பீடாதிபதி,
முகாமைத்துவக்கற்கைகள் வணிகபீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

1. அறிமுகம்

இந்த ஆவணம் இலங்கைக் கணக்கீட்டு நியமம்-1 (நிதிக்கூற்றுக்களினைப் பிரசுரித்தல்)இல் கூறப்பட்ட அறிக்கையிடலிற்கான வேண்டுகோள்கள் பற்றி ஆராய்கிறது. இது பொது வரையறுக்கப்பட்ட கம்பனிகளின் பொதுநோக்க நிதிக்கூற்றுக்களினை தயாரிப்பதற்கான அடிப்படைகளை குறித்துக்காட்டுகின்றது. பொது நோக்கத்திற்கான நிதிக்கூற்றுகள் என்பது தேவைப்படும் தகவலை தேவையான தருணத்தில் பெறுவதற்கு அறிக்கைகளை தயாரிப் பதற்கான வேண்டுகோளை விடுக்கக்கூடிய நிலையில் இல்லாத பயனாளிகளிற்கான தகவல் தேவைகளை நிறைவு செய்வதற்காக தயாரிக்கப்படும் நிதிஅறிக்கைகளாகும். இலங்கை கணக்கீட்டு நியமம்-1 நிதி நிலைமைக்கூற்று, வருமானக் கூற்று, உரிமையசைவுக் கூற்று, மற்றும் அது தொடர்பான குறிப்புக்கள் போன்றவற்றை பிரசுரிப்பதற்கான அடிப்படைகளை குறித்துரைக்கின்றது. மேலும் இது நிதிக்கூற்றுகளின் அமைப்பு மற்றும் அவற்றின் உள்ளடக் கம் தொடர்பான வழிமுறைகளையும் வழங்குகின்றது. காசுப்பாய்ச்சல் கூற்றானது இலங்கைக் கணக்கீட்டு நியமம்-7 (காசுப் பாய்ச்சல் கூற்று) இல் கூறப்பட்ட வழிமுறைகளைப் பின்பற்றித் தயாரிக்கப்பட வேண்டும்.

2. நிதிக்கூற்றுக்களின் நோக்கம்.

நிதிக்கூற்றுக்களின் நோக்கம் ஒரு நிறுவனத்தினுடைய நிதிநிலைமை, நிதிப்பெறு பேறுகள், மற்றும் காசுப்பாய்ச்சல் தொடர்பான தகவல்களை கணக்கீட்டுத்தகவல்களை பயன் படுத்துவோருக்கு பொருளாதார தீர்மானங்களை மேற்கொள்வதற்கு வழங்குதல் ஆகும். நிதிக் கூற்றுக்கள் வழங்கப்பட்ட சொத்துக்களில் முகாமைத்துவத்தினுடைய ஆர்வத்தைக் காட்டு கின்றது. இலக்குகளை அடைவதற்கு நிதிக்கூற்றுக்கள் நிறுவனத்தினுடைய சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம், செலவுகள், உரிமையாண்மை, மற்றும் காசுப்பாய்ச்சல் தொடர் பான தகவல்களை வழங்குகிறது.

3. பூரணமான நிதிக்கூற்றுக்களின் தொகுதி

ஒரு பூரணமான நிதிக்கூற்றுக்களின் தொகுதி அங்கங்களாவன.

- நிதி நிலைமைக்கூற்று
- வருமானக்கூற்று
- உரிமையசைவுக் கூற்று
- காசுப்பாய்ச்சல் கூற்று
- குறிப்புக்கள்

4. நிதி நிலைமைக்கூற்று

நிதி நிலைமைக்கூற்றானது குறித்த ஒரு தினத்தில் ஒரு நிறுவனத்தினுடைய நிதிநிலைமையைக் காட்டுவதற்காகத் தயாரிக்கப்படுகின்றது. நிதிநிலைமை என்பது குறித்த ஒரு தினத்தில் உரிமையாளரினாலும் கடன்கொடுத்தோராலும் உரிமை கோரப்படும் நிறுவனத்தினுடைய சொத்துக்கள் அல்லது வளங்களைக் காட்டுகின்றது. மறுவகையாகக் கூறுமிடத்து நிதிநிலைமை என்பது குறித்த ஒரு தினத்தில் சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் உரிமையாண்மை என்பவற்றிற்கான தொடர்பைக்காட்டுகின்றது.

4.1 நிதி நிலைமைக்கூற்றில் வெளிப்படுத்தப்பட வேண்டிய தகவல்கள்.

இலங்கைக் கணக்கீட்டு நியமம்-1 இற்கு அமைவாக நிதி நிலைமைக்கூற்றில் ஆகக் குறைந்தது கீழ் காணப்படும் கூறுகள் வெளிப்படுத்தப்பட வேண்டும்.

- ஆதனம் பொறி மற்றும் உபகரணம்.
- அருவச்சொத்துக்கள்.
- இருப்புக்கள்.
- வியாபார மற்றும் ஏனைய வருமதிகள்.
- காசும் காசிற்கு சமனானவையும்.
- வியாபார மற்றும் ஏனைய செல்மதிகள்.
- ஏற்பாடுகள்.
- நடைமுறை வரி பொறுப்புக்களும் சொத்துக்களும்
- கூறப்பட்ட மூலதனமும் ஒதுக்கங்களும்.

குறிப்பு: மேலே க.பொ.த உயர்தர மாணவர்களிற்கு உகந்தவை மட்டும் பட்டியல்படுத்தப் பட்டிருக்கின்றன.

நிதி நிலைமைக்கூற்றில் உள்ள கூறுகள் முக்கியமானவை. அவற்றிற்கான மேலதிக வெளிப்படுத்தல்கள் குறிப்புக்களில் வழங்கப்பட வேண்டும். உதாரணமாக ஆதனம் பொறி மற்றும் உபகரணம் அவற்றின் சொத்து வகைக்கு அமைவாக வகைப்படுத்தப்பட வேண்டும். (காணி, கட்டடம், மற்றும் மோட்டார் வாகனங்கள்) இருப்புக்கள், மூலப்பொருட்கள், தறை

வேலை மற்றும் முடிவுப்பொருட்கள் ஆகவும் வகைப்படுத்தப்படவேண்டும். வியாபார மற்றும் ஏனைய வருமதிகள் வியாபாரக் கடன்பட்டோர், முற்பணச் செலுத்துகைகள், மற்றும் ஏனைய வருமதிகள் ஆக வகைப்படுத்தப்படவேண்டும். அதேபோல் வியாபார மற்றும் ஏனைய சென்மதிகளும் காசும் காசிற்குச் சமனானவையும் பொருத்தமான உபவகைகளாக வகைப்படுத்தப்பட வேண்டும்.

4.2. நடைமுறை மற்றும் நடைமுறையல்லா வகைப்படுத்தல்கள்.

நிதி நிலைமைக்கூற்றில் சொத்துக்கள் மேலும் நடைமுறை மற்றும் நடைமுறையல்லா சொத்துக்களாக வகைப்படுத்தப்படவேண்டியிருக்கின்றன. அதே போல், பொறுப்புக்களும் நடைமுறை மற்றும் நடைமுறையல்லா பொறுப்புக்களாக வகைப்படுத்தப்படுகின்றன. நடைமுறையில், நிறுவனங்கள் பொதுவாக நடைமுறை மற்றும் நடைமுறையல்லா சொத்துக்களையும், நடைமுறை மற்றும் நடைமுறையல்லா பொறுப்புக்களையும் வெளிப்படுத்துகின்றன. இருந்தாலும் திரவத்தன்மையை அடிப்படையாக கொண்ட வெளிப்படுத்தல் சிறந்த தகவல்களை (உண்மைத்தன்மையும் மிக பொருத்தமானவையுமாக) வெளிப் படுத்துகின்றன. நிறுவனங்கள் சொத்துக்களையும் பொறுப்புக்களையும் திரவத்தன்மையை ஒழுங்கில் வெளிப்படுத்துத்துவதற்கு வேண்டப்படுகின்றன.

நடைமுறை மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்கள்.

ஒரு சொத்து கீழ்க் காணும் பண்புகளைக் கொண்டுள்ளபொழுது அவை நடைமுறைச் சொத்துக்களாக வகைப்படுத்தப்படும்:

- சாதாரண இயக்கச் சுழற்சியில் சொத்தாகத் தேறுவதற்கு அல்லது விற்பனை செய்வதற்கு அல்லது நுகரப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுபவை.
- வியாபார நோக்கத்திற்காகப் பேணப்படும் சொத்துக்கள்
- அறிக்கையிடல் காலத்திற்குப் பின் 12 மாதங்களிற்குள் தேற எதிர்பார்க்கப்படும் சொத்துக்கள் அல்லது அறிக்கையிடல் காலத்திற்கு பின் ஆகக்குறைந்தது 12 மாதங்களிற்குள் பரிமாறப்படுவதற்கு அல்லது பொறுப்பொன்றைத் தீர்க்கப் பயன்படுத்தப்படுவதற்கு மட்டுப்படுத்தப்பட்ட சொத்தல்லாத காசும் காசிற்கு சமனான சொத்துக்களும்.

இயக்கச் சுழற்சி என்பது பொருட்கள் அல்லது சேவைகளின் கொள்வனவுக்கும் வருமதி கணக்குகளில் இருந்தான காசு தேறுகைக்கும் இடையிலான காலப்பகுதியாகும். உற்பத்தி நிறுவனத்திற்கான இயக்கச் சுழற்சி கீழ்வருமாறு வரையப்பட முடியும்.



ஏனைய அனைத்துச்சொத்துக்களும் நடைமுறையல்லாச் சொத்துக்களாக வகைப் படுத்தப்படுகின்றன.

நடைமுறை மற்றும் நடைமுறையல்லாப் பொறுப்புக்கள்.

ஒரு பொறுப்பு கீழ்க் காணும் பண்புகளைக் கொண்டுள்ள பொழுது அவை நடைமுறைப் பொறுப்புக்களாக வகைப்படுத்தப்படும்:

- சாதாரண இயக்கச் சுழற்சியில் தீர்க்க எதிர்பார்க்கப்படும் பொறுப்பு.
- வியாபார நோக்கத்திற்காகப் பேணப்படும் பொறுப்புக்கள்
- அறிக்கையிடல் காலத்திற்குப் பின் 12 மாதங்களிற்குள் தீர்க்கப்படவேண்டிய பொறுப்பு அல்லது
- நிறுவனம் அறிக்கையிடல் காலத்திற்குப் பின் ஆகக்குறைந்தது 12 மாதங்களிற்குள் தீர்ப்பனவுக் கடப்பாட்டைப் பிற்போட முடியாத பொறுப்பு.

ஏனைய அனைத்துப்பொறுப்புக்கள், நடைமுறையல்லா பொறுப்புக்களாக வகைப் படுத்தப்படுகின்றன.

5. முழுமையான வருமானக்கூற்று.

முழுமையான வருமானக்கூற்று என்பதனை விபரிப்பதன் முன் வருமானத்தின் உள்ளடக்கங்களைப் புரிந்து கொள்வது அவசியம் ஆகும். வருமானம் கீழ்வரும் இரண்டு உள்ளடக்கங்களைக் கொண்டவையாகும்.



வருமானம் என்பது நிறுவனத்தின் பிரதானமாக செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்ததான வருமானத்துடன் தொடர்புடையவையாகும். வியாபார நிறுவனத்தில் பொருட்களின் விற்பனையிலிருந்தான விற்பனை வருமானம் வருமானம் ஆகக்கொள்ளப்படும். அதற்கு மேலதிகமாக ஏனைய வருமானங்களும் ஆதாயங்களும் வருமானத்தில் உள்ளடக்கப்படு கின்றன.. உதாரணமாக வியாபார நிறுவனத்தில் நிலையான வைப்பின் மீதான வட்டி ஏனைய வருமானம் ஆக கருதப்படும். ஆதனம் பொறி மற்றும் உபகரணம் விற்பனையின் மீதான இலாபம் ஒரு ஆதாயம் ஆகும். அது வருமானத்தில் உள்ளடக்கப்படுகின்றது. அதே போல் ஆதனம் பொறி மற்றும் உபகரணம் விற்பனையின் மீதான நட்டம் செலவுகளில் உள்ளடக்கப்படுகின்றது.

5.1 மொத்த பரந்த வருமானம்.

மொத்த பரந்த வருமானம் என்பது குறிப்பிட்ட காலப்பகுதியில் உரிமையாளர்களுடனான நடவடிக்கைகள் தவிர ஏனைய நடவடிக்கைகள் நிகழ்வுகளிலிருந்தான பெறுபேறுகளினால் உரிமையாண்மையில் ஏற்பட்ட மாற்றமாகும்.

வரைவிலக்கணத்தின் அமைவாக ஆதாயங்கள் மற்றும் நட்டங்கள் உள்ளடங்கலாக எல்லா வருமானங்களும் செலவுகளும் பரந்த வருமானக்கூற்றில் உள்ளடக்கப்படுகிறது. மொத்த பரந்த வருமானம் பின்வரும் இரண்டு கூறுகளை கொண்டது.



(a). வருடத்திற்கான இலாப அல்லது நட்டம்

வருமான கூற்றில் காட்டப்படுகின்ற செயற்பாட்டு பெறுபேறு வருடத்திற்கான இலாப நட்டம்ஆகும்.

(b). வருடத்திற்கான ஏனைய பரந்த வருமானம்

ஏனைய பரந்த வருமானம் வருமான கூற்றில் இனங்காணப்படாத ஆதாயங்கள் மற்றும் நட்டங்களை உள்ளடக்குகின்றது. உதாரணமாக இலங்கை கணக்கீட்டு நியமம்-1 இற்கு அமைவாக ஆதனம் பொறி மற்றும் உபகரணம் மறுமதிப்பீட்டு மிகை வருமானத்தின் பகுதியாக உள்ளடக்கப்படவில்லை. பதிலாக அது உரிமையாண்மையில் ஒரு நேரடியான அதிகரிப்பாக கொள்ளப்படுகின்றது. மறுமதிப்பீட்டு மிகையின் பெறுபேறாக உரிமையாண்மையில் அதிகரிப்பு ஏற்பட்டாலும் அது உரிமையாளர்களுடனான நடவடிக்கையல்ல. அதனால் மறுமதிப்பீட்டு மிகை ஏனைய பரந்த வருமானமாக கொள்ளப்படும். க.பொ.த உயர் தரத்தில் மறுமதிப்பீட்டு மிகை தொடர்பான சீராக்கலை கருத்தில் கொள்ளல் போதுமானது.

இலங்கை கணக்கீட்டு நியமம்-1 வருடத்தில் இனங்காணப்பட்ட வருமானங்களை செலவுகளை இரண்டு வழிகளை கூறுகின்றது. அவையாவன:

(i) பரந்த வருமான கூற்றின் தனிக்கூற்று.

அல்லது

(ii) இரண்டு கூற்றுக்கள்

தனிகூற்று தயாரிக்கப்படுகின்றபொழுது, மொத்த பரந்த வருமானம் வருடத்திற்கான இலாப நட்டத்துடன் ஏனைய பரந்த வருமானத்தின் ஒவ்வொரு வகையை சேர்ப்பதன் மூலம் காட்டப்பட முடியும். இங்கே, பரந்த வருமான கூற்று கீழ்வருமாறு தயாரிக்கப்படுகின்றது.

வருமானம்	XX	
விற்றசரக்கின் கிரயம்	(XX)	
மொத்த இலாபம்	XX	
ஏனைய வருமானம்	XX	
விநியோகச் செலவுகள்	XX	
நிர்வாகச் செலவுகள்	XX	
ஏனைய செலவுகள்	XX	
நிதிச் செலவுகள்	XX	(XX)
வரிக்கு முன் இலாபம்		XX
வருமான வரி		(XX)
வருடத்திற்கான இலாபம்		XX
ஏனைய பரந்த வருமானம்		
மறுமதிப்பீட்டு மிகை		XX
மொத்த பரந்த வருமானம்		XX

இரண்டு கூற்றுக்கள் தயாரிக்கப்படுகின்ற பொழுது வருடத்திற்கான இலாப நட்டத்தைக் காட்டுவதற்காக வருமான கூற்று தயாரிக்கப்படுகின்றது. மொத்த பரந்த வருமானக்

கூற்று வருடத்திற்கான இலாப நட்டத்துடன் ஆரம்பித்து ஏனைய பரந்த வருமானத்தின் உள்ளடக்கங்களை காட்டுகின்ற வகையில் தனியாக தயாரிக்கப்படுகின்றது. அதனால் மொத்த பரந்த வருமானம் பெறப்படுகின்றது.

குறிப்பு: க.பொ.த உயர் தரத்தில் தனிக்கூற்று கலந்துரையாடுதல் போதுமானது.

5.2 பரந்த வருமான கூற்றில் வெளிப்படுத்தப்பட வேண்டிய தகவல்கள்.

இலங்கைக் கணக்கீட்டு நியமம்-1 இற்கு அமைவாக பரந்த வருமான கூற்றில் ஆக குறைந்தது கீழ் காணப்படும் கூறுகள் வெளிப்படுத்தப்பட வேண்டும்:

- வருமானம்
- நிதிச் செலவுகள்
- அறிக்கையிடல் வருடத்திற்கான இலாபம் அல்லது நட்டம்
- பரந்த வருமானத்தின் ஒவ்வொரு வகையான உள்ளடக்கங்கள் (உ-ம் மறு மதிப்பீட்டு மிகை)
- மொத்தப் பரந்த வருமானம்

வருமானம் அல்லது செலவு வகைகள் முக்கியமானவையாக இருக்கின்றபொழுது அவற்றின் தன்மை, தொகை ஆகியன குறிப்புகளில் தனியாக வெளிப்படுத்தப்படவேண்டும். உதாரணமாக தேறக்கூடிய பெறுமதிக்கான இருப்பு பதிவுழிப்புக்களின் தன்மையும் தொகையும் ஆதனம், பொறி மற்றும் உபகரணம் விற்பனையின் மீதான இலாபம் அல்லது நட்டம் பரந்த வருமான கூற்றில் அல்லது அதனுடைய குறிப்புகளில் தனியாக வெளிப்படுத்தப்பட வேண்டும்.

5.3 செலவுகளின் வகைப்படுத்தல்கள்

செலவுகள் அவற்றின் தன்மையின் அடிப்படையிலோ அவற்றின் தொழிற்பாட்டின் அடிப்படையிலோ வகைப்படுத்தப்பட்டு வெளிப்படுத்தப்பட முடியும். தன்மையின் அடிப் படையிலான செலவுகளின் வகைப்படுத்தல்களிற்கு உதாரணம் கீழ் வருமாறு:

வருமானம்	X
ஏனைய வருமானம்	X
குறைவேலை மற்றும் முடிவுப்பொருட்களிலான மாற்றம்	X
பயன்படுத்தப்பட்ட மூலப்பொருட்களும் நுகர்வுப்பொருட்களும்	X
ஊழியச் செலவுகள்	X
பெறுமானத்தேய்வும் பதிவழிப்புச்செலவுகளும்	X
ஏனைய செலவுகள்	X
வரிக்கு முன் இலாபம்	X

செலவுகளின் வகைப்படுத்தலில் இரண்டாவது வடிவம் செலவுகளினுடைய தொழிற்பாடு அல்லது விற்றசரக்கின் கிரயம் ஆகும். அவ் வடிவம் செலவுகளை தொழிற்பாட்டின் அடிப் படையில் வகைப்படுத்துகின்றது. தொழிற்பாட்டின் அடிப்படையிலான செலவுகளின் வகைப் படுத்தல்களிற்கு உதாரணம் கீழ் வருமாறு:

வருமானம்	X
விற்றசரக்கின் கிரயம்	(X)
மொத்த இலாபம்	X
ஏனைய வருமானம்	X
விநியோகச் செலவுகள்	(X)
நிர்வாகச் செலவுகள்	(X)
ஏனைய செலவுகள்	(X)
நிதிச் செலவுகள்	(X)
வரிக்கு முன் இலாபம்	X

குறிப்பு: க.பொ.த உயர் தரத்தில் செலவுகளின் தொழிற்பாட்டின் அடிப்படையிலான வகைப் படுத்தல் பற்றி கலந்துரையாடுதல் போதுமானது.

6. உரிமையசைவுக் கூற்று

- உரிமையசைவுக் கூற்று குறித்த காலப்பகுதியில் உரிமையாண்மையில் ஏற்பட்ட மாற்றத்தை காட்டுகின்றது. உரிமையாண்மை மூலதனத்தையும் ஒதுக்கத்தையும் உள்ளடக்குகிறது. மூலதனத்தினதும் ஒதுக்கத்தினதும் ஒவ்வொரு வகையும் இக் கூற்றில் தனித் தலையங்கத்தின் கீழ் காட்டப்படுகின்றது. இக் கூற்றில் மறுமதிப்பீட்டு மிகை மற்றும் வருடத்திற்கான இலாபம் அல்லது நட்டம் தனித்தனியான வகையாக காட்டப்படுவதற்கு பதிலாக இரண்டையும் ஒன்றாக மொத்த பரந்த வருமானத்தின் கீழ் காட்டப்படவேண்டும். இருந்தாலும் மறுமதிப்பீட்டு மிகை மறுமதிப்பீட்டு ஒதுக்கம் என்ற தலையங்கத்தின் கீழும் வருடத்திற்கான இலாபம் அல்லது நட்டம் நிறுத்தி வைத்த இலாபம் என்ற தலையங்கத்தின் கீழும் காட்டப்படவேண்டும். இணைப்பு நிதி நிலைமைக்கூற்று, வருமானக்கூற்று, உரிமையசைவுக் கூற்று மற்றும் குறிப்புக்கள் உதாரணத்தைக்காட்டுகின்றது. இணைப்பானது மேற் கூறப்பட்ட கூற்றுக்களின் வடிவங்களை வலியுறுத்துகின்றது. க.பொ.த உயர்தர கணக்கீட்டு பாடத்திட்ட நோக்கெல்லைக்கமைவாக வரையறுக்கப்பட்டிருக்கிறது.

7. காசு பாய்ச்சல் கூற்று

காசுப்பாய்ச்சல் கூற்று குறித்த காலப்பகுதியில் ஏற்பட்ட காசும் காசிற்கு சமனானவற்றினதும் உட்பாய்ச்சலையும் வெளிப்பாய்ச்சலையும் செயற்பாட்டு, முதலீட்டு மற்றும் நிதியீட்ட நடவடிக் கைகள் என வகைப்படுத்தி வெளிப்படுத்துகின்றது. மேலும் காசு பாய்ச்சல் கூற்று நிறுவனத் தினுடைய காசு உருவாக்கக்கூடிய திறன் மற்றும் நிறுவனத்தினுடைய காசு பயன்படுத்தப்படு கின்ற வழிகள் பற்றி பயனாளிகள் அறிவதற்கான தேவையான பயன்மிக்க தகவல்களை வழங்கு கின்றது. இலங்கை கணக்கீட்டு நியமம் 7- காசு பாய்ச்சல் கூற்று, காசு பாய்ச்சல்கூற்றை வெளி படுத்துவதற்கான வழிமுறைகளை குறித்துரைக்கின்றது.

8. குறிப்புக்கள்

குறிப்புக்கள் நிதிக்கூற்றுக்களின் இன்றியமையாத பாகமாக விளங்குகின்றது. ஏனெனில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படுகின்ற விடயங்கள் பற்றி விபரமான தகவல்களை வழங்கு கின்றது. மேலும் குறிப்புக்கள் நிதிக்கூற்றுக்களை புரிந்து கொள்வதற்கு பொருத்தமான நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படைகள் பயன்படுத்தப்பட்ட விசேடமான மற்றும் ஏனைய கணக்கீட்டு கொள்கைகள் வெளிப்படுத்துகின்றது.

நிதிக்கூற்றுக்களில் உள்ள முக்கியமான விடயங்களிற்கு மேலதிகமான வெளிப்படுத்தல்கள் வேண்டப்படலாம். நிதி நிலைமைக்கூற்றில் உள்ள கூறுகள் முக்கியமானவையானால் அவற்றின் தன்மை தொகை பற்றிய மேலதிக வெளிப்படுத்தல்கள் குறிப்புக்களில் வழங்கப்பட வேண்டும். குறிப்புக்கள் உதாரணமாக வரிக்கு முன் இலாப கணிப்பு ஆதனம், பொறி மற்றும் உபகரணத்திலான மாற்றங்கள் காட்டும் கூற்று ஆகியவற்றை கொள்ளலாம்.

9. இலங்கை கணக்கீட்டு நியமம்-1 இன் பொதுவான வேண்டுகோள்கள்.

ஒரு நிறுவனம் நிதிக்கூற்றுக்களை தொடர்ந்து இயங்கும் எண்ணக்கருவின் அடிப் படையில் தயாரிக்கின்றது. நிறுவனத்தின் முகாமைத்துவம் நிறுவனத்தின் செயற்பாடுகளை நிறைவுறுத்துதல் அல்லது வியாபாரத்தைக் கைவிடல் அல்லது யதார்த்தமான மாற்று வழி இன்மை என தீர்மானித்தலேயன்றி நிறுவனம் நிதிக்கூற்றுக்களை தொடர்ந்து இயங்கும் எண்ணக்கருவின் அடிப்படையில் தயாரிக்கும்.

நிறுவனம் காசுப்பாய்ச்சல் கூற்றைத் தவிர அதனுடைய நிதிக்கூற்றுக்களை அட்டுறு எண்ணக்கருவின் அடிப்படையிலேயே தயாரிக்க வேண்டும்.

இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் அனுமதித்தலேயன்றி நிறுவனம் சொத்துக் களையும் பொறுப்புக்களையும் அல்லது வருமானங்களையும் செலவுகளையும் ஈடுசெய்ய முடியாது.

நிறுவனம் ஒரு பூரணமான நிதிக்கூற்றுக்களின் தொகுதி ஆகுறைந்தது வருடாந்தம் பிரசுரிக்கும்.

நிறுவனம் அதனுடைய நிதிநிலைமை, நிதிப்பெறுபேறுகள், மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றைத் தெளிவாக வெளிப்படுத்தும். கணக்கீட்டு சட்டகத்தில் கூறப்பட்ட வருமானங் கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் உரிமையாண்மை போன்றவற்றிற் கான வரைவிலக்கணங்கள் அவற்றை இணங்காணக்கூடிய வழிமுறைகளுக்கு அமை வாக நிறுவனத்தின் கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகளினுடைய பாதிப்புக்கள் இனங் காணப்படவேண்டும்.

நிதிக்கூற்றுகள் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு அமைவாக தயாரிக்கப்பட்டிருக் கின்றது என கூற்று ஒன்று குறிப்புகளில் காட்டப்படவேண்டும்.

10. சுருக்கம்

இந்த ஆவணம் பொது வரையறுக்கப்பட்ட கம்பனிகளிற்கான நிதிக்கூற்றுகளினை பிரசுரித்தல் பற்றியதாகும். பொது வரையறுக்கப்பட்ட கம்பனிகளினால் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படவேண்டும். க.பொ.த உயர்தர கணக்கீட்டு பாடத்திட்ட நோக்கெல்லைக்கமைவாக நிதிக்கூற்றுகளின் வடிவங்கள் அவற்றின் உள்ளடக்கங்கள் இலங்கை கணக்கீட்டு நியமம்-1 (நிதிக்கூற்றுகளினை பிரசுரித்தல்) இல் வழிமுறைகளிற்கு அமைவாக கலந்துரையாடப்பட்டது.

உதாரணம் : (மேலதிக பயிற்சிக்காக)

2014.03.31 ல் வரையறுத்த சாருகா கம்பனியின் புத்தகங்களில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட பரீட்சை மீதி வருமாறு.

விபரம்	வரவு	செலவு
ஒன்று ரூபா 20 வீதமான சாதாரண பங்கு மூலதனம்		400000
ஒன்று ரூபா 20 வீதமான முன்னுரிமை பங்கு மூலதனம்		150000
ஆதனம் பொறி மற்றும் உபகரணம்	478000	
விற்பனை		1080000
கணக்காய்வுக் கட்டணம்	2500	
2013.04.01 மீதி இருப்பு	2100	
இயக்குனர் ஊதியம்	14600	
மின்சார கட்டணம்	3250	
2013.04.01 தேய்வு ஏற்பாடு		1500
கட்டடம்		2000
தளபாட உபகரணம்		7200
மோட்டார் வாகனம்		4000
நானாவித வருமானம்	6400	
நிர்வாகச் செலவு		900
2012/2013 வருமானவரி ஏற்பாடு	1000	
2012/2013 செலுத்திய வருமானவரி	3000	
2013/2014 செலுத்திய வருமானவரி	900000	
கொள்வனவு	2800	
விநியோகச் செலவு	100	
வங்கிக்கட்டணம்		50000
பொது ஒதுக்கம்		80000
பங்கு வழங்கல் கணக்கு	162500	
காசும் வங்கி மீதியும்	150000	
முதலீடு	161750	
கடன்பட்டோர்		
நிறுத்தி வைத்த இலாபம்		62400
கடன்கொடுத்தோர்		50000
	1888000	1888000

மேலதிகத் தகவல்கள்

1. 2014.03.31 ல் இருப்பின் கிரயம் ரூபா 3600 ஆகும். இந்த இருப்பின் தேறிய தேறக் கூடிய பெறுமதி ரூபா 3000 ஆகும்.

2. கம்பனி 2014 ஜனவரி மாதத்தில் தரும நிறுவனம் ஒன்றுக்கு கிரயம் ரூபா 80000 பெறுமதியான நிலத்துண்டு அன்பளிப்பு செய்துள்ளது. மீதி நிலம் ரூபா 400000 ஆக மீள்மதிப்புச் செய்துள்ளது. இது தொடர்பான எந்தவிதமான பதிவுகளும் புத்தகங்களில் வைக்கப்படவில்லை.

3. 2013/2014 கணக்காண்டுக்கு வருமானவரி ரூபா 3800 ஆக மதிப்பீடு செய்யப் பட்டது. 2013/2014 கணக்காண்டில் வருமானவரி முழுமையாக செலுத்தி முடிக் கப்பட்டது.

4. 2013.10.01 ல் ரூபா 5000 ற்கு கொள்வனவு செய்யப்பட்ட காரியாலய உபகரண மொன்று கொள்வனவுக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

5. ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களின் கட்டமைப்பு.

காணி	368000
கட்டடம்	30000
தளபாடம்	20000
மோட்டார் வாகனம்	60000

6. இவற்றின் கிரயத்தில் முறையே 5%, 10%, 12%, ஆக நேர்கோட்டு முறையில் தேய்விடப்படல் வேண்டும். (உபகரணத்திற்கு ஆண்டுக்கு 5% நேர்கோட்டு முறையில் தேய்விடப்பட்டது).

7. 2014/03/31 ல் அட்டுறு கணக்காய்வுக் கட்டண ரூபா 500 ஆக இருந்ததுடன் எதிர்வரும் வருடத்திற்கு செலுத்தப்பட்ட மின்கட்டணம் ரூபா 250 ஆக இருந்தது.

8. கம்பனி சாதாரண பங்குகள் 5 உரிமையாளர்களுக்கு ஒரு பங்கு வீதமாக உரிமைப் பங்கு வழங்கியதுடன் இந்தப் பங்குவழங்கல் கொடுக்கல் வாங்கல்களை பங்கு வழங்கல் கணக்கில் பதிவு செய்தது தவிர்ந்து வேறு எப்பதிவும் செய்யப்படவில்லை.

9. இயக்குநர் 2014/03/31 ல் பின்வருவனவற்றைத் தீர்மானித்துள்ளார்

   a. பொது ஒதுக்கத்திற்கு ரூபா 15000 மாற்றுதல்.
   b. சாதாரண பங்கு ஒன்றுக்கு ரூபா 3 இறுதிப் பங்குலாபம் பிரேரித்தல்.
   c. முன்னுரிமை பங்கு ஒன்றுக்கு ரூபா 1 இறுதிப் பங்குலாபமாகக் கொடுப்பனவு செய்தல்.

வேண்டப்படுவது

1. 2014/03/31 ல் முடிவடைந்த வருடத்திற்கு பிரசுரம் செய்வதற்கு பொருத்தமான மாதிரி விரிவானக் வருமானக்கூற்று.

2. 2014/03/31 ல் முடிவடைந்த வருடத்திற்கு உரிமை மாற்றக்கூற்று.

3. 2014/03/31 ல் கம்பனியின் நிதிநிலைமைக்கூற்று.

பெறுமதி கூட்டப்பட்ட வரி

செல்வி பி. ஸ்ரெபினியா
(2015) வர்த்தகப் பிரிவு

இவ்வரியானது 1954 April 10 பிரான்ஸ் நாட்டில் முதன்முதலில் அறிமுகப் படுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து இங்கி லாந்தில் 1973லும், அமெரிக்காவில் 1975 இலும் அறிமுகப்படுத்தப்பட்டது. மேலும் 2002ம் ஆண்டு ஒகஸ்ட் 01ம் திகதி அன்று இலங்கையிலும் அறிமுகப்படுத்தப்பட்டது. தற்போது பெறுமதி கூட்டப்பட்ட வரியானது அண்ணளவாக 81 நாடுகளில் நடைமுறை யில் இருந்து வருகின்றது என அறியப்படு கின்றது.

பெறுமதி கூட்டப்பட்ட வரி என்பது பொருட்கள், சேவைகளின் உற்பத்தி விநியோக தொடரில் ஒவ்வொரு நிலையிலும் அவற்றின் சேர்க்கப்பட்ட பெறுமதி மீது விதிக் கப்படும் வரியினைக் குறிக்கும்.

பெறுமதி கூட்டப்பட்ட வரி செலுத்தப் படும் முறையை பின்வரும் வரிபடம் மூலம் விளக்கலாம். (Vat 10% எனக் கொள்க)



செலுத்தவேண்டிய பெறுமதி கூட்டப் பட்ட வரிக்கான சமன்பாடு

செலுத்தவேண்டிய = வெளியீட்டு - உள்ளீட்டு
VAT VAT VAT

உள்ளீட்டுப் பெறுமதி கூட்டப்பட்ட வரி (Input VAT)

பொருட்கள், சேவைகளின் கொள் வனவுக்கான பெறுமதி கூட்டப்பட்ட வரி "உள்ளீட்டுப் பெறுமதி கூட்டப்பட்ட வரி" ஆகும்.

வெளியீட்டுப் பெறுமதி கூட்டப்பட்ட வரி (Out put VAT)

பொருட்கள், சேவைகளின் விற்ப னைக்கான பெறுமதி கூட்டப்பட்ட வரி வெளியீட்டுப் பெறுமதி கூட்டப்பட்ட வரி ஆகும்.

Note:

பெறுமதி கூட்டப்பட்ட வரியினை அறவிடுபவர் பதிவுசெய்யப்பட்ட நபரா வார். 2002ம் ஆண்டு 14ம் இலக்கசேர் பெறுமதி வரிச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு அரசின் சார்பில் VAT அறவிட அதிகாரமுள்ளவரே பதிவு செய்யப்பட்ட நபராவார்.

பெறுமதி சேர் வரி அடங்கிய விற்பனை கொள்வனவிற்கான இரட்டைப் பதிவுகள்

1) **பொருட்கள் சேவைகளின் கொள்வன விற்கு...**

கொள்வனவு கணக்கு வரவு	XXX
VAT கணக்கு வரவு	XXX
கடன்கொடுத்தோர் அல்லது காசு கணக்கு செலவு	XXX

2) **பொருட்கள், சேவைகளின் விற்பனைக்கு**

காசு அல்லது கடன்பட்டோர் கணக்கு வரவு	XXX
விற்பனைக் கணக்கு செலவு	XXX
VAT கணக்கு செலவு	XXX

3) **அறவிடமுடியாக் கடனுக்கு**

அறவிடமுடியாக்கடன் கணக்கு வரவு	XXX
VAT கணக்கு வரவு	XXX
கடன்பட்டோர் கணக்கு செலவு	XXX

4) **உட்திரும்பலுக்கு**

உட்திரும்பல் கணக்கு வரவு	XXX
VAT வரவு	XXX
கடன்பட்டோர் கணக்கு செலவு	XXX

5) **வெளித்திரும்பலுக்கு**

கடன்கொடுத்தோர் கணக்கு வரவு	XXX
VAT கணக்கு செலவு	XXX
வெளித்திரும்பல் கணக்கு செலவு	XXX

பெறுமதி கூட்டப்பட்ட வரிக்கணக் கீடானது வியாபாரக் கழிவிற்குப் பின்னுள்ள தொகைக்கே மேற்கொள்ளப்படும்.

மேலும் பெறுமதி கூட்டப்பட்ட வரி யினை ஆராய்வோம்....

பொருட்கள், சேவைகள் மீதான வரியுடன் (GST) ஒப்பிடுமிடத்து பெறுமதி கூட்டப்பட்ட வரியின் அனுகூலங்கள்

- பொருட்கள், சேவைகள் மீதான வரி வீதம் ஒன்று மட்டுமே உண்டு. ஆனால் பெறுமதி கூட்டப்பட்ட வரி வீதம் பல உண்டு.
- பொருட்கள், சேவைகள் மீதான வரிக்கு அனைவரும் விலைப்பட்டியல் வழங்க வேண்டும். ஆனால் பெறுமதி கூட்டப்பட்ட வரிக்கு அவ்வாறு தேவையற்றது.

- பொருட்கள், சேவைகள் மீதான வரிக்கு பூச்சியவீத வளங்கள் மட்டுப்படுத்தப் பட்டது. ஆனால் பெறுமதி கூட்டப்பட்ட வரிக்கு மேலும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.
- பொருட்கள், சேவைகள் மீதான வரிக்கு பிற்போட்ட வரி மட்டுப்படுத்தப்பட்டது. ஆனால் பெறுமதி கூட்டப்பட்ட வரிக்கு மேலும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.
- பொருட்கள், சேவைகள் மீதான வரிக்கு சுயவிருப்பப்பதிவு அனுமதிக்கப்படுவ தில்லை. ஆனால் பெறுமதி கூட்டப்பட்ட வரிக்கு சுயவிருப்பப்பதிவு அனுமதிக்கப் படுகிறது.

பெறுமதி கூட்டப்பட்ட வரியின் அனுகூலங்கள்

- கூட்டப்பட்ட பெறுமதிக்கு விதிக்கப்படு வதால் மொத்த விற்பனை வரியில் உள்ள வரி குவிப்புத் தன்மை (Cascading Effect) தவிர்க்கப்படுகிறது.
- ஒரு பொருள் மீண்டும் மீண்டும் வரிக் குற்படுவது தவிர்க்கப்படுவதுடன் இரட் டிப்பு வரி நீக்கப்படுகிறது.
- இவ்வரி நுகர்வோரையே சென்றடை வதால் உற்பத்தியாளர், விற்பனை யாளர் ஊக்குவிக்கப்படுகின்றனர்.
- இவ்வரியில் வரிபுலப்படுதன்மை (Transparency) காணப்படுகிறது.
- இவ்வரியில் மோசடிகள் மேற்கொள்வது கடினம்
- இவ்வரிமுறை நிறுவனங்கள் சீராக கணக்கு வைக்கும் முறையை ஊக்கு விக்கிறது.

பெறுமதி கூட்டப்பட்ட வரியின் பிரதிகூலங்கள்

- சிறிய வணிகங்கள் இதற்கென கணக் காளரிடம் செல்லும்போது செலவுகள் அதிகரிக்கின்றன.
- செலவுகளை குறைக்க இது தொடர்பான விடயங்களை நிறுவன உரிமையாளர் களே கைக்கொள்வதால் வழுக்கள் ஏற்பட வாய்ப்பு அதிகம் என்பதால் வரிக் கணிப்பீட்டில் சிக்கல்கள் ஏற்படலாம்.
- இவ்வரி சில பொருட்கள், சேவைகளுக்கு அறவிடப்படுவதில்லை. அத்துடன் சில பொருட்கள், சேவைகளுக்கு வேறுபட்ட வீதத்தில் அறவிடப்படுகிறது. இவ்வா றான நிலைமைகள் இருப்பதால் நிறுவ னங்களுக்கு சிக்கலானதாக அமையும்.

மாதிரி கணக்கு

2014 மாதத்திற்கு D.இன் லிமிட்டட்டின் கொள்வனவு விற்பனை விபரம் வருமாறு:

2015	தேறியது ரூபா	சேர்க்கும் VAT ரூபா
மே 01 B. டென்சன் கம்பனிக்கு கடன் அடிப்படையில் விற்பனை	300	30
தே 04 R. காதர் கம்பனிக்கு கடன் அடிப்படையில் விற்பனை	440	44
மே 10 பின்வரும் நிறுவனங்களிடமிருந்து கடன் கொள்வனவு		
L. கூழ்	800	80
T. டைன்	380	38
மே 15 Y. வஜி கம்பனியிடம் கடனுக்கு கொள்வனவு	100	10
மே 18 R. காதர் கம்பனிக்கு கடன் அடிப்படையில் விற்பனை	280	28
மே 22 S. பசில் கம்பனியிடம் கடனுக்கு கொள்வனவு	120	12
மே 31 K. அடல் கம்பனிக்கு கடன் அடிப்படையில் விற்பனை	160	16

வேண்டப்படுவது,

1. விற்பனை நாளேடு, கொள்வனவு நாளேடு
2. விற்பனை பேரேடு, கொள்வனவு பேரேடு, பொதுப் பேரேடு
3. VAT கணக்கு மீதி

விடை

விற்பனை நாளேடு				
திகதி	விபரம்	தேறியது	VAT	மொத்தம்
2015 மே 01	B. டென்சன்	300	30	330
மே 04	R. காதர்	440	44	484
மே 18	R. காதர்	280	28	308
மே 31	K. அடல்	160	16	176
		1180	118	1298

கொள்வனவு நாளேடு				
திகதி	விபரம்	தேறியது	VAT	மொத்தம்
2015 மே 10	L. கூழ்	800	80	880
மே 10	T. டைன்	380	38	418
மே 15	Y. வஜி	100	10	110
மே 22	S. பசில்	120	12	132
		1400	140	1540

விற்பனை பேரேடு

B. டென்சன் க/கு

வி/னை	330		

R. காதர் க/கு

வி/னை	484		
வி/னை	308		

K. அடல் க/கு

வி/னை	176		

கொள்வனவுப் பேரேடு

L. கூழ் க/கு

		கொ/வு	880

T. டைன் க/கு

		கொ/வு	418

Y. வஜி க/கு

		கொ/வு	110

S. பசில் க/கு

		கொ/வு	132

பொதுப் பேரேடு

விற்பனை க/கு			கொள்வனவு க/கு		
	க/ப	180	க/கொ	1400	

VAT கணக்கு			
	ரூபா		ரூபா
கொ/வு நாளேட்டின் மூலம்	140	வி/னை நாளேட்டின் மூலம்	118
		மீ/செ	22
	140		140
மீ/வ	22		

உசாத்துணை நூல்கள்

1) வற் கணக்கீடு 4th Edition - D. Sam

2) http://em.m.wlk.pedia.Org/wiki/Value - added - tax

"Strong minds discuss ideas, average minds discuss events, weak minds discuss people."

Socrates



நிறைவில் பதிவு

செல்வி. செ. லூசியா
2015 வர்த்தகப்பிரிவு

இரட்டைப்பதிவு முறையைப் பின் பற்றாது கணக்குகள் பேணப்படின் அது நிறைவில் பதிவாகும். இதை இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

1. முற்றாக பதியாமை
2. ஓரளவுக்கேணும் பதிவு மேற்கொள்ளல்

நிறைவில் பதிவு பேணப்படுவதற்கான காரணங்கள்

1. இரட்டைப்பதிவு பற்றிய அறிவின்மை
2. சிறிய நிறுவனங்களுக்கு இரட்டைப் பதிவுக்கமைய கணக்குப் பேணுவது நடைமுறைப் பிரச்சினையாக இருப்பது
3. முழுமையான தகவல் அவசியமின்மை
4. கணக்கு வைத்தல் கட்டாயமாக்கப் படாமை
5. மோசடி செய்யும் எண்ணம்
6. தேவையான நேரம் திறன்தொழில் கணக்காளரைக் கொண்டு கணக்கு தயாரிப்பதை வழக்கமாகக் கொள்ளல்

நிறைவில் பதிவுமுறையால் நிறுவனத்திற் கேற்படும் பாதிப்புக்கள்

1. நிறுவனத்தின் இலாபத்தை/ நட்டத்தை சரியாக அறிந்து கொள்ள முடியாமை
2. நிறுவனத்தின் நிதிநிலைமை பற்றிய விளக்கத்தைப் பெற முடியாது இருத்தல்
3. நிறுவன எதிர்கால செயற்பாட்டிற்குத் தீர்மானம் மேற்கொள்ள முடியாது இருத்தல்.
4. வருமானவரி, பெறுமதி கூட்டப்பட்ட வரி போன்ற சட்டத்தேவைகளுக்கு தகவல் களை சரியாக சமர்ப்பிக்க முடியாது இருத்தல்
5. நிறுவனத்தில் இடம்பெறும் மோசடி களை கண்டுகொள்ளமுடியாமை
6. கடன்பட்டோர், கடன்கொடுத்தோரை இலகுவில் கண்டுகொள்ள முடியாமை

முற்றாகப் பதியாத (போதிய தகவல் இல்லாமை) நிறுவனத்திற்கு இலாபம்/ நட்டம் கணிப்பிடல்

நிறுவன முகாமையிடம் வாய்ப் பேச்சின் மூலமும் கண்ணால் காண்ப வற்றை திரட்டுவதன் மூலமும் சொத்துக்கள், பொறுப்புக்களை திரட்டி நிதியாண்டு ஆரம்ப, இறுதி ஆரம்ப நிலவரக்கூற்று தயாரித்து ஆரம்ப மூலதனத்தை கணிப்பிட்டு இறுதி நிலவரக்கூற்று தயாரித்து இறுதி மூலதனம் கணிப்பிட்டு அதன் மூலம் முற்றாகப் பதியாத நிறுவனத்திற்கு தேறிய இலாபம் கணிப்பிட முடியும். இதனைத் தேறிய சொத்தினூடாகப் பெறுபேற்றைக் கணித்தல் என்பர்.

தேறிய இலாபம் = இறுதிமூலதனம் - ஆரம்ப மூலதனம் + பற்று – மேலதிக மூலதனம்

இறுதிமூலதனம்/ இறுதித்தேறிய சொத்து = இறுதிச் சொத்து - இறுதிப் பொறுப்பு

ஆரம்ப மூலதனம்/ ஆரம்பத் தேறிய சொத்து = ஆரம்பச் சொத்து - ஆரம்பப் பொறுப்பு

நிறைவில் பதிவில் ஆரம்ப நிலவரக் கூற்று, காசுக்கணக்கு, கடன்பட்டோர் கணக்கு,கடன் கொடுத்தோர் கணக்கு ஆகியன மூலம் அறியக்கூடியவை

- ஆரம்ப நிலவரக்கூற்று — அநேக சந்தர்ப்பத்தில் ஆரம்ப மூலதனம்
- காசுக்கணக்கு — காசு விற்பனை / காசுக் கொள்வனவு/ கடன்பட்டோரிடம் பெற்ற காசு / காசுப்பற்று/ காசுச் செலவு/ காசு வருமானம்
- கடன்பட்டோர் கணக்கு - கடன் விற்பனை/ கடன்பட்டோரிடம் பெற்ற காசு /ஆரம்ப மீதி/ இறுதி மீதி
- கடன் கொடுத்தோர் கணக்கு — கடன் கொள்வனவு / கடன்கொடுத்தோருக்கு கொடுத்த காசு / ஆரம்பமீதி/ இறுதி மீதி

பெருமான் என்பவர் சில்லறை வியாபாரியாவார். அவர் தனது கணக்ககளை இரட்டைப்பதிவுகளின் அடிப்படையில் பேணி வரவில்லை. அவரது வியாபாரம் தொடர்பான தரவுகள் வருமாறு

1. சொத்துக்களும் பொறுப்புக்களும்

	1/1/91	31/12/91
இருப்பு	5000	10000
தளபாட இணைப்பு (கிரயம்)	25000	30000
கடன்பட்டோர்	10000	5000
கடன்கொடுத்தோர்	15000	20000
காசு	1000	4000
வங்கியிலுள்ள காசு	5000	5500
முற்பண மின்சாரம்	1000	-
சென்மதி காப்புறுதி	-	500
காணிகட்டடம்	75000	75000

2. சகலவிற்பனைகளும் கொள்வனவும் கடன் அடிப்படையில் செய்யப்பட்டவையாகும். கொள்விலையில் மொத்த இலாப வீதம் 20% ஆகும்

3. தளபாட இணைப்புக்களுக்கு கிரயத்தில் 10% தேய்வு இடப்படல் வேண்டும். ஆண்டிறுதி கடன்பட்டோரில் அறவிடமுடியாக்கடன் ஏற்பாடு செய்க

4. காசு வங்கிக் கொடுக்கல் வாங்கல்கள்

காசுக் கொடுக்கல் வாங்கல்கள்

சம்பளம்	3000
தளபாடக் கொள்வனவு(30.6.91)	5000

வங்கிக் கொடுக்கல் வாங்கல்கள்

காசு வைப்பு	105000
மின்கட்டணம் செலுத்தியது	5000
காப்புறுதி செலுத்தியது	2500
கடன் கொடுத்தோருக்கு செலுத்தியது	100000
வங்கிக்கட்டணம்/ வட்டி	2000
வசூலித்தவட்டி	5000

5. காசேட்டில் ஏதேனும் வித்தியாசங்கள் இடம்பெறின் அதனை உரிமையாளர் காசு பற்றாக கருதுக

வேண்டப்படுவது:

1. 31.12.91ல் முடிவடைந்த ஆண்டுக்கான வியாபார இலாப நட்டக்கணக்கினையும் அத்திகதியிலான நிதிநிலைக்கூற்றையும் தயாரிக்குக.

பெருமான் வியாபாரியின்
டிசம்பர் மாத
காசேடு

விபரம்	காசு	வங்கி	விபரம்	காசு	வங்கி
மீதி	1000	5000	சம்பளம்	3000	
காசு		105000	தளபாடம்	5000	
வசூலித்த வட்டி		5000	வங்கி	105000	
பெற்ற காசு	125000		மின்கட்டணம்		5000
			காப்புறுதி		2500
			வங்கிக்கட்டணம்		2000
			க.கொ. கொடுத்தது		100000
			பற்று	9000	
			மீ/ செ	4000	5500
	126000	115000		126000	115000
மீ/வ	4000	5500			

கடன்பட்டோர் கணக்கு

மீதி	10000	காசு	125000
வி/னை	120000	மீ/செ	5000
	130000		130000
மீ/வ	5000		

கடன் கொடுத்தோர் கணக்கு

வங்கி	100000	மீதி	15000
மீ/செ	20000	கொ/வு	105 000
	120000		120000
		மீ/வ	20000

ஆரம்ப நிலவரக் கூற்று

விபரம்	சொத்து	நிதியிடல்
இருப்பு	5000	
தளபாடம்	25000	
கடன்பட்டோர்	10000	
கடன்கொடுத்தோர்		15000
காசு	1000	
வங்கி	5000	
முற்பண மின்சாரம்	1000	
காணிகட்டடம்	75000	
மூலதனம்		107000
	122000	122000

பெருமான் வியாபாரியின்

31.12.91ல் முடிவடைந்த ஆண்டுக்கான

இலாபநட்டக்க/கு

வி/னை		120000
வி/ணைக்கிரயம்		
ஆ.இருப்பு	5000	
கொ/வு	105000	
	110000	
இ.இருப்பு	(10000)	(100000)
மொ. இலாபம்		20000
ஏனைய வருமானம்		
பெ.வட்டி		5000
		25000
செலவுகள்		
சம்பளம்	3000	
மின்கட்டணம்	6000	
காப்புறுதி	3000	
தளபாடத்தேய்வு	2750	
ஐ.ஏற்பாடு	250	
வங்கிக்கட்டணங்கள்	2000	(17000)
தேறிய இலாபம்		8000

பெருமான் வியாபாரியின்

31/12/91ல் உள்ளவாறான

நிதிநிலைக்கூற்று

நடைமுறை அல்லாச்சொத்து			
காணிகட்டட ம்	75000		75000
தளபாடம்	30000	(2750)	27250
	105000	(2750)	102250
நடைமுறைச்சொத்து			
இறுதி இருப்பு		10000	
கடன்பட்டோர்	5000		
ஐயக்கடன்ஏற்பாடு	(250)	4750	
வங்கி		4000	
காசு		5500	24250
			126500
மூலதனம்		107000	
தேறிய இலாபம்		8000	
		115000	
பற்று		(9000)	106000
நடைமுறைக்கடன்		20000	
கடன்கொடுத்தோர்		500	20500
சென்மதி காப்புறுதி			126500

விற்பனைக் கணிப்பு

கொள்விலை + இலாபம் = விற்பனைவிலை

விற்பனை _____

உசாத்துணைநூல்:

- உயர்கணக்கீடு கலைச்செல்வன்
- நவீன நிதிக் கணக்கீட்டுக் கோட்பாடு (D.sam)

இலாப நோக்கமற்ற நிறுவனங்களின் கணக்குகள்

செல்வி எ. அனுசிகா
(2015) வர்த்தகப் பிரிவு

உறுப்பினர் நலன்களுக்காகவும், சமூக நலன்களுக்காகவும் உறுப்பினர்களுடனும், சமூகத்துடனும் அன்னியோன்னியமாக தொடர்புவைத்துக்கொள்வதை அடிப்படையாகக்கொண்ட அமைப்புக்கள் இலாப நோக்கமற்ற நிறுவனங்கள் எனப்படும். சேவை நோக்கம் கொண்ட அமைப்புக்களுக்கு உதாரணமாக பின்வருவனவற்றை குறிப்பிடலாம்.

1. விளையாட்டுக் கழகங்கள்
2. பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
3. சனசமூக நிலையம்
4. சமய நிறுவனங்கள்
5. பாடசாலை மாணவர் உயர்தர மன்றங்கள்

இலாப நோக்குடன் இயங்குகின்ற நிறுவனங்கள் தமது நிதியாண்டு காலப் பகுதிக்கான பெறுபேறுகளையும், பெறுமதிகளையும் அறிந்துகொள்வதற்காக நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதைப் போன்று சேவை நோக்கத்தையும் கொண்ட வியாபார அமைப்புக்கள் தமது நிதியாண்டு காலப் பகுதிக்கான பெறுமதிகளையும் பெறுபேறுகளையும் அறிந்துகொள்வதற்காக நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கின்றன. அவை பின்வருமாறு.

1. கொள்ளல் கொடுத்தல் கணக்கு
2. வருமானம் செலவுக் கணக்கு
3. ஐந்தொகை
4. புறத்தொழிற்பாட்டு நடவடிக்கைகளுக்கான வியாபார இலாப நட்டக் கணக்கு

1.கொள்ளல் கொடுத்தல் கணக்கு (Receipts and Payments Account)

சேவை நோக்கமுள்ள நிறுவனங்கள் தமது காசு தொடர்பான கொடுக்கல், வாங்கல்களினை பதிவுசெய்வதற்கென பேணப்படுகின்ற கணக்கே "கொள்ளல் கொடுத்தல் கணக்கு" ஆகும். இது காசுக் கணக்கினை ஒத்ததாக தயாரித்துக்கொள்ளப்படுகின்றது. இக்கணக்கில் காசினை பெற்றுக்கொள்ளும் போது கொள்ளல் பக்கத்திலும் காசினை செலவு செய்யும்போது கொடுத்தல் பக்கத்திலும் பதிவுசெய்யப்படும். இங்கு முற்பணமாகப் பெற்றுக்கொண்ட வருமானங்களும், முற்பணமாகச் செலுத்தப்பட்ட செலவீனங்களும் பதிவு செய்து கொள்ளப்படுகின்றது. ஆனால் பெறவேண்டிய வருமானங்கள், கொடுக்க வேண்டிய செலவீனங்கள் என்பன பதிவு செய்து கொள்ளப்படமாட்டாது. இக் கணக்கினை தயாரிப்பதன் பிரதான நோக்கம் காசு / வங்கி மீதியினை கண்டறிவது ஆகும்.

(கொள்ளல் கொடுத்தல் கணக்கின் மாதிரி அமைப்பு)

வினோஜா விளையாட்டுக்கழகம்

2014.03.31இல் முடிவடைந்த ஆண்டிற்கானகொள்ளல் கொடுத்தல் கணக்கு

விபரம்	தொகை	விபரம்	தொகை
காசு	XXX	விளையாட்டு உபகரணம் கொள்வனவு	XXX
வங்கி	XXX	பத்திரிகை, சஞ்சிகை	XXX
சந்தாக் கட்டணம்	XXX	கட்டடத் திருத்தம்	XXX
நன்கொடை	XXX	விளையாட்டுப் போட்டிச் செலவு	XXX
அங்கத்தவர் அனுமதிக் கட்டணம்	XXX	மைதானப் பராமரிப்பு	XXX
		மின்சாரக் கட்டணம்	XXX
		சிரமதான செலவுகள்	XXX
		நானாவித செலவுகள்	XXX
		மீ/செ	XXX
	XXXX		XXXX
மீ/வ	XXX		

2. வருமானச் செலவுக் கணக்கு (Income and Expenditure Account)

சேவை நோக்கமுள்ள நிறுவனங்கள் தமது குறித்த ஆண்டு செயற்பாட்டின் மூலம் பெறப்பட்ட பெறுபேறுகளினை கண்டுகொள்ளும் நோக்குடன் தயாரிக்கப்படும் கணக்கே "வருமானச்செலவுக் கணக்கு" ஆகும். வருமானச்செலவுக் கணக்கானது வருமானக் கூற்றினை ஒத்ததாக காணப்படும். இங்கு அட்டுறு அடிப்படையில் பதிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும் காசு அல்லாத விடயங்களும் இங்கு பதிவுசெய்து கொள்ளப்படுகின்றது. இக்கணக்கினை தயாரிப்பதன் நோக்கமாக செலவிலும்கூடிய வருமானம்/வருமானத்தினை மிஞ்சிய செலவினை கண்டறிவதாக அமையும். இங்கு இலாபங்கள், வருமானங்கள் செலவுப் பக்கத்திலும் செலவுகள், நட்டங்கள் வரவுப் பக்கத்திலும் பதியப்படும். இங்கு முற்பணமாக பெற்றுக்கொண்ட வருமானங்களும் முற்பணமாக செலுத்திய செலவீனங்களும் பதிவுசெய்யப்படமாட்டாது. ஆனால்பெற வேண்டிய வருமானங்களும் கொடுக்க வேண்டிய செலவீனங்களும் பதிவுசெய்யப் படும்.

வருமானச் செலவுக் கணக்கின் மாதிரி அமைப்பு

வினோஜா விளையாட்டுக் கழகம்

2014.03.31 முடிவடைந்த ஆண்டிற்கான

வருமானச் செலவுக் கணக்கு

விபரம்	தொகை	தொகை
வருமானங்கள்		
சந்தாக் கட்டணம்	XXX	
விளையாட்டு விழா வருமானம்	XXX	
நன்கொடை	XXX	
அங்கத்தவர் அனுமதிக் கட்டணம்	XXX	XXX
செலவுகள்		
கட்டட வாடகை கொடுப்பனவு	XXX	
மின்சாரக் கட்டணம்	XXX	
விளையாட்டு விழா செலவு	XXX	
மைதானத் தேய்வு	XXX	
சிரமதான செலவு	XXX	
தளபாடத் தேய்வு	XXX	(XXX)
வருமான மிகை / வருமான குறை		XXX

கொள்ளல், கொடுத்தல் கணக்கிற்கும் வருமானச் செலவுக் கணக்கிற்கும் இடையிலான வேறுபாடுகள்

	கொள்ளல் கொடுத்தல் கணக்கு	வருமானச் செலவுக் கணக்கு
1	காசு தொடர்பான கொடுக்கல், வாங்கல் கள் பதியப்படும்.	வருமானங்கள், செலவுகள் தொடர்பான விடயங்கள் பதியப்படும்.
2	காசு அடிப்படையில் பதிவுகள் மேற் கொள்ளப்படும்.	அட்டுறு அடிப்படையில் பதிவுகள் மேற் கொள்ளப்படும்.
3	காசு / வங்கி மீதியைக் கணிப்பிடுவது நோக்கமாகும்.	வருமானமிகை/குறையைக்கணிப்பிடுவது நோக்கமாகும்.
4	காசுத் தன்மையான விடயங்கள் பதியப் படும். உ-ம்: நிலையான சொத்து கொள்வனவு	காசு அல்லாத விடயங்களும் பதியப்படும். உ-ம்: பெறுமானத்தேய்வு.
5.	இறுதி மீதி ஐந்தொகையின் சொத்துப் பக்கத்தில் பதியப்படும்.	இறுதி மீதியானது திரண்ட நிதிக்கு மாற்றப் படும்.

சேவை நோக்கம் கொண்ட நிறுவனங்களின் பிரதான வருமான ஊடகமாக சந்தாவைக் குறிப்பிடலாம். சந்தா என்பது சேவை நோக்கமுள்ள நிறுவனம் ஒன்றில் அங்கத்தவராக காணப்படும் நபர் ஒருவர் தனது அங்கத்துவத்தினை நிலைப்படுத்தி கொள்வதற்காக கட்டுகின்ற உறுப்புரிமைக் கட்டணம் ஆகும். இது இரண்டு வகைப் படும்.

1. சாதாரண சந்தா
2. ஆயுள் சந்தா

சாதாரண சந்தா என்பது அங்கத்தவர் ஒருவர் தனது அங்கத்துவத்தினை நிலைப் படுத்தி கொள்வதற்காக மாதந்தோறுமோ / வருடந்தோறுமோ தொடர்ச்சியாக கட்டப் படும் சந்தாவே இது ஆகும். இதனுடைய இரட்டைப் பதிவு பின்வருமாறு

1. காசு கிடைக்கும் போது

காசுக் கணக்கு	வரவு	XXX
சந்தாக் கணக்கு	செலவு	XXX

2. வருமானமாக காட்டும்போது

சந்தா கணக்கு	வரவு	XXX
வ.செலவுக் கணக்கு	செலவு	XXX

சந்தாக் கணக்கின் மாதிரி அமைப்பு

சந்தாக் கணக்கு			
ஆ.சந்தா.நி	XXX	ஆ.ச. மு.	XXX
வ.செ.க/கு	XXX	காசு	XXX
இ.ச.மு	XXX	இ.ச.நி	XXX
	XXXX		XXXX
இ.ச.நி	XXX	இ.ச.மு	XXX

அங்கத்தவர் ஒருவர் தனது ஆயுட் காலம் முழுவதும் கழகத்தில் அங்கத்தவராக இருக்கும் நோக்குடன் ஒரே தடவையில் செலுத்தப்படுகின்ற சந்தாவே ஆயுள்சந்தா எனப்படும். இதனுடன் தொடர்புடைய இரட்டைப் பதிவு பின்வருமாறு:

1. காசு கிடைக்கும் போது

காசுக் கணக்கு	வரவு	XXX
ஆயுள் ச. க/கு	செலவு	XXX

2. வருமானமாக காட்டும்போது

ஆயுள் சந்தா கணக்கு	வரவு	XXX
திரண்ட நி.க/கு	செலவு	XXX

இலாப நோக்கமற்ற நிறுவனங்கள் தமக்குத் தேவையான மேலதிக நிதியைத் திரட்டும் நோக்கில் பல்வேறு புறத்தொழிற் பாட்டு முயற்சிகளை நடாத்துகின்றன. அவை பின்வருமாறு:

1. தேநீர்ச்சாலை
2. மதுச்சாலை
3. களியாட்ட விழா
4. கலை விழா

மேற்படி நடவடிக்கைகளினால் உழைக்கப்படும் இலாப நட்டங்களை கணிப் பதற்கு தனித்தனியாக வியாபார இலாப நட்டக் கணக்கு தயாரிக்கப்பட்டு அதில் எழும் இலாப நட்டம் வருமானச் செலவுக் கணக்கில் தாக்கம் செய்யப்படும்.

உ-ம்: எட்மன் சனசமூக நிலையத்தின் 30.06.2014இல் முடிவடைந்த ஆண்டிற் கான காசுப் பெறுவனவு காசுக் கொடுப்பனவு பற்றிய தகவல்கள் வருமாறு:

01.07.2013 இல் காசு மீதி	120000 ரூபா
மைதான பராமரிப்புச் செலவு	4000 ரூபா
விளையாட்டு போட்டிச் செலவு	3000 ரூபா
அங்கத்தவர் சந்தா பெறுவனவு	140000 ரூபா
நன்கொடை பெறுவனவு	4000 ரூபா
மண்டப வாடகை வருமானம்	3000 ரூபா
கூலிக் கொடுப்பனவு	2000 ரூபா
தளபாடக் கொள்வனவு	45000 ரூபா
பத்திரிகைச் செலவு	4000 ரூபா
விளையாட்டுப் போட்டிச் செலவு	3000 ரூபா
விளையாட்டு உபகரணம் கொள்வனவு	35000 ரூபா
மைதான பராமரிப்புச் செலவு	2000 ரூபா

மேலதிக தகவல்கள்

1. தளபாடப் பெறுமதியின் மீது 30.06.2014 இல் முடிவடைந்த ஆண்டுக் காலத்திற்கான பெறுமானத்தேய்வாக 6000/= பதிவழிப்பு செய்க.
2. விளையாட்டு உபகரணப் பெறுமானத் தேய்வாக 10% பதிவழிப்பு செய்தல் வேண்டும்.
3. 30.06.2014இல் சந்தாப்பணம் தொடர்பானவை
   சந்தா நிலுவை 6000 ரூபா
   சந்தா முற்பணம் 2500 ரூபா
4. 30.06.2014இல் - அட்டுறு - கூலிக் கொடுப்பனவு 4000 ரூபா
5. 30.06.2014இல் வருமதியான வாடகை வருமானம் 3500 ரூபா

வேண்டப்படுவது.

1. 30.06.2014இல் முடிவடைந்த ஆண்டிற்கான கொள்ளல், கொடுத்தல் கணக்கு
2. 30.06.2014இல் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவுக் கணக்கு

எட்மன் சனசமூக நிலையம்
30.06.2014 இல் முடிவடைந்த
ஆண்டிற்கான கொள்ளல் கொடுத்தல் கணக்கு

விபரம்	தொகை	விபரம்	தொகை
01.07.2013இல் மீ/வ	120000	மைதான பராமரிப்புச் செலவு	4000
சந்தா	140000	விளையாட்டுப் போட்டிச் செலவு	3000
நன்கொடை	4000	கூலி	2000
மண்டப வாடகை வருமானம்	3000	தளபாடம்	45000
		பத்திரிகைச் செலவு	4000
		காப்புறுதி	3000
		விளையாட்டு உபகரணம்	35000
		மைதான வாடகை	2000
		மீ/செ	169000
	267000		267000
மீ/வ	169000		

HOLY FAMILY CONVENT LIBRARY

எட்மன் சனசமூக நிலையம்
30.06.2014இல் முடிவடைந்த
ஆண்டிற்கான வருமானச் செலவுக் கணக்கு

விபரம்	தொகை	தொகை
வருமானங்கள்		
சந்தா	143500	
மண்டப வாடகை வருமானம்	6500	
நன்கொடை	4000	154000
செலவீனங்கள்		
தளபாட பெறுமானத் தேய்வு	6000	
விளையாட்டு உபகரண பெறுமானத் தேய்வு	3500	
கூலி	6000	
மைதான பராமரிப்புச் செலவு	4000	
விளையாட்டுப் போட்டிச் செலவு	3000	
பத்திரிகைச் செலவு	4000	
காப்புறுதி	3000	
மைதான வாடகை	2000	(31500)
செலவிலும்கூடிய வருமானம்		122500

சந்தாக் கணக்கு			
வ/செ/க/மா	143500	காசு	140000
மீ/செல	2500	மீ/செ	6000
	146000		146000
மீ/வ	6000		

உசாத்துணை நூல்கள்:

உயர் கணக்கீடு - S. தவா

உயர் கணக்கீடு - K. பாலகஜன்



கட்டுப்பாட்டுக் கணக்குகள்

செல்வி. வ. கமலினி
2015 வர்த்தகப்பிரிவு

பேரேடு

கணக்குகளின் தொகுதியே பேரேடாகும். அதாவது ஒரே வகையான கணக்குகள் ஒரு புத்தகமாக அமையும்போது பேரேடு எனப் பெயர் பெறும். பொதுவாக நிறுவனங்களில் பின்வரும் முக்கிய பேரேடுகள் காணப்படும்.

1) பொதுப் பேரேடு
2) துணைப் பேரேடு
   - கடன் கொடுத்தோர் பேரேடு
   - கடன்பட்டோர் பேரேடு

பொதுப் பேரேடு (General Ledger)

கடன்பட்டோர், கடன்கொடுத்தோர் தவிர்ந்த சொத்துக்கள், பொறுப்புக்கள் செலவுகள், வருமானங்கள், மூலதனம் ஆகிய கணக்குகளை உள்ளடக்கிய பேரேடு பொதுப்பேரேடு எனப்படும்.

உதாரணம்:-

- ❖ சொத்து கணக்குகள்
- ❖ பொறுப்பு கணக்குகள்
- ❖ வருமான கணக்குகள்
- ❖ செலவுக் கணக்குகள்
- ❖ மூலதன கணக்குகள்

கடன்பட்டோர் பேரேடு / விற்பனை பேரேடு (Debtors Ledger)

கடன் விற்பனையால் எழும் கடன்பட்டோர் கணக்குகளை உள்ளடக்கிய புத்தகம் கடன்பட்டோர் பேரேடாகும்.

கடன் கொடுத்தோர் பேரேடு/ கொள்வனவு பேரேடு (Creditors ledger)

கடன் கொள்வனவால் எழும் கடன் கொடுத்தோர் கணக்குகளை உள்ளடக்கிய புத்தகம் கடன் கொடுத்தோர் பேரேடாகும்.

கட்டுப்பாட்டு கணக்குகள் / மொத்த கணக்குகள் / சீராக்கும் கணக்கு/ ஒழுங்குபடுத்தும் கணக்குகள்

நிறுவனத்தின் ஒவ்வொரு பேரேட்டிலும் ஒவ்வொரு பரீட்சைமீதி தயாரிக்க வேண்டுமாயின் தயாரிக்கப்படும் கணக்கே கட்டுப்பாட்டுக் கணக்காகும்.

கட்டுப்பாட்டு கணக்கின் வகைகள்

1) பொதுப்பேரேட்டைகட்டுப்படுத்தும் கணக்கு
2) கடன்பட்டோர் கட்டுப்படுத்தும் கணக்கு
3) கடன்கொடுத்தோர் கட்டுப்படுத்தும் கணக்கு

பொதுப் பேரேட்டைக் கட்டுப்படுத்தும் கணக்கு

கடன்பட்டோர் பேரேட்டிலும், கடன் கொடுத்தோர் பேரேட்டிலும் தனித்தனிப் பரீட்சை மீதியைத் தயாரிக்க தனித்தனியாக தயாரிக்கும் கணக்கு பொதுப் பேரேட்டை கட்டுப்படுத்தும் கணக்காகும்.

கடன்பட்டோர் கட்டுப்படுத்தும் கணக்கு

பொதுப் பேரேட்டில் பரீட்சைமீதி தயாரிப்பதற்கு கடன்பட்டோர் கணக்கில் மொத்த மீதியைக் காணத் தயாரிக்கும் கணக்கு கடன்பட்டோர் கட்டுப்படுத்தும் கணக்கு ஆகும்.

கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கின் மாதிரி...

கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு

திகதி	விபரம்	இரு மடி	தொகை	திகதி	விபரம்	இரு மடி	தொகை
20XX MM.D	மீதி		xx	20XX MM.DD	மீதி		x
MM.DD	கடன் விற்பனை		xx	MM.DD	உட்திரும்பல்		xx
MM.DD	மறுக்கப்பட்ட காசோலை		xx	MM.DD	அறவிடமுடியாக் கடன்		xx
MM.DD	மறுக்கப்பட்ட வருமதி உண்டியல்		xx	MM.DD	பெற்ற காசு, கா/லை		xx
MM.DD	விதித்த வட்டி		xx	MM.DD	படிகள்		xx
MM.DD	மீளப்பெற்ற அறவிட முடியாக் கடன்		xx	MM.DD	கொடுத்த கழிவு		xx
MM.DD	இரத்து செய்த கொடுத்த கழிவு		xx	MM.DD	மீளப்பெற்ற அறவிட முடியாக் கடன்		xx
MM.DD	திருப்பி கொடுத்த காசு		xx	MM.DD	வருமதி உண்டியல்		xx
MM.DD	மீ/செ		xx	MM.DD	இரத்து செய்த விதி வட்டி		xx
				MM.DD	எதிரீடு		xx
				MM.DD	மீ/செ		xx
			xxx				xxx
			xx	MM.DD	மீ/வ		xx

கடன் கொடுத்தோர் கட்டுப்படுத்தும் கணக்கு

பொதுப் பேரேட்டில் பரீட்சைமீதி தயாரிப்பதற்கு கடன்கொடுத்தோர் கணக்கின் மொத்தமீதியைக் காணத் தயாரிக்கும் கணக்கு கடன்கொடுத்தோர் கட்டுப்படுத்தும் கணக்காகும்.

கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கின் மாதிரி

திகதி	விபரம்	இரு மடி	தொகை	திகதி	விபரம்	இரு மடி	தொகை
20XX MM.DD	மீதி		x	20XX MM.DD	மீதி		xx
MM.DD	வெளித் திரும்பல்		xx		கடன் கொள்வனவு		xxx
MM.DD	கொடுத்த காசு		xx	MM.DD	மறுக்கப்பட்ட கொடுத்த காசோலை		xx
MM.DD	கொடுத்த காசோலை		xx	MM.DD	மறுக்கப்பட்ட சென்மதி உண்டியல்		xx
MM.DD	பெற்ற கழிவு		xx	MM.DD	கொடுத்த வட்டி		xx
MM.DD	சென்மதி உண்டியல்		xx	MM.DD	இரத்து செய்த பெற்ற கழிவு		xx
MM.DD	இரத்து செய்த கொடுத்த வட்டி		xx		மீளப் பெற்ற காசு		xx
MM.DD	எதிரீடு		xx	MM.DD	மீ/செ		xx
MM.DD	மீ/செ		xx				
			xxx				xxx
MM.DD	மீ/வ		xx	MM.DD	மீ/வ		xx

கட்டுப்பாட்டுக் கணக்கிற்கான தகவல்களைப் பெறும் முதன்மை ஏடுகள்

1. காசேடு
   - கடன்பட்டோரிடம் பெற்ற காசு, காசோலை
   - கடன் கொடுத்தோருக்கு கொடுத்த காசு, காசோலை
   - பெற்ற கழிவு, கொடுத்த கழிவு
   - மீளப்பெற்ற அறவிட முடியாக் கடன்
   - திருப்பிச் செலுத்திய காசு, திரும்பிப் பெற்ற காசு
   - மறுத்த காசோலை
2. விற்பனை நாளேடு - கடன் விற்பனை
3. கொள்வனவு நாளேடு - கடன் கொள்வனவு
4. உட்திரும்பல் நாளேடு - உட்திரும்பல்
5. வெளித் திரும்பல் நாளேடு - வெளித் திரும்பல்
6. வருமதி உண்டியல் நாளேடு - ஒப்புக் கொண்ட வருமதி உண்டியல்
7. சென்மதி உண்டியல் நாளேடு - ஒப்புக் கொண்ட சென்மதி உண்டியல்
8. சில்லறை காசேடு - சில்லறைக் காசேட்டின் மூலம் கடன்பட்டோர், கடன் கொடுத்தோருக்கு கொடுத்தது
9. முறையான நாட்குறிப்பு -
   - ஆரம்ப மீதி
   - மறுத்த உண்டியல்
   - இரத்துச் செய்த கழிவு
   - எதிரீடு, வட்டி
   - அறவிட முடியாக் கடன்

கடன்பட்டோர் கட்டுப்பாட்டு கணக்கில் செலவு மீதி ஏற்படக் காரணம்

- கணக்குத் தீர்த்த பின் உட்திரும்பல் செய்தல்
- தரவேண்டிய பணத்தை விட அதிக மான பணம் தரல்.
- பெற்ற காசோலை அல்லது உண்டியல் மறுக்கப்பட்ட போதும் கழிவு இரத்துச் செய்யாமை
- மீளப்பெற்ற அறவிடமுடியாக் கடன் பற்றி காசு பதிவு மட்டும் பதிதல் (இலாபப் பதிவு செய்யாமை)
- பிழையாகக் கூட்டல்

கடன்கொடுத்தோர் கணக்கில் வரவு மீதி ஏற்படுவதற்கான காரணம்

- கணக்குத் தீர்த்த பின் வெளித்திரும்பல் செய்தல்.
- கொடுக்கவேண்டிய பணத்தை விட அதிகமாக பணம் கொடுத்தல்
- கொடுத்த காசோலை அல்லது உண்டி யல் மறுக்கப்பட்ட போதும் கழிவு இரத் துச் செய்யாமை.
- பிழையாகக் கூட்டுதல்

குறிப்பு: எதிரீடு

ஒரே நபர் கடன்பட்டோர் பேரேட்டிலும், கடன்கொடுத்தோர் பேரேட்டிலும் காணப் படின் ஒன்றை ஒன்று ரத்துச்செய்து தேறிய தொகையை கண்டறியச் செய்யும் பதிவே எதிரீடாகும்.

கட்டுப்பாட்டுக்கணக்கை பேணுவதால் ஏற்படும் நன்மைகள்

- பொதுப் பேரேட்டின் விரிவை குறைக் கலாம்.
- பிழைகளை இலகுவில் கண்டறியலாம்.
- விரைவாகவும் சுருக்கமாகவும் தகவல் களைப் பெறலாம்.
- கடன் காலத்தை தீர்மானிக்க முடிதல்.
- தேவைப்படும்போது மொத்த மீதி களைப் பெறமுடிதல்.
- முடிவுக்கணக்கு தயாரிக்க உதவி செய்தல்.

கணக்கு

வரையறுத்த பொதுக்கம்பனியின் 01.03.2012ல் உள்ளவாறான கடன் பட்டோர் பேரேட்டின் மீதிகளின் மொத்தம் பின்வருமாறு இருந்தது.

கடன்பட்டோர்	01.03.2012 இலுள்ள வாறு மீதி (ரூபா 000)
அசோகன்	230
நிலக்சி	100
சமந்தா	30
மொத்தம்	360

கம்பனியின் மூலப்பதிவேடுகளிலிருந்து 2012 மார்ச் மாதத்திற்கான கடன் விற்ப னைகளும் அவை தொடர்பான கொடுக்கல் வாங்கல்களின் விபரங்களும் கீழே தரப் பட்டுள்ளன.

எல்லாப் பெறுமதிகளும் ரூபா 000 இல் தரப்பட்டுள்ளது.

கடன்பட்டோர்	விற்பனைகள்	விற்பனை திரும்பல்கள்	பெற்ற காசு	அனுமதித்த கழிவு	பதிவழித்த அறவிடமுடியாக் கடன்
அசோகன்	125	25	100	-	-
குமரன்	120	20	-	-	-
நிலக்சி	90	-	50	-	-
கமலா	265	-	135	20	-
சமந்தா	-	-	-	-	50
மொத்தம்	600	45	285	20	50

01.03.2012ல் உள்ளவாறான கடன் பட்டோர் பேரேட்டு மீதிகளின் மொத்தமானது கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதியுடன் இணங்கியது. எனினும் இவ்விரண்டு மீதிகளும் 31.03.2012ல் இணங்கவில்லை. இதனைத் தொடர்ந்து பரிசீலித்த போது கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு சரியாக தயாரிக்கப்பட்டிருந்தது. எனினும் கடன்பட்டோர் பேரேட்டில் கொடுக்கல் வாங்கல்களைப் பதியும்போது பின்வரும் பிழைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

1. அசோகன் என்பவரால் திருப்பியனுப்பப் பட்ட சரக்குகள் பதியப்பட்டிருக்கவில்லை.
2. நிலக்சிக்கான விற்பனைகள் விற்ற பொருட்களின் பட்டியல் விலையில் பதியப்பட்டிருந்தது. (இச்சரக்குகளின் விலை 100 000 ரூபா ஆகும்.
3. அறவிடமுடியாக் கடன்களாகப் பதிவழிக்கப்பட்ட சமந்தாவின் ஆரம்ப மீதி பதியப்பட்டிருக்கவில்லை. மாத இறுதியிலுள்ள கடன்பட்டோர் மீதியில் ஐயக்கடனுக்காக 10% இனைஏற்பாடாகச் செய்வது கம்பனியின் கொள்கையாகும். பதிவழிக்கப்படும் அறவிடமுடியாக் கடன்கள், ஐயக்கடன் ஏற்பாட்டுக் கணக்கினூடாகப் பதியப்படுகிறது.

வேண்டப்படுவது

1. 2012 மார்ச் மாதத்திற்கான கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மற்றும் ஐயக் கடனுக்கான ஏற்பாட்டு கணக்கு.
2. மேலுள்ள பிழைகளைத் திருத்துவதற்கு முன்னரான 31.03.2012ல் உள்ளவாறான கடன்பட்டோர் பேரேட்டு மீதிகளின் மொத்தம்.

(விடை)

கடன்பட்டோர் கட்டுப்பாட்டு கணக்கு"000"

மீதி	360	வி/னை திரும்பல்	45
வி/னை	600	காசு	258
		அனு. கழிவு	20
		அ.மு.கடன்	50
		மீ/கீ/கொ/செ	560
	960		960
மீ/கீ/கொ/ வ	560		

ஐயக்கடன் ஏற்பாட்டு கணக்கு "000"

கடன்பட்டோர்	50	மீ/கீ/கொ/வ	30
மீ/கீ/கொ/செ	50	ஐ. கடன் க/கு	70
	100		100
		மீ/கீகொ/வ	50

31.03.2012 கடன்பட்டோர் மீதிகளின் இணக்கக் கூற்று "000"

31.03.2012 கடன்பட்டோர் கட்டுப்பாட்டு க/கு மீதி		560
(கூட்டு) பதியப்படாத விற்பனை திரும்பல்	25	
கூட்டிப் பதிந்த விற்பனை	10	35
		595
(கழி) பதியப்படாத சமந்தாவின் ஆரம்ப மீதி	50	(50)
31.03.2012ல் கட்ன்படடோர் பேரேட்டு பட்டியல் மீதி		545

உசாத்துணை நூல்கள்

1. நவீன நிதிக் கணக்கீட்டு கோட்பாடுகள் (பதிப்பு - 5, D.Sam)
2. அறிவுத் தேடல் (இதழ் - 5)

- ஒருவன் விழுவது வெட்கமல்ல
  விழுந்த பின்னும் எழுந்திராமல் இருப்பதே வெட்கம்
- பள்ளிக்கதவை திறக்காதவன்
  சிறைச்சாலை கதவை மூடமாட்டான்
- நேரமும் காலமும் ஒரு நாளும் உனக்காக காத்திருக்காது
- உழைப்பை நம்பு கடவுளை மறந்துவிடாதே
- கல்லில் செதுக்கிய சிலையைவிட கருவில் சுமந்த தாயே சிறந்தவள்
- முதலில் உன்னை அறிந்து மற்றவர்களை எடைபோடு

குத்தகைக் கணக்கீடு
இலங்கை கணக்கீட்டு நியமம் - 17 (LKAS -17)

செல்வி சா. பீஸ் நிலக்ஸி
2015 வர்த்தகப் பிரிவு

குத்தகைக் கணக்கீடு தொடர்பான விடயங்கள் இலங்கைக் கணக்கீட்டு நியமம் - 17 இல் விளக்கப்பட்டுள்ளன. இந்நியமத்தின் நோக்கம் குத்தகை வழங்குநருக்கும் குத்தகைக் கொள்வனவாளருக்கும் குத்தகை தொடர்பான பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளையும் வெளிப்படுத்தல்களையும் வழங்குவதாகும்.

குத்தகை – வரைவிலக்கணம்

குத்தகை விற்பனையாளர் (Lessor) குத்தகைக் கொள்வனவாளருக்கு (Lessee) இணங்கிக் கொள்ளப்பட்ட காலப்பகுதியினுள் சொத்தொன்றினைப் பயன்படுத்துவது தொடர்பான உரிமையினை ஒரு கொடுப்பனவுக்காக அல்லது தொடரான கொடுப்பனவுகளுக்காக வழங்குவதுடன் தொடர்புடைய உடன்பாடு குத்தகை ஒப்பந்தம் ஆகும்.

(An agreement whereby the lessor conveys to the lessee in return for a payment or series of payments the right to use an asset for an agreed period of time)

குத்தகை தொடர்பாக ஒப்பந்தமொன்று நடைமுறைப்படுத்தப்படும் இவ்வொப்பந்தத்தில் இரு பிரிவினர் தொடர்புபடுகின்றனர்.

1. குத்தகைக் கொள்வனவாளர் (Lessee)
2. குத்தகை விற்பனையாளர்/ குத்தகை வழங்குநர்/ குத்தகைக் கடன் கொடுநர் (Lessor)

LKAS -17 இற்கு ஏற்ப குத்தகையினை பின்வருமாறு இரண்டாக வகைப்படுத்தலாம்.



நிதிக்குத்தகை (Finance lease)

சொத்தொன்றின் உரிமையுடன் தொடர்புடைய எல்லா இடர்கள் மற்றும் பிரதிபயன்களைக் கணிசமான அளவில் கைமாற்றுகின்ற குத்தகை நிதிக்குத்தகை ஆகும்.

நிதிக்குத்தகையில் சொத்தின் உரிமை ஒப்பந்தகால முடிவில் கைமாற்றப்படலாம் அல்லது கைமாற்றப்படாது இருக்கலாம்.

(Finance lease is a lease that transfers substantially all the risks and rewards incidental to ownership of an asset. title may or may not eventually be transferred)

நிதிக்குத்தகையின் கீழ்ப் பெற்றுக்கொள்ளப்படும் சொத்துக்களைக் குத்தகைக் கொள்வன வாளரது நிதி நிலைமைக் கூற்றில் சொத்துக்களாகக் காட்டமுடியும். இதனை தோற்றத்திலும் பார்க்க கருத்து முக்கியத்துவ எண்ணக்கரு அனுமதிக்கிறது.

LKAS -17 இற்கு ஏற்ப நிதிக் குத்தகையானது பின்வரும் அம்சங்களையும் கொண்டிருக்கும்

- உரிமை மாற்றப்படாத சந்தர்ப்பத்திலும்கூட குத்தகைக்காலம் சொத்தின் பயன்தரு ஆயுட்காலத்தில் பெரும் பகுதியைக் கொண்டிருக்கும்.
- குத்தகையின் தொடக்கத்தில் ஆகக்குறைந்த குத்தகைக் கொடுப்பனவுகளின் நிகழ்காலப் பெறுமதியானது (The present value of the minimum lease payments amounts) ஆகக் குறைந்தது சொத்தின் நியாயமான பெறுமதியின் கணிசமான பகுதியைக் கொண்டிருக்கும்.
- குத்தகைக்குப் பெற்றுக்கொள்ளப்படும் சொத்துக்கள் விசேட தன்மை கொண்டவை. பெரியளவில் மாற்றங்கள் செய்யாமலே குத்தகைக் கொள்வனவாளர் அதனைப் பயன்படுத்த முடியும்.
- குத்தகைக் கொள்வனவாளர் குத்தகை ஒப்பந்தத்தை இரத்துச் செய்தால் அது தொடர்பில் குத்தகை வழங்குவோனுக்கு ஏற்படும் நட்டத்தைக் குத்தகைக் கொள்வனவாளர் பொறுப்பேற்க வேண்டும்.

செயற்பாட்டுக் குத்தகை (Operating lease)

நிதிக் குத்தகையல்லாத ஏனைய அனைத்துக் குத்தகைகளும் செயற்பாட்டுக் குத்தகை ஆகும். இக் குத்தகையில் சொத்தொன்றின் உரிமையுடன் தொடர்புடைய எல்லா இடர்களும் பிரதிபயன்களும் கைமாற்றப்படுவதில்லை.

(Operating lease is a lease other than a finance lease)

இக்குத்தகையின் கீழ்ப் பெற்றுக்கொள்ளப்படும் சொத்துக்களை குத்தகைக் கொள்வனவாளரது நிதிநிலைமைக் கூற்றில் சொத்துக்களாகக் காட்டமுடியாது. எதிர் காலத்தில் செலுத்தவேண்டிய குத்தகை தவணைக்கட்டணமும் பொறுப்பொன்றாக இனங் காணப்படமுடியாது. நிதியாண்டிற்காகச் செலுத்திய தவணைக் கட்டணம் குத்தகைக் கொள்வனவாளரது கணக்குகளில் நிதியாண்டின் செலவொன்றாகக் கருதி கணக்குகளில் பதிவு செய்யப்படும். இதற்கான குறிப்பேட்டுப் பதிவு பின்வருமாறு:

குத்தகைத் தவணைக் கட்டணக் க/கு - வரவு	- XXX
காசு/ செலுத்த வேண்டிய குத்தகைத் தவணைக் கட்டணக் க/கு செலவு	- XXX

நிதிக்குத்தகை – கணக்கீட்டுப் பதிவுகள்

குத்தகைக் கொள்வனவாளர்களின் புத்தகங்களில் கணக்குகள் பதியப்படும் முறைகள் பின்வருமாறு :

1. குத்தகையின் அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்படும் சொத்துக்களின் நியாயமான பெறுமானம் அல்லது காசு விலை

   குறித்த சொத்துக் க/கு - வரவு XXX

   குத்தகைக் கடன் கொடுநர் க/கு - செலவு XXX

2. ஆரம்ப வைப்புக் கட்டணத்தைச் (Down payment) செலுத்துதல்

   குத்தகை கடன் கொடுநர் க/கு வரவு XXX

   காசு/ வங்கிக் க/கு - செலவு XXX

3. நிதி வருடத்திற்கான குத்தகை வட்டியைப் பதிவு செய்தல்

   குத்தகை வட்டிக் க/கு - வரவு XXX

   குத்தகை கடன் கொடுநர் க/கு - செலவு XXX

4. குத்தகைத் தவணைக் கட்டணம் செலுத்துதல்

   குத்தகைக் கடன் கொடுநர் க/கு - வரவு XXX

   காசு/ வங்கிக் க/கு - செலவு XXX

5. சொத்தின் வருட பெறுமானத் தேய்வுத் தொகையைப் பதிவு செய்தல்

   குறித்த சொத்துப் பெறுமானத் தேய்வுக் க/கு - வரவு XXX

   குறித்த சொத்துப் பெறுமானத் தேய்வு ஏற்பாட்டுக் க/கு - செலவு XXX

குறிப்பு: நிதிக் குத்தகையின் கீழ் பெறப்படும் சொத்தின் உரிமையானது ஒப்பந்தகால முடிவில் கைமாற்றப்படும் சந்தர்ப்பத்தில், அச்சொத்தின் வருட பெறுமானத்தேய்வு நேர்கோட்டு முறையில் பின்வருமாறு கணிக்கப்படும்.

$$\text{வருட பெறுமானத் தேய்வு} = \frac{\text{சொத்தின் கிரயம் / நியாயமான பெறுமதி}}{\text{பயன்தரு ஆயுட்காலம்}}$$

சொத்தின் உரிமையானது ஒப்பந்தகால முடிவில் கைமாற்றப்படாத சந்தர்ப்பத்தில், அச்சொத்தில் வருட பெறுமானத்தேய்வானது நேர்கோட்டு முறையில் பின்வருமாறு கணிக்கப்படும்.

$$\text{வருட பெறுமானத் தேய்வு} = \frac{\text{சொத்தின் கிரயம் / நியாயமான பெறுமதி}}{\text{குத்தகை ஒப்பந்தகாலம்}}$$

நிதிக்குத்தகையின் கீழ் நிதிநிலைமைக் கூற்றுத் திகதியில் குத்தகை கடன்கொடுநருக்குச் செலுத்தவேண்டிய தொகை நடைமுறைப் பொறுப்புக்கள், நடைமுறையல்லாப் பொறுப்புகள் என வகைப்படுத்திக் காட்டப்படல்வேண்டும்.

உதாரணக் கணக்கு:-

1) வாணி கம்பனியானது வரையறுக்கப்பட்ட சங்கீதா கம்பனியிடமிருந்து 01.04.2010 இல் நிதிக்குத்தகையின் கீழ் மோட்டார் வாகனம் ஒன்றைப் பெற்றுக் கொண்டது.

குத்தகை ஒப்பந்தம் தொடர்பான நிபந்தனைகள் வருமாறு:

- மோட்டார் வாகனத்தின் ஆயுட்காலம் 05 வருடங்கள்
- குத்தகை ஒப்பந்த காலம் 03 வருடங்கள்
- ஆரம்ப வைப்புப் பணம் ரூ 50000
- வருடாந்த தவணைக் கட்டணம் ரூ. 50000 வட்டி உட்பட இது ஒவ்வொரு வருடமும் மார்ச் 31இல் செலுத்தப்படும்.
- மோட்டார் வாகனத்தின் நியாயமான பெறுமதி ரூ. 170,090 வணிகத்தின் நிதியாண்டு மார்ச் 31இல் முடிவடைகிறது.
- மோட்டார் வாகனத்தின் உரிமையானது குத்தகைக் காலத்தின் முடிவில் கம்பனிக்கு மாற்றப்படும்.

ஒவ்வொரு வருடத்திற்குமான குத்தகை வட்டி பின்வருமாறு:

வருடம்	ரூபா
1	14410
2	10142
3	5358

வேண்டப்படுவது.

1. குத்தகை கடன் கொடுத்தோர் க/கு (3 வருடம்)
2. குத்தகை வட்டிக் க/கு (3 வருடம்)
3. நிதி நிலைமைக் கூற்று மற்றும் வருமானக் கூற்று உருப்படிகள்

சங்கீதா கம்பனியின்
குத்தகை கடன்கொடுநர் க/கு

01.04.2010		01.04.2010	
காசு (ஆ.வை)	50000	மோ.வா	170090
31.03.2011		31.03.2011	
காசு (தவணை)	50000	குத்.வட்டி	14410
மீ/செ	84500		
	184500		184500
31.03.2012		01.04.2011	
காசு (தவணை)	50000	மீ/வ	84500
		31.03.2012	
		குத். வட்டி	10142
மீ/செ	44642		
	94642		94642
		01.04.2012	
		மீ/வ	44642
31.03.2013		31.03.2013	
காசு (தவணை)	50000	குத். வட்டி	5358
	50000		50000

குத்தகை வட்டிக் கணக்கு

31.03.2011		31.03.2011	
கு.க. கொ.	14410	வ.கூ.	14410
31.03.2012		31.03.2012	
கு.க.கொ.	10142	வ.கூ.	10142
31.03.2013		31.03.2013	
கு.க.கொ	5358	வ.கூ.	5358

வருமானக் கூற்று உருப்படிகள்

	31.03.2011	31.03.2012	31.03.2013
விநியோகக் கிரயம்			
மோட்டார் வாகன பெறுமானத்தேய்வு	34,018	34,018	34,018
நிதிச் செலவு			
குத்தகை வட்டி	14,410	10,142	5,358

நிதிநிலைமைக் கூற்று உருப்படிகள்

	31.03.2011	31.03.2012	31.03.2013
நடைமுறைப் பொறுப்பு			
குத்தகைக் கடன்கொடுநர்	39,858	44,642	-
நடைமுறையல்லா பொறுப்பு			
குத்தகைக் கடன்கொடுநர்	44,642	-	-

செய்கை:

50,000 - 10,142 = 39,858

84,500 - 39,858 = 44,642

உசாத்துணை:

- இலங்கை கணக்கீட்டு நியமம் - 17 (LKAS - 17) - Leases.
- A. Presentation on LKAS - 17 - Leases, The Institute of Chartered Accountants of SriLanka.

நிதிக்கூற்றே நீடுழி வாழ்க

செல்வி. செ. யஸ்ரீனா
(2015) வர்த்தகப்பிரிவு

எமது நிலையான நிறுவனத்தில்
கொடுக்கல் வாங்கலோ பற்பல
அனைத்தும் அங்கொன்றும் இங்கொன்றுமாய்
சிதறாமல் சீராக்கும் அறிக்கையே - நீ வாழி.

நிதிநிலைமைக் கூற்றில் சொத்து - பொறுப்புக்கள்
செல்லுமிடம் தெளிவாக்கி
உரிமை அசைவுக் கூற்றில் உரிமையாண்மையை
படமிட்டுக் காட்டும் கருவியல்லவா நீ.

வருமானக் கூற்றில் வருமான வளத்தையும்
ஏற்படும் செலவீனங்களை வெளிப்படுத்தியும்
களங்கமில்லாது காசுப்பாய்ச்சல்களை செப்பனே
காட்டிடும் எக்ஸ் கதிர் படமல்லவா நீ

நிறுவனங்கள் நிதி நிலை செல்லும் பாதையையும்
வளங்களின் வரையறையையும் வரைபடமாய் விளக்கியே
செயற்றிறன் சிதறாமல் சிக்னல் போட்டே காட்டிடும்
வல்ல வழிகாட்டியல்லவா நீ

பொருத்தமான தன்மையை நின் பொழிவாகக் கொண்டு
நம்பகத் தன்மையை நின் ஆயுதமாக்கி - ஐயங்களையும்
விளங்கக் கூடிய தன்மையையும் நின் விரலாக்கி
என்றும் எதிலும் மாறாத் தன்மையை நின் இயல்பாகக் கொண்டு
எம்மை இயக்கும் சக்தியே நீ வாழி பல்லாண்டு

☐ வணிகக் கல்வி

சந்தை துண்டமாக்கலும் இலக்கு சந்தையும்

திருமதி சாதனா வைகுந்தவாசன்
விரிவுரையாளர், சந்தைப்படுத்தல்துறை,
முகாமைத்துவக் கற்கைகள், வணிகபீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

அறிமுகம்

சந்தைப்படுத்தல் என்பது போட்டியான, இலாபகரமான மற்றும் நீடித்து நிலைக்கக் கூடிய பரிமாற்று செயல்முறைகளின் ஊடாக நுகர்வோருக்கான பெறுமதியினை உருவாக்குகின்ற நிறுவனத்தின் மத்திய தொழிற்பாடாக காணப்படுகின்றது. நிறுவனங்கள் செயற்றிறனான முறையில் தனது பொருட்களை அல்லது சேவைகளினை சந்தைப்படுத்துவதற்கு சந்தை இலக்குபடுத்தல் அவசியமாகும்.சந்தையினை இலக்குபடுத்துகின்ற நோக்கத்திற்காக நிறுவனங்கள் சந்தையினை துண்டமாக்குவது அவசியமாக காணப்படுகின்றது.

சந்தை துண்டமாக்கல்

சந்தை துண்டமாக்கல் என்பது சந்தைப்படுத்தல் உத்தியாகும். சந்தை துண்டமாக்கல் என்பது ஒரே வகையான பொருள் தேவையினைக் கொண்ட குழுக்களாக நுகர்வோரை பாகுபடுத்தல்ஆகும். சந்தை துண்டமாக்கலின் முக்கிய நோக்கம் என்னவெனில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட சந்தை துண்டங்களின் தேவைகளுக்கு ஏற்ப சந்தைப்படுத்தல் கலவையினை சந்தைப்படுத்துநர்கள் மாற்றியமைப்பதாகும். அதாவது சந்தைக் கலவையின் திட்டமிடலுக்கு சந்தை துண்டமாக்கல் வழிகாட்டுகின்றதாக அமைகின்றது.

சந்தை துண்டமாக்கல் பின்வரும் அடிப்படைகளில் மேற்கொள்ளப்படலாம்.

- புவியியல் அடிப்படையான துண்டமாக்கல்: இது நாடுகள், மாநிலங்கள், பிராந்தியாங்கள், நகரங்கள் எனும் அடிப்படையில் சந்தையை துண்டமாக்குவதாகும்.
- சமூக விஞ்ஞான அடிப்படையிலான துண்டமாக்கல்: சமூக விஞ்ஞான துண்டமாக்கல் மாறிகளாவன வயது, பாலினம், குடும்ப அளவு, குடும்ப வாழ்க்கைச் சுழற்சி , வருமானம், தொழில், கல்வி, இனம், நாட்டுரிமை, மதம் என்பனவாகும்.
- நடத்தை தொகை அடிப்படையிலான துண்ட்மாக்கல்: வாடிக்கையாளரின் நடத்தை மாறிகளாவன பொருள் தொடர்பான அறிவு , பயன்பாட்டு விகிதம், விசுவாசத் தன்மை சூழ்நிலைக் காரணிகள் என்பனவாகும்.
- உளவியல் விஞ்ஞான அடிப்படையிலான துண்டமாக்கல்: இம் மாறிகளாவன வாடிக்கையாளர் நடவடிக்கை ஆர்வம், கருத்துக்கள் கலாச்சாரம் என்பனவாகும்.

மேற்கூறப்பட்டவாறு துண்டமாக்கப்பட்ட சந்தையினை அடிப்படையாகக் கொண்டு அதாவது நுகர்வோர் வித்தியாசங்களை கருதில் கொண்டு சந்தைப்படுத்தல் கலவையினை திட்டமிடல் வேண்டும்

சந்தை துண்டமாக்கலை உருவாக்கும் போது கருத்தில் கொள்ள வேண்டிய காரணிகள்

- இலாபத்தை அதிகரிப்பதற்கான முக்கியத்துவம்
- ஒரு சந்தை துண்டத்தினுள் வாடிக்கையாளரின் ஒத்த தேவைகளின் தன்மைகள் பல சந்தை துண்டத்தினுள் வாடிக்கையாளரின் வேறுபட்ட தேவைகள்
- ஒரு சந்தைத் துண்டமாக்கலை அடைவதற்கான சந்தை செயற்பாடுகளின் முக்கியத் துவம்
- சந்தை துண்டத்திற்கான வாடிக்கையாளரின் தேவைகளின் இலகு தன்மையும், செலவுகளும்

பயனுறுதியான சந்தை துண்டமாக்கல்

- கணிசமான சந்தை துண்டம் - சந்தை துண்டமானது ஒரு விசேட சந்தை கலவைக்கான உத்தரவாதம் உடைய பரந்த அளவுடையதாக இருத்தல் வேண்டும்.
- அடையாளம் காணக்கூடியதும் அளவிடக் கூடியதும்- இங்கு துண்டத்தின் அளவு அடையாளம் காணக் கூடியதாகவும் அளவிடக் கூடியதாகவும் இருத்தல் வேண்டும்.
- அணுகக்கூடிய தன்மை - துண்டங்களின் தகவல் தொடர்பு மற்றும் விநியோகம் உபயோகத்தில் இருத்தல் வேண்டும்.
- பிரதிபலிப்புகள்- வேறுபடுத்தக்கூடியதான தன்மை ஒரு சந்தை கலவைக்கு வெவ்வேறு சந்தை துண்டங்களிற்கு வெவ்வேறு பிரதிபலிப்புகளை ஏற்படுத்தல் வேண்டும்.

சந்தை துண்டமாக்கலின் மட்டங்கள்

சந்தை துண்டமாக்கல் வழமங்கள்

1. ஒத்த வகையான தெரிவுகள் (Homogeneous preferences)- எல்லா வகையான வாடிக்கையாளரும் ஒரே தெரிவு விருப்பங்களை கொண்டிருப்பர்.
2. வேறுபட்ட தெரிவுகள் (Diffused preferences)- இங்கு வாடிக்கையாளர் முழுமையாக வெவ்வேறு தெரிவுகளை கொண்டிருப்பர்.
3. தொகுதியான தெரிவுகள் (Clustered preferences) - இது வெவ்வேறு குழுத் தெரிவுகளாக காணப்படும்.

சுற்றுலாத்துறைக்கான சந்தை துண்டமாக்கல்

சந்தை துண்டமாக்கலுக்கான அடிப்படைகள்	வகைகள்
விடுமுறை	பாரிய சந்தை, பிரபல்யமான சந்தை, தனிநபர் சந்தை
கேள்வி	முதல்தர இரண்டாம் தர வாய்ப்புகள்
புவியியல்	தேசிய, சர்வதேச
உளவியல்	வாழ்க்கை முறைமை, ஆளுமை, அறிவு
குடியியல்	வயது, பாலினம், மதம்
சமூக பொருளாதாரம்	பணக்காரர், ஏழை, நகரம், கிராமம், படித்தவர், படிப்பற்றவர்
நோக்கம்	வியாபாரம், ஓய்வு, கலாச்சார சுற்றுலா
வயது	வாலிபர், வயது வந்தோர்

இலக்கு சந்தை

சந்தைகள் துண்டமாக்கப்பட்டதும் நிறுவனம் சந்தையினை இலக்குப்படுத்த வேண்டும். இந்த செயல்முறையின் போது நிறுவனம் எத்தனை துண்டங்களை அல்லது எந்த துண்டத்தினை தனது சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளுக்காக இலகுப்படுத்த வேண்டும் என்பதனை தனது வளங்களின் கிடைப்பனவுக்கு ஏற்ப அந் நிறுவனம் தெரிவுசெய்யும். இங்கு ஒவ்வொரு துண்டத்திலும் உள்ள நுகர்வோர் குணாதிசயங்களும் நுகர்வோர் நடத்தையும் வேறுபட்டதாக காணப்படுவதால் ஒவ்வொரு துண்டத்துக்குமான சந்தைப்படுத்தல் கலவையும் (பொருள், விலை, இடம், மேம்படுத்தல்) வேறுபட்டதாக அமையும்.

சந்தை இலக்குபடுத்தல் இடம்பெற்றவுடன் நிறுவனம் தனது பொருளை இடம்பதிப்பதற்குரிய (Postioning) நடவடிக்கையை மேற்கொள்வது அவசியமாகும். இங்கு இடம்பதித்தல் செயல்முறையினை சற்று விளக்கமாக நோக்குவது சந்தைப்படுத்துனர்களுக்கு அவசியமாகும். இடம்பதித்தல் நுகர்வோர்களின் மனதுடன் தொடர்பான விடயமாகும். அதாவது சந்தையில் நிறுவனம் விடுகின்ற பொருளினை நுகர்வோர் எவ்வாறு நினைக்கின்றார்கள் என்பதாகும். இடம்பதிதலின் மூலம் நிறுவனத்தின் பொருளுக்கான தனித்துவமான இடத்தினை இலக்கு நுகர்வோர் மனதில் இடம்பிடிப்பதாகும். இந்த இடம்பதித்தலானது இலக்கு நுகர்வோர்கள் ஏன் குறித்த பொருளை கொள்வனவு செய்யவேண்டும் என்ற கேள்விக்கான விடையினை தரும். மேலும் இடம்பதித்தல் வாடிக்கையாளர் நோக்கிய பெறுமதியினை உருவாக்குவதாகவும் அமையும்

இலக்கு சந்தையினை தெரிவு செய்தல்

- வேறுபாடற்ற சந்தைப்படுத்தல்

  இங்கு முழுச் சந்தையும் ஒரே வளங்களினால் இலக்குபடுத்தப்படுகின்றது. அதாவது இச் சந்தை மிகப் பாரிய சந்தையாகவும் ஒரே வகையான தேவைகளைக் கொண்ட வாடிக்கையாளரை உடையதாகவும் காணப்படுகிறது.

 வேறுபட்ட சந்தைப்படுத்தல்

இச் சந்தை பல சந்தை துண்டங்களை பல்வேறுபட்ட வளங்களினூடாக இலக்குபடுத்தப்படுகின்றது. இங்கு அதியுயர் விற்பனையும் பலமான விலையும் காணப்படும் . ஆனால் இச் சந்தை அதிகளவான செலவினங்களை கொண்டதாகக் காணப்படும்.

 அவதானிக்கப்பட்ட சந்தைப்படுத்தல்

இங்கு ஓர் பரந்த சந்தையில் சிறிய பகுதி இலக்குப்படுத்தப்படுகின்றது. இங்கு நிறுவனம் வரையறுக்கப்பட்ட வளங்களையும் அதியுயர் அறிவினையும், சிறந்த பயனுறுதி தன்மையையும் கொண்டிருக்கும்.

 நுண்பாக சந்தைப்படுத்தல் /

இச் சந்தையானது குறித்த தனிநபர்களையும் பிரதேசங்களையும் தேவைகளுக்குப் பொருத்தமான சந்தைபடுத்தல் திட்டங்களையும் உற்பத்திகளையும் கொண்டிருக்கும். இது இரு வகைப்படும்: தனிச் சந்தைப்படுத்தல், உள்ளகச் சந்தைப்படுத்தல்

இலக்கு தந்திரோபாய தெரிவுக்கான காரணிகளாவன: நிறுவன வளங்கள், உற்பத்தி வேறுபாடுகள், உற்பத்தி வாழ்க்கை வட்டங்கள் , சந்தை வேறுபாடுகள், போட்டியாளரின் சந்தைப்படுத்தல் தந்திரோபாயங்கள் என்பனவாகும்.

முடிவுரை

தற்கால அதிகரித்த போட்டிச் சூழலில் பல வியாபார முயற்சிகள் தொடர்ச்சியாக நிலைத்து இருக்க முடியாமல் இடை நடுவில் மூடப்படுகின்றன. இதற்கான மூலகாரணமாக சரியான சந்தைப்படுத்தல் நடைமுறைகள் பின்பற்றாமையே காரணமாக இருக்க வேண்டும். எனவே முயற்சியாளர்கள் நுகர்வோர்களின் தேவைகளை சரியாக அடையாளப்படுத்தி சரியான சந்தைத் துண்டமாக்கலை மேற்கொண்டு இலக்கு சந்தையினை தெரிவு செய்தல்வேண்டும்.

உசாத்துணை நூல்கள்

Philip Kotler, (2003) Marketing Management, 11th edition, Prentice Hall.

Kotler,P., Keller,K.L. , Koshy,A. and Mithileshwar. (2012). Marketing Management. 14th Edition, Prentice Hall.



காப்புறுதிச் சேவையில் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம்

செல்வி. அ. கிருசாயினி
2015 வர்த்தகப்பிரிவு.

காப்புறுதி என்பது ஓர் இழப்பு அல்லது இடர் ஏற்படக்கூடிய சூழலிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்காக முன்னேற்பாட்டின்படி வழங்கப் படும் நிதி ஆகும். வியாபாரத் துணைநிலைச் சேவையில் காப்புறுதியானது முதன்மை வகிக்கின்றது.

காப்பீடு ஒன்றை பெற்றுக் கொள்வதன் மூலம் எமக்குக் கிடைக்கும் வரப்பிரசாதங்கள் பல பாதுகாப்பற்ற, நிச்சயமற்ற எதிர்காலத்திற்கு நிலையான பாதுகாப்பொன்றைக் காப்புறுதி ஏற்படுத்தும். தமக்கு மாத்திரமின்றி தமது மனைவி குழந்தைகளுக்கும் மற்றும் தங்கி வாழ் வோருக்கும் அதன் பலன்களைப் பெறமுடியும் என்பது எந்தக் காப்பீட்டினதும் பொதுவான தன்மையாகவே உள்ளது.

காப்புறுதிச் சேவையினை எண்ணற்ற நிறுவனங்கள் வழங்குகின்ற பொழுதும், முற்றிலும் அரசுடமையானதும், நீண்டகால அனுபவத்தையும் அதிகூடிய சொத்தையும், அனுபவம்மிக்க அறிவுசார் ஆளணியரையும், அதிகூடிய கிளைகளையும், அனைத்து இலங்கையர்க்கும் காப்புறுதி என்ற தொனிப் பொருளையும் இலங்கை காப்புறுதி கூட்டுத் தாபனம் கொண்டிருப்பதனால் காப்புறுதிச் சேவையில் இலங்கை காப்புறுதிக் கூட்டுத் தாபனத்தைப் பற்றி நோக்குவோமாக.

இலங்கை பாராளுமன்ற சட்ட இலக் கம் 02ன் மூலம் இலங்கை காப்புறுதிக் கூட்டுத் தாபனமானது 1961ல் தேசிய மயப்படுத்தப்பட்டது. 1999.02.03 இல் இது பொதுக்கம்பனியாக மாற்றப்பட்டது. இலங்கை முழுவதும் இலங்கை காப்புறுதிக் கூட்டுத் தாபனமானது ஆயுள் மற்றும் பொதுக் காப்புறுதிகளில் 60% ஆன பங்கினை வகிக்கின்றது. இதன் சொத்து மதிப்பு 100 பில்லியன் ஆகும். இது 18 பிராந்திய அலுவல கங்களின் ஊடாகவும் 126 கிளை அலுவல கங்கள் ஊடாகவும் தனது சேவையினை விஸ்தரித்துள்ளது. தனது கிளை ஒன்றினை மாலைதீவிலும் நிறுவி யுள்ளது. 3000க்கு மேற்பட்ட அலுவலக உத்தியோகத்தர்களையும் 6000 வெளிக்கள உத்தியோகத்தர்களையும் தனது சேவையினை ஆற்றுவதற்கு என தன்னுடன் இணைத்துள்ளது. உயிர் இழப்பு மற்றும் சொத்து இழப்பிற்கான இழப்பீட்டினை நிதி மூலத்தினால் ஈடு செய்தல் இதன் பிரதான பணி ஆகும்.

தூர நோக்கு -

மக்களின் சொத்து, சேமிப்பு மீதான அபாயத்திற்கு எதிராகக் காப்புறுதி ஊடாக ஒவ்வொரு தனி நபருக்கான பாதுகாப்பை வழங்குதல்.

பணி -

இலங்கை மக்கள் 2010 இலிருந்து வருடம் முழுவதும் காப்புறுதி ஊடக நன்மை பெறுவதற்கான சேவை வழங்குதல்.

இலக்கு -

- சந்தைப் பங்கினை அதிகரித்தல்
- மக்களிடையேயான விழிப்புணர்வை ஏற்படுத்தல்
- செயற்பாட்டு வினைத்திறனை அதி கரித்தல்
- வாடிக்கையாளருக்கான சேவை வழங்கலில் மேலதிக முன்னேற்றம்
- செலவீனங்களைக் குறைத்தல்

செயற்பாடுகள் -

- மக்களிடையே நெருக்கமான கூட்டுறவு மற்றும் தொடர்புகளை அதிகரித்தல்.
- காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் நட வடிக்கை விழிப்புணர்வை அதிகரித்து நிறுவனத்தை நிர்வகித்தல்.
- காப்புறுதித் தொழில்நுட்பம் தொடர்பான அறிவு, தகவலை விரிவுபடுத்தல்.
- மக்கள் காப்புறுதி செய்வதற்குப் பங்கு பற்றுதல் உடனான பங்கேற்புக்கு ஒழுங் கான கலந்துரையாடலை ஒழுங்கு படுத்தல்.
- மக்களிடையே ஊக்குவிப்பினை ஏற் படுத்துவதன் வாயிலாகத் தனிப்பட்ட நல் வாய்ப்புக்களை வழங்குதல்.
- புதிய காப்புறுதித் திட்டங்களை உரு வாக்குதல்
- பின் தங்கிய பிரதேசத்திற்கு காப்புறுதிச் சேவையினை விரிவுபடுத்தல் என் பனவாகும்.

இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம் ஆயுள் காப்புறுதி, அபாயக்காப்புறுதி என இருவகையான சேவைகளை வழங்கு கின்றது. ஆயுள் காப்புறுதி என்பது உயிருக்கு எதிராக/ஆயுளுக்கு எதிராகச் செய்யப்படும் காப்புறுதி ஆகும். இக்காப்புறுதியினைச் செய்பவர்கள் உயிர் இழப்பு, உடல் அபாயங் களின் இழப்புக்களை பணரீதியில் ஈடு செய்து கொள்ள முடியும். காப்புறுதி ஒப்பந்த காலத்தினுள் இழப்பு ஏற்படின் ஒப்பந்தப் பெறுமதியுடன் இலாபப்பங்கையும் பெற்றுக் கொள்ளலாம்.

பின்வருவோர் ஆயுள் காப்புறுதி செய் வதற்கு உரிமை உடையவர்கள்.

- 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் தமது ஆயுளுக்கு எதிராகவும்
- கணவன் மனைவிக்கு எதிராகவும்
- தங்கிவாழ்வோர் தங்கிவாழ்வோருக்கு எதிராகவும்
- கடன்கொடுத்தோர் கடன்பட்டவர்க்கு எதிராகவும்
- முதலாளி தொழிலாளிக்கு எதிராகவும்

மரணத்தோடு கடமை முடிந்து விட்ட தென்ற நிலையை மாற்றி அதன் பின்னரும் எதிர்காலத்தைப் பிரகாசமாக்க உயர்ந்த காப்புறுதித் திட்டங்கள் காணப்படுகின்றன. அவை பின்வருமாறு.

- காப்புறுதி திட்டத்தில் இணைந்தபின் மரணம் சம்பவிக்கும் பட்சத்தில் காப்பீடு செய்த முழுத் தொகையும் உடனடியாகப் பெற்றுக் கொள்ள முடியும்.
- காப்புறுதித் திட்டத்தில் இணைந்து மூன்று மாதங்கள் கடந்த பின் உரிய வருக்கு இயலாமை ஏதும் ஏற்படும்போது முழுமையாக இவரைக் காப்புறுதி

நிறுவனம் கையேற்று தொடர்ந்து அதற் கான அனுகூலங்களை வழங்கும்.

- காப்புறுதித் திட்டத்தில் இணைந்தபின் எதிர்பாராத விபத்துக்கள் சம்பவிக்கும் பட்சத்தில் மருத்துவச் சான்றிதழ்களின் அடிப்படையில் செலுத்த வேண்டிய மாதாந்த தொகையும் இழப்பீடும் வழங் கப்படும்.
- வருட இறுதியில் அரசவரிகள் அறவிடப் படும் போது இக்காப்புறுதித் திட்டத்தை உள்ளடக்கி வரிவிலக்கினை பெற்றுக் கொள்ள முடியும்.
- வீடு நிர்மாணித்தலின் போது இக்காப்புறு தித் திட்டத்தை அனைத்து வங்கியிலும் பிணையாகப் பயன்படுத்தும் அங்கீகாரம் உள்ளது.
- இக்காப்புறுதித் திட்டம் முழுமையாக நிறைவேறும் காலத்தில் செலுத்திய தொகையை முழுமையாகப் பெறுவ தோடு அதற்கான இலாபப்பங்கும் வழங் கப்படும்.

இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத் தின் ஆயுள் காப்புறுதியினை தெரிவு செய்யும் போது ஏறத்தாழ 50 வகையான கணக்குகள் அறிக்கைப்படுத்தப்பட்டுள்ளன. அவை ஒவ் வொன்றும் மக்களிடையே வெவ்வேறு வகை யான தேவைகளை பூர்த்தி செய்கின்றன.

உதாரணம்: -

யசஇசுரு – குடும்பப் பாதுகாப்பை உறுதிப் படுத்தும் காப்புறுதி

ஜனதிரி – மக்களின் வாழ்க்கையின் உயர் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் காப்புறுதி.

மினிமுத்து – குழந்தைகளுக்கான காப்புறுதித் திட்டம்

மினிமுத்து பரித்தியாக – பிள்ளை களுக்கான காப்புறுதித்திட்டம்

திவிதிலின – மக்களின் விருப்பம் போல வாழ நெகிழ்வுத் தன்மையைத் தரும் காப்புறுதித்திட்டம்

ப்ரீடம் ஓய்வுதியத் திட்டம் – விருப்பத்திற் குரியதைப் பெறும் சுதந்திரத்தைத் தரும் காப்புறுதித்திட்டம்

பிரகுண காப்புறுதி – காப்புறுதி செய் வோர் தம் தொகையை இரு மடங்காக்கி பெறுவதற்குரிய காப்புறுதித் திட்டம்

இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத் தின் வெவ்வேறுபட்ட ஆயுட்காப்புறுதியினைத் தொடர்ந்து பொதுக் காப்புறுதியில் விபத்துக் காப்புறுதி, கடலபாயக் காப்புறுதி, தீ அபாயக் காப்புறுதி, கள்வர்பயக் காப்புறுதி, நம்பிக்கைப் பொறுப்புக் காப்புறுதி எனப் பல பிரிவுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இலங்கை காப்புறு திக் கூட்டுத்தாபனம் சிறந்த பலன்களை வழங் கக்கூடிய காப்புறுதித் திட்டங்கள் பலவற்றை திட்டமிட்டுள்ளது. அந்த வகையில்,

- "Srilanka Insurance" வழங்கும் நிகரற்ற மோட்டார் வாகனக் காப்புறுதியில் "Motor Plus" தற்போது 100% அரசாங்கத்தின் மேற்பார்வையில் சம்பூர்ணமாகவுள்ள துடன் தொழில் நிபுணத்துவம் மிக்க அனுபவத்தாலும் காப்புறுதியாளர்களை மேலும் சிறப்பாக பாதுகாக்கின்றது.
- இலங்கை வர்த்தக சமூகத்திற்கான பூரணமான வியாபாரக் காப்புறுதித் திட்டம்.
- விடுமுறை, யாத்திரை சுற்றுலா மற்றும் வெளிநாட்டுக்கல்விக்காக விமானப் பயணத்தினை மேற்கொள்ளும் தனி நபர்கள் மற்றும் வர்த்தகர்களுக்கு வழங்கப்படும் சுற்றுலாப் பயணக் காப்பு றுதித்திட்டம்.

- வீட்டு உரிமையாளர்களுக்காக வழங்கப்படும் வீட்டுக் காப்புறுதித்திட்டம்
- தனிநபர் அரச மற்றும் தனியார்துறை சார்ந்தவர்களுக்கான மருத்துவ காப்புறுதித்திட்டம்.
- மீன்பிடி படகுகள், பாரிய சரக்குக் கப்பல்கள் என்பவற்றை உள்ளடக்கிய கடலபாயக் காப்புறுதித்திட்டம்.

இவ்வாறாக காலத்துக்குக் காலம் புதிய புதிய காப்புறுதி வகைகள் காப்புறுதி நிறுவனங்களால் அறிமுகப்படுத்தப்படுவதோடு அதன் மூலம் கிடைக்கும் நன்மைகளும் அதிகரித்துக் கொண்டே செல்கின்றது.

உசாத்துணை நூல் -
இணையத்தளம் -
www.Srilanka Insurance .com
ஆசிரியர் வழிகாட்டி - தரம் 12



தீர்மானம் எடுத்தல்

செல்வி க.ஆரபி
2015- வர்த்தகப் பிரிவு

நிறுவனங்கள் தம் முகாமைப் பணிகளை சிறப்பாக மேற்கொள்வதற்கு திட்டமிடல், ஒழுங்கமைத்தல், நெறிப்படுத்தல், கட்டுப்படுத்தல் போன்ற முகாமைச் செயற்பாடுகளை மேற்கொள்கின்றன. இவ்வாறான முகாமைச் செயற்பாடுகளுடன் தீர்மானம் எடுத்தல் என்ற செயற்பாடும் வணிகங்களில் முக்கியம் வாய்ந்ததாக காணப்படுகிறது. ஒரு நிறுவனத்துக்கு அதன் முகாமைத்துவம் எவ்வளவு முக்கியமானதோ அதே அளவுக்கு தீர்மானம் எடுத்தலும் முக்கியமானதாகின்றது. இத் தீர்மானமானது நபர், இடம், காலம் என்பவற்றிற்கு ஏற்ப மாற்றமடையக்கூடியது.

தீர்மானம் எடுத்தல் என்பதனை பல வகைகளாக பிரித்து நோக்கலாம். அதாவது நிச்சயத் தன்மை அடிப்படையில், நிகழ்ச்சி தீர்மானம், நிகழ்ச்சியற்ற தீர்மானம் எனவும் பங்கு கொள்வோரின் எண்ணிக்கை அடிப்படையில் தனித் தீர்மானம், கூட்டுத் தீர்மானம் எனவும் நோக்கத்தின் அடிப்படையில் தந்துரோபாய தீர்மானம், உபாய முறைத் தீர்மானம் செயற்பாட்டுத் தீர்மானம் எனவும் பாகுபடுத்தப்படும்.

வணிகங்களின் தீர்மானம் எடுத்தல் என்பது "பிரச்சினை தொடர்பாக பல்வேறு மாற்று வழியை தெரிந்தெடுத்து அவற்றில் மிகச்சிறந்த மாற்று வழியை தெரிவு செய்யும் செயற்பாடு" எனலாம். ஒரு நிறுவனத்தில் உள்ள முகாமை மட்டங்களான உயர்மட்ட முகாமை, நடுத்தரமட்ட முகாமை, கீழ்மட்ட அல்லது 1ஆம் வரிசை முகாமை தமது அதிகார எல்லைக்குள் தீர்மானங்களை மேற்கொள்ளலாம். தீர்மானம் எடுக்கும் திறனானது சில வேளைகளில் இடர்மிக்கதாக அமையலாம். ஏனெனில் தவறான தீர்மானத்தை எடுத்து அது தோல்வியடையும் போது பாரிய இழப்பை வணிகங்கள் எதிர்கொள்ள நேரிடும் அதற்காக தீர்மானம் எடுக்கும் போது சில படிமுறைகளை வணிகங்கள் பின்பற்றுகின்றன.

வணிகங்கள் பின்பற்றும் தீர்மானம் எடுத்தல் படிமுறைகள்

பிரச்சினையை இனங்காணல்
↓
மாற்றுத் தீர்வை கட்டியெழுப்புதல்
↓
சிறந்த மாற்று வழியை தெரிவு செய்தல்
↓
மாற்று வழியை நடைமுறைப்படுத்தல்
↓
தீர்மானத்தின் விளைதிறனை மதிப்பிடல்

தீர்மானம் எடுத்தலின் முதல் படிமுறையான பிரச்சினையை இனம் காணல் என்பது நிறுவனம் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்ளலாம் இங்கு பிரச்சினை என்பது

எதிர்பார்க்கப்பட்ட நிலைமைக்கும் நடை முறையில் காணப்படும் நிலைமைக்கும் இடை யிலான வேறுபாடு ஆகும். பிரச்சி னையை விளங்கிக் கொள்வது அதற்கு சரி யான தீர்வை முன்வைக்க உதவும். உதா ரணமாக - நிறுவனம் ஒன்றின் பிரச்சினை முன்னைய ஆண்டைவிட இவ்வாண்டில் விற்பனை குறைவாக இருத்தல் என்பதாகும்.

இரண்டாவது படிமுறையான மாற்றுத் தீர்வை கட்டியெழுப்புதல் என்பது ஒன்றுக்கு மேற்பட்ட மாற்றுத் தீர்வுகளை உருவாக்கல். உதாரணமாக - நிறுவனத்தின் விற்பனை குறைவு எனும் பிரச்சினையை தீர்ப்பதற்கான மாற்று வழிகளாக பொருள் பற்றிய விளம்பரம் செய்தல், ஒரு பொருளுடன் இன்னொரு பொருளை இணைத்து வழங்கல், பொருளின் விலையை சிறு அளவில் குறைத்தல் என்பன வாகும்.

மூன்றாவது படிமுறையான சிறந்த மாற்றுவழியை தெரிவு செய்தல் என்பது உருவாக்கப்பட்ட ஒவ்வொரு மாற்றுத்தீர்வை யும் நன்கு ஆராய்ந்து கூடிய நன்மையான நடைமுறைக்கு சாத்தியமான தீர்வை தெரிவு செய்தல் ஆகும். உதாரணமாக:- மேலே கூறிய சில மாற்று வழிகளில் நிறுவனமானது சந்தையை நன்கு ஆராய்ந்து நன்மையா னதும் நடைமுறைக்கு பொருத்தமானது மான மாற்று வழியை தெரிந்தெடுத்து விற்ப னையை அதிகரிக்க முயல வேண்டும்.

நான்காவது படிமுறையான மாற்றுத் தீர்வை நடைமுறைப்படுத்தல் என்பது நிறு வனம் பிரச்சினைக்கு தீர்வாக எடுத்த முடிவை அக்கறையுடன் செயற்படுத்தல் ஆகும். உதார ணமாக - சிறந்த மாற்றுத் தீர்வை நிறுவனம் தெரிந்தெடுத்து அதன்பின் அதனை சந்தை யில் அமுல்படுத்த வேண்டும்.

இறுதிபடிமுறையான தீர்மானத்தின் விளைதிறனை மதிப்பிடல் என்பது நடை முறைப்படுத்தப்படும் தீர்மானத்தின் பெறு பேறுகள் எவ்வாறு உள்ளது என்பதை மதிப்பீடு செய்து கொள்ள வேண்டும். உதாரணமாக - சந்தையில் விற்பனையின் புரள்வை அவ தானித்து தாம் மேற்கொண்ட தீர்மானம் நன்மையானாதா? அல்லது தீமையானதா? என மதிப்பீடு செய்ய வேண்டும்.

இவ்வாறு தீர்மானத்தை படிமுறை ஒழுங்கில் மேற்கொள்ளும் வணிகங்கள் தமது பிரச்சினைக்கான சிறந்த தீர்வை இலகு வாக எடுத்துக் கொள்ளமுடியும் எனலாம்.

உசாத்துணை :-

England Business Studies -Dade hall
Rove Jonen

நிறுவன வளர்ச்சியில் ஊக்கப்படுத்தல்

செல்வி. ச.மயூரி
2015 வர்த்தகப்பிரிவு.

நிறுவனத்தின் குறிக்கோளையும் இலக்கையும் அடைந்துகொள்ளும் நோக்கோடு தன்கீழ் சேவையாற்றுகின்ற ஊழியர்களை "தூண்டுதல்" ஊக்கப்படுத்தலாகும். ஊக்கம் ஊழியர்களின் உள்ளுணர்வாகும். நிறுவனத்தில் ஊழியர்களை ஊக்குவிப்பவராக முகாமையாளர் அல்லது உரிமையாளர் காணப்படுகின்றார். இவ் இருவருக்கும் ஊழியர்களுக்குமிடையில் அந்நியோன்னியத் தொடர்பு காணப்பட வேண்டும். ஊழியர்கள் முகாமையாளர் கூறும் கருத்துக்களிற்கு மதிப்பளித்து நடக்க வேண்டும். அதே போல் முகாமையாளரும் ஊழியர்கள் கூறும் கருத்துக்களிற்கு மதிப்பளித்து நடக்க வேண்டும்.

நிறுவனத்தின் முதுகெலும்புகளாக காணப்படுபவர்கள் ஊழியர்கள். ஊழியர்கள் இன்றி நிறுவனம் தொடர்ந்து செயல்பட முடியாது. இயந்திரங்கள் தொழில்புலங்களில் அறிமுகமாகியுள்ள போதும் அவற்றை இயக்குவதற்கு ஊழியர்களே தேவைப்படுகின்றனர். முகாமையாளர் ஊழியர்களை சிறப்பான முறையில் ஊக்கப்படுத்துவதன் மூலம் நிறுவனத்தின் இலக்கினை இலகுவாக அடைந்து கொள்ள முடியும்.

ஊக்கப்படுத்தலுக்காக பின்வரும் தந்திரோபாயங்கள் நிறுவனங்களால் பின்பற்றப்படுகின்றன. அவை:

வேலையினைச் சிறப்பாக்கல் (Job Enrichment)

அதாவது ஊழியருக்கு வேலை தொடர்பான பொறுப்புக்களையும், அங்கீகாரத்தினையும், சாதனைகள் புரிவதற்கான வாய்ப்பினையும், அதிகரிக்கும் பொருட்டு வேலை தொடர்பான செயற்பாடுகளை அதிகரித்தல் இதுவாகும். உதாரணமாக-ஒருசிரேஷ்டஎழுதுவினைஞருக்கு ஒரு கிளையின் நடவடிக்கைகளினை மேற்பார்வை செய்யப் பொறுப்பளிக்கப்படுதல் மூலம் வேலையை சிறப்பாக்கலாம்.

வேலை விரிவாக்கம் (Job Enlargement)

வேலை விரிவாகம் எனப்படுவது ஊழியருக்கு குறிப்பிட்ட வேலையுடன் தொடர்பான பல்வேறு வகையான செயற்பாடுகளையும் அதிகரித்தலாகும். உதாரணமாக- ஒரு ஆசிரியரின் பிரதான செயற்பாட்டுடன் மேலும் பாடத்திட்டத்தை தயாரித்தல், வினாத்தாள் தயாரித்தல், விடைகளைத் திருத்துதல் போன்ற பல செயற்பாடுகளை வழங்கிருப்பின் அதனை வேலை விரிவாக்கம் எனலாம்.

வேலைச் சுழற்சி (Job Rotation)

வேலைச்சுழற்சி என்பது ஒரு ஊழியர் ஒரு குறிப்பிட்ட கால இடைவெளிக்கொரு தடவை ஒரு வேலையில் இருந்து இன்னொரு

வேலைக்கு அமர்த்தப்படும் முறை இதுவாகும். இது முகாமையின் தீர்மானத்திற்கு அமைவாக இடம்பெறும். உதாரணமாக வங்கியில் வேலை செய்யும் ஊழியர் ஒருவர் குறிப்பிட்ட கால இடை வெளியில் வாடிக்கையாளர் சேவைப்பகுதியில் இருந்து கடன் பகுதிக்கு மாற்றப்படுவதாகும்.

நெகிழ்ச்சியாக்கப்பட்ட வேலை நேரம் (Flexible Working Hours)

பொதுவாக வேலை நேரத்தை நிறுவனமே தீர்மானிக்கின்றது. ஆனால் சில நிறுவனங்கள் ஊழியர்களை ஊக்குவிப்பதற்காக நெகிழ்ச்சியாக்கப்பட்ட வேலை நேரத்தை அறிமுகப்படுத்துகின்றன. நிறுவனத்தால் அனுமதிக்கப்படும் நேரவரையறைக்குள் ஊழியர்கள் தாமாகவே தமது வேலை நேரத்தை ஆரம்பித்து நிறைவு செய்யும் நேரத்தை தீர்மானித்துக் கொள்வதைக் குறிக்கும்.

ஊழியர்களை உடமையாக்குதல் (Employee Ownership)

சில நிறுவனங்கள் ஊழியர்களை ஊக்குவிக்க தாம் உழைக்கும் இலாபத்தில் ஒரு பகுதியை ஊழியருக்கு பணவடிவில் வழங்குகின்றது. சில நிறுவனங்கள் தாம் உழைக்கும் இலாபத்தில்ஒரு பகுதியை ஊழியர்களுக்கு பண வடிவில் அல்லாது பங்குப் பத்திரமாக வழங்கி அவர்களை அந்நிறுவனத்தின் உடமையாளர்களாக ஆக்குகிறது. இதுவே ஊழியர்களை உடமையாக்குதல் என்பர்.

இலக்கினை நிர்ணயித்தல் (Goal Setting)

வழமையாக நிறுவனத்தின் இலக்கு நிறுவன முகாமையாளரினால் நிர்ணயிக்கப்படுகின்றது. ஆனால் சில நிறுவனங்களில் முகாமை ஊழியர்களுடன் இணைந்து இலக்கை நிர்ணயித்துக் கொள்கின்றது. இதனால் ஊழியர் ஊக்குவிக்கப்பட்டு நிறுவன வளர்ச்சியில் பங்கேற்பதைக் காணமுடிகிறது. இதுவும் ஊழியர்களை ஊக்குவிப்பதற்கான தந்திரோபாய முறையாக உள்ளது. Peter drucker என்பவரினால் முன்வைக்கப்பட்ட நோக்கத்தைக் கொண்ட முகாமைத்துவ முறை இதனையே குறித்து நிற்கின்றது.

வணிகங்களில் ஊழியர்கள் தமது கருமங்களினை விருப்பத்துடனும் ஆர்வத்துடனும் செய்ய அவர்களுக்கு பல்வேறு விதமான நிதிசார் ஊக்குவிப்புக்களும் நிதி சாராத ஊக்குவிப்புக்களும் வழங்கப்படுகின்றன. ஊழியரை ஊக்கப்படுத்துவதற்காக பண அடிப்படையில் வழங்கும் அனைத்து ஊக்கப்படுத்தலும் நிதிசார் ஊக்கப்படுத்தலாகும். ஒரு ஊழியனுக்கு வழங்கும் நிதிசார் ஊக்குவிப்புக்களாக பங்கு இலாபம் வழங்குதல், வட்டியில்லாக் கடன் வசதியளித்தல், குறைந்த வட்டியில் கடன் வசதி, சம்பள முற்பண வசதி, ஊழியருக்கு குறைந்த விலையில் பொருட்களை வழங்குதல், மிகை ஊதியம் (Overtime), சம்பள அதிகரிப்பு, ஊழியர் சேமலாப நிதியத்திற்கு பங்களிப்புச் செய்தல் (ETF), கடன் (Loan) சேவை போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

அடுத்ததாக பண அடிப்படையில் அல்லாது வழங்கப்படும் ஏனைய அனைத்து ஊக்கப்படுத்தலும் நிதிசாரா ஊக்கப்படுத்தலாகும். நல்ல வேலைச்சூழல், பதவி உயர்வு வழங்கல், பயிற்சிவசதி, மருத்துவ சுகாதார வசதியளித்தல், தொழில் பாதுகாப்பை உறுதிப்படுத்தல், சுற்றுலா வசதியளித்தல், சீரூடை வழங்கல், தங்குமிட வசதிகள், முகாமையுடன் ஊழியர்களை தொடர்புபடுத்தல் போன்றவற்றை நிதிசாரா ஊக்கப்படுத்தல்கள் எனக் கூறிக கொள்ளலாம்.

நிறுவனம் ஒன்றின் வளர்ச்சியினில் அக்கறை கொள்ளும் தரப்பினர்களில் ஊழியரும் ஒருவராவார். இதனால் நிறுவனமானது மனித வளத்தினை சிறப்பாக முகாமை செய்து கொள்வதன் மூலம் அந்நிறுவனத்தின் நோக்கினையும், இலக்கினையும் அடைந்து கொள்ளமுடியும். எனவே ஊழியரை ஊக்கப்படுத்தி கருமங்களை நெறிப்படுத்தி வளர்ச்சிப் பாதையில் வணிகத்தினை வழிநடத்திச் செல்வது உரிமையாளரினுடைய பணியாக அமைகின்றது.

உசாத்துணை : அறிவுத் தேடல், இணையம்.

வணிக உலகில் விளம்பரத்தின் பங்கு

செல்வி ம. மேரி பிரியங்கா
2015 வர்த்தகப்பிரிவு.

நிறுவனத்தின் உற்பத்திப் பொருள்/ சேவை தொடர்பில் பணத்தை செலவிட்டு தனிப்பட்டவர்களுக்கு அல்லாமல் பொதுமக்க ளுக்காக பல்வேறு விளம்பர சாதனங்களை பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் தகவல் அளிப்பே விளம்பரம் எனப்படுகின்றது. சுருக்க மாக விளம்பரம் என்பதை "எடுத்துச் சொல்லி விற்பது" எனக் குறிப்பிடலாம்.

இன்று எங்கு பார்த்தாலும் விளம் பரத்திற்காக அதிகளவில் பணம் செலவு செய்யவதை காணலாம். ஒரு நிறுவனம் தனது விற்பனையை உச்சப்படுத்த அல்லது தன்னுடைய கருத்துக்களை மக்களிடத்தில் தெளிவான முறையில் எடுத்துரைக்க விளம் பரத்தை பயன்படுத்துகின்றது. அதிலும் குறிப்பாக சுவரொட்டி, தொலைக்காட்சி, வானொலி, செய்தித்தாள், இணையத் தளங்கள் போன்றவற்றினூடாக அவை மேற் கொள்ளப்படுகின்றன. விளம்பரங்கள் விரை வாக செல்வதுடன் மக்கள் மனதில் சிறந்த இடத்தையும் பிடித்துக்கொள்கின்றன.

இத்தகைய விளம்பரத்தின் அடிப்படை அம்சங்களாக

- எல்லோருக்கும் பொதுவான அறிவிப்பாக இருத்தல். (Public Presentation)
- மீண்டும் மீண்டும் வழங்கப்படும் தகவ லாக இருத்தல். (Prevasiveness)
- கவர்ச்சிகரமாக விபரிக்கப்படுதல். (Amplified)
- தனிப்பட்டதாக அல்லாதிருத்தல் (Impersonality)

என்பன காணப்படுகின்றன.

மேம்படுத்தல் பணிகளில் ஒன்றான விளம்பரமானது தயாரிக்கப்படும் நோக்கத்தின் அடிப்படையில் நான்கு வகையாக எடுத்துக் கூறப்படுகிறது.

1. **தகவல் வழங்கல் (To Inform)**

வாடிக்கையாளருக்கு பின்வரும் விடயங் கள் தொடர்பாக தகவல்களை தருவது இதன் எதிர்பார்ப்பாகும்.

- புதிய பொருள் / சேவை தொடர்பாக தகவல் வழங்குதல்.
- விலையை மாற்றுதல் தொடர்பாகவும், உற்பத்தியாளருடைய செயற்பாடுகள் தொடர்பாகவும் தகவல் வழங்குதல்.
- பொருள் / சேவை மூலம் கிடைக்கும் அனுகூலங்களை அறியச் செய்தல்.
- வாடிக்கையாளர் சந்தேகம், தவறான மனப்பாங்குகளை திருத்துதல்.

2. **தூண்டுதல் (Persuade)**

வியாபாரக்குறித் தெரிவு தொடர்பான எண்ணத்தை உருவாக்கி வணிகத்தின் பொருளை கொள்வனவு செய்ய தூண்டுவது மட்டுமன்றி வாடிக்கையாளர் மனங்களை மாற்றி தாமதிக்காது கொள்வனவு செய்யத் தூண்டுவதே இதுவாகும்.

3. ஞாபகமூட்டுதல் (Reminding)

கிட்டிய எதிர்வரும் தினத்தில் பொருள் / சேவை அவசியமாகும் என நினைவூட்டு வதுடன், அவற்றை கொள்வனவு செய்யக் கூடிய இடங்களையும், அப்பொருள் / சேவை தொடர்பான விடயங்களை ஞாபகமூட்டுதலே இதுவாகும்.

4. வலுவூட்டுதல் (Reinforce)

நிறுவனத்தின் உற்பத்தியானது தரமானது என்பதை உறுதிசெய்து உற்பத்தியை இனங்காண்பதற்குரிய செய்தியை வழங்குதல் கொள்வனவு செய்ய ஊக்குவித்தல், போன்றவை இதனுள் அடங்கும்.

ஒரு விளம்பரமானது பலருடைய உழைப்பும், நேரமும், பெருமளவில் பொருட் செலவும் செய்து தயாரிக்கப்படும் இத்தகைய விளம்பரங்கள் வெற்றி அடையும் வகையில் மக்களை கவரும் வண்ணம் அமைதல் அவசியமானதொன்றாகும். ஆனால் இப்பணி மிகவும் நுட்பமானது. சாதனைத்திறன் படைத்தவர்களே இதற்கு தேவைப்படு கிறார்கள். இவர்களது ஆக்கத்திறன் மூலமாக வெளிவரும் விளம்பரங்களைப் பார்த்து நுகர்வோர் ஒருமுறை மட்டும் அல்லாது மீண்டும் மீண்டும் பொருட்களை வாங்க தூண்டுவிக்கப்படுகின்றனர்.

இவ்வாறு தயாரிக்கப்படும் விளம்பரத் தினை 4 வகையாக வகைப்படுத்தமுடியும்.

1. உறுதிசெய்யும் விளம்பரம்
Testimo nial Advertising

இது பொருட்கள், சேவைகளுக் கான விளம்பரம் தொடர்பில் பிரசித்திபெற் றோரை பயன்படுத்துதலை குறிக்கின்றது.

உதாரணமாக :- திரைப்பட நட்சத்திரங்கள், விளையாட்டு வீரர்களை கொண்டு சில பொருட்கள்/சேவைகளை பிரசித்தப்படுத்துதல் இதுவாகும்.

2. வாழ்க்கைச் சாயல் விளம்பரம்
Life style Advertising

குறித்த பொருள் / சேவை தனிநபர் வாழ்வுக்கு அத்தியாவசியமாகின்றது என உறுதி செய்து அவற்றை சந்தைக்கு அளிப்பு செய்யும் விளம்பரம் இதுவாகும். உண்மை யாக இவ்விளம்பரத்தை ஆராய்வுத்திறனுடன் புரிந்து கொள்ளவேண்டும்.

3. விபரமான விளம்பரம் -
Informative Advertising

விளம்பரம் செய்யப்படும் பொருள் / சேவை தொடர்பான விலை, அதில் உள்ள டங்கியுள்ள பொருட்கள், பயன்படுத்த வேண் டியமுறை, நலன்கள், உத்தரவாதம் என்ப வற்றை வெளிப்படுத்தி செய்யப்படும் விளம்பரம் இதுவாகும். சில சந்தர்ப்பங்களில் எழுத்து மூலமாகவும் இதைக் காணலாம்.

4. மீண்டும் மீண்டும் மறுவிளம்பரம்
Repetitive Advertising

பொருள் / சேவை தொடர்பாக மீண்டும் மீண்டும் விளம்பரம் செய்வதை இது குறிக்கும். நுகர்வோர் மனங்களில் பொருள் / சேவைகளின் பெயரைப் பதிவுசெய்வது இதன் நோக்கமாகும். இத்தகைய விளம்பரங்களில் (Jingless and Slogans) பாடல்களும் எளிமை யான பதங்களும் பயன்படுத்தப்படும்.

இவ்வாறாக விளம்பரத்தை தயாரிக்க முற்படும்போது இலக்கு வாடிக்கையாள ரின் தன்மை, பொருளின் தன்மை அல்லது வகை, விளம்பரச் செலவு, விளம்பர சாதனக் கிடைப்பனவு, அரச கட்டுப்பாடு மற்றும் போட்டி நிறுவனம் பயன்படுத்தும் விளம்பரசாதனம், மாற்று சாதன ஒப்பீட்டு அனுகூலம் என்ப வற்றையும் கருத்தில் கொள்ளவேண்டியது கட்டாயமானதாகும்.

இவ்வாறு காணப்படுகின்ற விளம் பரங்களானது இன்றைய வணிக உலகில் பல்வேறு வகையான தாக்கங்களை உரு வாக்கியுள்ளது. விளம்பரம் வணிகம் ஒன்றிற்கு முக்கியமானதொரு வெற்றியை பெற்றுத்தர செயற்பட்டாலும் அவ்விளம்பரத் தினால் பல தீமைகளையும் அனுபவிக்கக் கூடிய நிலை உண்டு. அதிலும் சிறப்பாக இன்று போலியான விளம்பரப் பேச்சுக் களை நம்பி ஏமாற்றப்பட்டவர்களும் தம் வருமானங்களை தேவையற்ற விதத்தில் செலவழித்து பாதிப்புக்களைத் தேடிக்கொண் டவர்களும் உள்ளனர். மாறாக விளம் பரத்தினால் போலிகளை இனங்கண்டு சரியான தெரிவை மேற்கொள்ளமுடியும் என்பதும் தெட்டத்தெளிவு.

இந்த வகையில் விளம்பரமானது ஒரு கூரியமுனை கொண்ட கத்தி போன்றது. அக்கத்தியை நாம் சரியாகவோ / தவறாகவோ பயன்படுத்தினால் உண்டாகும் விளைவுகள் நுகர்வோரையும், உற்பத்தியாளரையுமே பாதிக்கும். ஆகவே விளம்பரதாரர்கள் இவற்றை கருத்திற்கொண்டு தமது சுய இலாபத்தை எதிர்பார்க்காமல் சமூகப் பொறுப்புடன் விளம்பர நெறிகளை கடைப் பிடிக்கவேண்டும். இல்லாது போனால் விளம் பரம் சமூகத்திற்கு பேராபத்தை கொண்டு வரும் என்பதில் ஐயமில்லை.

எனவே வணிக உலகின் அபிவிருத்தி யில் பெரும்பங்கை கொண்டுள்ள விளம் பரங்களை வணிகங்கள் நல்ல கருத்துக் களைப் பரப்பும் நற்பணிக்காகப் பயன்படுத்தி நாட்டை முன்னேற்ற வேண்டும்.

உசாத்துணை நூல்கள்

- உயர்தர வணிகக்கல்வி பகுதி - I,ம சிவநேசராசா, ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி.



பங்குச் சந்தையின் விலைச் சுட்டிகள்

செல்வி எஸ். எஸ்ரெபிக்கா
2015 வர்த்தகப்பிரிவு.

பங்குச் சந்தையில் பங்குகளின் விலை மட்டங்களில் ஏற்படும் மாற்றங்களை எண் கணித ரீதியில் குறித்து காட்டுவதே பங்கு விலைச் சுட்டி ஆகும்.

பட்டியற்படுத்தப்பட்ட கம்பனிகளின் பங்குகள் கொள்வனவு மற்றும் விற்பனை களை நிர்வகிக்கின்ற நிறுவகமாக கொழும்பு பங்கு பரிவர்த்தனை விளங்கு கின்றது. இந்நிறுவனம் கம்பனிகளின் செயற்பாட்டுத் திறனை மதிப்பிடுவதற்காக பங்குச் சந்தைச் சுட்டிகளை பயன்படுத்தப் படுகின்றது.

கொழும்பு பங்கு பரிவர்த்தனை நிலை யத்தில் பயன்படுத்தப்படுகின்ற சில பங்கு சந்தை சுட்டிகள் வருமாறு:

1. அனைத்து பங்கு விலைச்சுட்டி (All Share Price Index)

அனைத்து பங்கு விலைச்சுட்டி சந்தை முதலாக்கத்தின் அடிப்படையில் பரிவர்த் தனையினால் பட்டியற்படுத்தப்பட்டுள்ள கம்பனியின் வாக்குரிமையுள்ள அனைத்து சாதாரண பங்குகளையும்கவனத்திற்கொண்டு கணிப்பீடு செய்யப்படுகின்றது. இந்த மதிப்பீட்டு முறையானது பெரிய நிறுவனங்களின் பங்குகளில் ஏற்படும் விலைத்தளம்பல்கள் சுட்டியின் மீது குறிப்பிடத்தக்க செல்வாக்கு செலுத்தும் வகையில் அமைந்துள்ளன. இந்த அளவீட்டுமுறை தெரிவில் பொது பொருளாதார நிலைமைகள் சிறிய நிறுவனங்களைவிட பெரிய நிறுவனங்கள் அதிகளவு செல்வாக்கு செலுத்துகிறது எனும் எடுகோள் அடிப்படையில் அமைந்துள்ளது.

$$\text{அனைத்து பங்கு விலைச்சுட்டி} = \frac{\text{நடைமுறை சந்தை மூலதனவாக்கம்}}{\text{அடியாண்டு சந்தை மூலதனவாக்கம்}} \times 100$$

2. மொத்த வருவாய் சுட்டி

2004ம் ஆண்டு ஜனவரி மாதம் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த இந்த மொத்த வருவாய் சுட்டி நாளாந்தம் விலைச்சுட்டி களுக்கு மேலதிகமாக கணிப்பிடப்படு கின்றன. மொத்த வருவாய் சுட்டி மூலம் விலை மாற்றங்கள் மற்றும் பங்குலாப வருமானம் ஆகிய இரு காரணிகளி லிருந்து கிடைக்கும் இலாபங்கள் பிரதிபலிக் கப்படுகின்றது. எனவே முதலீட்டாளரின் முன்னோக்கு அடிப்படையில் வருமானத்தை அளவிடும் சிறந்த அளவுகோலாக மொத்த வருவாய் சுட்டி அமைந்துள்ளது. மொத்த வருவாய் சுட்டி கணிப்பிடும் போது பங்கொன்றின் மூலம் திரட்டப்படும் பங்கு இலாபம் மீண்டும் சந்தையில் முதலிடப்படுவதாக அனுமானிக்கப்படுகிறது.

$$\text{மொத்த வருவாய் சுட்டி} = \frac{TRIt\ (PIt + XDJ)}{Piy}$$

இங்கு,

TRIt - மொத்த வருமானச் சுட்டியின் இன்றைய பெறுமதி

PIt - அடிப்படை விலைச் சுட்டியின் இன் றைய பெறுமதி

Piy - அடிப்படை விலைச்சுட்டியின் முதல் நாள் பெறுமதி

XDJ - பங்கு இலாப விலக்கு சீர் செய்கை

3. துறைசார் விலைச்சுட்டி

20 துறைரீதியான சுட்டிகள் நாளாந்த போக்கின் அடிப்படையில் கணக்கிடப்பட்டு வியாபார நிறைவில் காணப்படும் பெறுமதி கள் பிரசுரிக்கப்படுகின்றன. இந்த துறைச் சுட்டிகள் குறிப்பிட்ட 20 சேவைத் துறைகளை சேர்ந்த கம்பனிகளின் விலை மாற்றங் களை பிரதி பலிப்பதாக அமைந்துள்ளன. எனவே துறைசார் விலைச் சுட்டிகள் சந்தையின் போக்குகளுக்கு எடுத்துக்காட்டாக அமைந்திருக்கும்.

4. S&P ஸ்ரீலங்கா 20 விலைச்சுட்டி

S&P Srilanka விலைச்சுட்டியானது கொழும்புப் பங்கு பரிவர்த்தனையின் விசால மான மற்றும் அதிக திரவத்தன்மை கொண்ட பிணைகளைக் கவனத்திற்கொண்டு உலக ளாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட முறை யினை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு செய்யப்படுகின்றது.

இச்சுட்டியானது கணிப்பீடு செய்வதற் காக விசாலத்தன்மை மற்றும் அதிக திரவத்தன்மை கொண்ட 20 கம்பனிகளை தெரிவு செய்வதற்குக் கொழும்பு பங்கு பரிவர்த் தனையில் பட்டியற்படுத்தப்பட்டு அனைத்து கம்பனிகளினதும் சாதாரண பங்குகள் கவனத்திற் கொள்ளப்படுகின்றது. கம்பனி கள் விசாலத்தன்மை, திரவத்தன்மை, நிதிச்சக்தி (இலாபம்) என்பன இவ் இருபது கம்பனிகளையும் தெரிவுசெய்வதற்கு காரணி யாக அமைகின்றது.

S&P ஸ்ரீலங்கா 20 விலைச்சுட்டியின் அடிப்படை தினம் 2004 டிசெம்பர் 17ம் திகதி ஆகக் காணப்படுவதோடு அடிப்படைப் பெறுமதி 1000 ஆகவும் கொள்ளப்படுகின்றது. 2012 ஜூன் 27ம் திகதி முதல் S&P ஸ்ரீலங்கா 20 விலைச்சுட்டி கொழும்பு பங்கு பரிவர்த்தனையில் விலைச்சுட்டியாக அறிமுகப்படுத்தப்பட்டது.

பங்குச் சந்தை சுட்டிகளின் முக்கியத்துவம்

- உலகளாவிய ரீதியில் பங்கு சந்தையை ஒப்பீடு செய்தல்
- மெய் வருமானத்தை அதிகரித்தல்
- விலை மாற்றங்களை அறிந்து கொள்ளல்
- சிறந்த கம்பனி எது என அறிதல்
- வரலாற்று ரீதியான போக்கினை மதிப் பிடல்
- முதலீட்டு தீர்மானங்களை மேற்கொள்ளல்

உசாத்துணை நூல்கள்

- www. cse.lk
- நிதி முகாமைத்துவம் - V.K.ரவீகரன்

உற்பத்திகளுக்கான விலையிடல் முறைகள்

செல்வி. சா.ற. இன்பா கிருசாந்தி,
2015 வர்த்தகப்பிரிவு.

உற்பத்தி பொருளொன்றுக்கு அல்லது சேவை ஒன்றுக்கு அறவிடப்படும் பணப் பெறுமதி விலை என எளிமையாக கூற முடியும். இதனை விரிவாக நோக்கும்போது பொருள் அல்லது சேவையினைப் பெற்றுக் கொள்வதனால் அல்லது பயன்படுத்துவத னால் பெற்றுக்கொள்ளும் நலன்கள்/ திருப்தி என்பதற்காக பரிமாற்றிக் கொள்கின்ற பெறு மானம். விலை என அழைக்கப்படும்.

கொள்வனவாளர்கள் பொருட்கள் சேவைகளை கொள்வனவு செய்யும் போது கவனத்தில் கொள்ளும் பிரதான காரணி விலை ஆகும். பொருத்தமான தந்திரோ பாயங்களை மேற்கொள்வதன் மூலம் பொருட்கள் சேவைகளுக்குரிய விலைகளை நிர்ணயித்தலே விலையிடல் என அழைக் கப்படும். விலையிடலை மேற்கொள்வதற்கு பல்வேறு குறிக்கோள்கள் உள்ளன. அவை பின்வருமாறு.

* சந்தையில் நிலைத்திருப்பதற்கு அல்லது வாழ்வுத் தன்மைக்கு
* நிகழ்கால இலாபத்தை உச்சப்படுத்து வதற்கு
* சந்தைப்பங்கை உச்சப்படுத்துவதற்கு
* சந்தை உறிஞ்சலை உச்சமாக்குவதற்கு
* உற்பத்தித்தர முகாமைத்துவம்
* விலையிடல் தலைமைத்துவம்

விலையிடலின் மையமானது கிரயம் ஆகும். விலையிடலை மேற்கொள்ளும் போது பின்பற்றவேண்டிய படிமுறைகள் பின்வருமாறு.

1. விலையிடலின் நோக்கம்
2. பொருளிற்கான கேள்வி
3. கிரயம்
4. போட்டியான விலையும், நிரம்பலும்
5. விலையிடல் முறை
6. அரச கொள்கைகள்
7. பொருளாதார நிலைமைகள்
8. இறுதி விலை நிர்ணயம்

விலையிடல் முறையானது மூன்று பிரிவுகளை உள்ளடக்குகிறது. அவை பின்வருமாறு

1. கிரயம் சார் விலையிடல்
   - கிரயத்துடன் குறித்த இலாபத்தை சேர்த்து விலையிடல்
   - இலக்கு திரும்பல் விலையிடல்

2. வாடிக்கையாளர் கேள்வி விலையிடல்

- உணரப்பட்ட பெறுமதி அடிப் படையில் விலையிடல்
- பெறுமதி விலையிடல்

3. போட்டிசார் விலையிடல்

- சந்தை விலை
- ஏல விலை
- குழு விலையிடல்

கிரயத்துடன் குறித்த இலாபத்தை சேர்த்து விலையிடல் Cost - Plus Pricing

ஆக்கக் கிரயத்துடன்/ விற்பனைக் கிரயத்துடன் குறித்த சதவீத இலாபத்தை சேர்த்து மேற்கொள்ளப்படும் விலையிடல் கிரயத்துடன் குறித்த இலாபத்தை சேர்த்து விலையிடல் எனப்படும்.

இலக்கு திரும்பல் விலையிடல்
(Target return pricing)

இலாபத்தின் மீது கிடைக்கும் நலன் களின் சதவீதம் முதலில் தீர்மானித்துக் கொள்ள வேண்டும். இதனை விரிவாக கூறின் முதலீட்டுக்கு உழைக்க எதிர்பார்க்கப்படும் இலாபத்தை பெறக்கூடிய வகையில் விலை யிடல் இலக்கு திரும்பல் விலையிடல் எனப் படும்.

இலக்கு சம்பாத்திய விலையிடல் = அலகுகிரயம் + இலாபவீதம் X மூலதனம் / எதிர்பார்த்த வி/னை அலகு

உணரப்படும் பெறுமதி அடிப்படையில் விலையிடல் - Perceived Value Pricing

வாடிக்கையாளரின் மனப்பாங்கு விரி யோகவழி, தரம், வழங்கப்படும் சேவை, உற்பத்தியாளரின் நன்மதிப்பு,பண்டக்குறி என்பவற்றின் அடிப்படையில் விலையிடல் உணரப்படும் பெறுமதி அடிப்படையில் விலை யிடல் எனப்படும்.

பெறுமதி விலையிடல் - Value Pricing

தமது வாடிக்கையாளர்களை தொடர்ந்து தக்கவைப்பதற்கு குறைவாக விலையை நிர்ணயிக்கும் முறை பெறுமதி விலையிடல் எனப்படும்.

சந்தை விலையிடல்

சந்தையில் காணப்படும் போட்டி பொரு ளுக்கு நிலவும் விலையை அடிப்படையாகக் கொண்ட விலையிடல் சந்தை விலை எனப் படும்.

ஏல விலையிடல் - Auction Pricing

ஏலத்தின் மூலம் விலையிடல் ஏல விலையிடலாகும். இது இரு வகைப்படும்

- ஆங்கிலேய ஏலம்
- ஒல்லாந்த ஏலம்

குழு விலையிடல் - (Group Pricing)

குழுக்கள் ஒன்று சேர்ந்து பெருமளவில் பொருட்களை கொள்வனவு செய்யும் போது குறைந்த விலை குறிப்பிடப்படும் முறை குழு விலையிடல் ஆகும்.

இவ்வாறாக பல்வேறு விலையிடல் முறைகளைப் பயன்படுத்தும் நிறுவனங்கள் தமது உற்பத்திகளுக்கு இறுதி விலையை நிர்ணயம் செய்யும் போது கீழ்வரும் உப்பாய முறைகளையும் கருத்தில் கொள்கின்றனர்.

1. உளவியல் விலையிடல் - ஆடம்பர பொருட்களுக்கு கிரயத்தில் பல மடங்கு இலாபம் சேர்த்து விலைதீர்மானித்தல்.
   eg- வாசனைத் திரவியங்கள்
2. கடைதல் விலையிடல் - புதிய பொரு ளுக்கு ஏற்படுத்தும் அதிகரித்த கேள்வி காரணமாக விலை உயர்த்துதல்.
   eg - I.Phone

3. பூகோள விலையிடல் - பிரதேசத்திற்கு பிரதேசம் பொருள்கின் விலை மாறுபடல்
   eg - றம்புட்டான்

4. மேம்படுத்தல் விலையிடல் -மக்கள் பொருட்களை விரைவாகக் கொள்வனவு செய்ய தூண்டும் விலையிடல்.
   eg- தவணைக் கொடுப்பனவு முறை.

5. பேதப்படுத்தல் விலையிடல் - வாடிக்கையாளர் வேறுபாடு உற்பத்தி வேறுபாடு என்பவற்றுக்கேற்ப விலையிடல்.

தொகுத்து நோக்குமிடத்து வணிக செயற்பாட்டில் விலையிடல் கொண்ட முக்கியத்துவம் தெளிவாகின்றது. சந்தையின் சூழமைவு மாற்றங்களை நுண்ணுணர்வுடன் அவதானித்து, பொருத்தமான விலையிடலை மேற் கொள்ளும் வணிகங்கள் நிலை பேறானவையாகின்றன.

உசாத்துணை

ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி



பொருளாதாரக் கட்டளைக் கணியம் அல்லது சிக்கனக் கட்டளைத் தொகை (EOQ)

செல்வி. ஆ. ஆனந்தி
2015 வர்த்தகப்பிரிவு.

இருப்புக் கட்டுப்பாட்டுடன் தொடர்புபட்ட மொத்தக் கிரயத்தினை இழிவுபடுத்தும் வகையில் உள்ள கட்டளைத் தொகையே பொருளாதாரக் கட்டளைக் கணியம் எனப்படும். அதாவது ஒரு தடவை கட்டளை இடும்போது எவ்வளவு பொருட்களினைப் பெற்றுக் கொள்வது, நிறுவனத்திற்குச் சிக்கனமாகக் காணப்படுகின்றதோ அத்தொகையே பொருளாதாரக் கட்டளைக் கணியம் எனப்படும்.

கட்டளைக் கிரயமும், இருப்பு வைத்தற் கிரயமும் ஒன்றுக்கொன்று எதிர்க்கணியத் தொடர்புடையதாகக் காணப்படும். எனவே இவ்விரண்டு கிரயக் கோடுகளும் ஒன்றையொன்று ஊடறுத்துச் செல்கின்ற நிலையில் காணப்படுகின்ற கட்டளைத் தொகையே பொருளாதாரக் கட்டளைக் கணியமாகக் காணப்படுகின்றது.

பொருளாதார கட்டளைத் கணியத்தினைத் தீர்மானிக்கும் காரணிகளாகப் பின்வருபவை காணப்படுகின்றன.

* ஆண்டிற்கான கேள்வி (D)
* ஒரு கட்டளைக்கான கிரயம் (CO)
* ஒரு அலகிற்கான இருப்பு வைத்தற் கிரயம் (ஆண்டிற்கு) (CH)
* நிறுவனத்தின் இருப்புக் கட்டுப்பாட்டுக் கொள்கைகள்

இக்காரணிகளில் மொத்தக் கட்டளைக் கிரயமும், மொத்த இருப்பு வைத்தற் கிரயமும் பொருளாதாரக் கட்டளைக் கணியத்தினைத் தீர்மானிப்பதில் முக்கியத்துவம் வாய்ந்த காரணிகளாகக் காணப்படுகின்றன. இப் பொருளாதாரக் கட்டளைக் கணிப்பின் எடுகோள்களாக,

1. ஆண்டிற்கான கேள்வி மாறாது
2. ஒரு கட்டளைக்கான கிரயம் மாறாது.
3. அலகொன்றிற்கான இருப்பு வைத்தற் கிரயம் மாறாது
4. இருப்பின்மைக் கிரயம் இல்லை
5. அலகொன்றின் கொள்வனவு விலை நிலையானது

போன்றவை எடுத்துக்காட்டப்படுகின்றன.

இப்பொருளாதாரக் கட்டளைக் கணியமானது பின்வருமாறு 03 முறைகளில் கணிப்பிடப்படுகின்றது.

* சமன்பாட்டு முறை (Equation Method)
* அட்டவணை முறை (Table Method)
* வரைபட முறை (Graphical Method)

பொருளாதாரக் கட்டளைக் கணியத்தை சமன்பாட்டு முறையில் கணிப்பிடுதல்

ஆண்டுக்கான கேள்வி, கட்டளைக் கிரயம், இருப்பு வைத்தற் கிரயம் போன்ற

வற்றை ஒரு சமன்பாட்டில் இடுவதன் மூலம் பொருளாதாரக் கட்டளைக் கணியம் கணிப்பிடப்படுவது சிக்கனக் கட்டளைத் தொகையை சமன்பாட்டு முறையில் கணிப் பிடுதல் எனப்படும். இதற்கான சமன்பாடு பின்வருமாறு காட்டப்படும்.

$$\in OQ\ x\ \sqrt{\frac{2DCO}{CH}}$$

இங்கே ⇒ EOQ ⇒ சிக்கனக் கட்டளைத் தொகை (Economic Order Quantity)

D – வருடாந்தக் கேள்வி (Demand per Annum)

CO – ஒரு கட்டளைக்கான கட்டளைக் கிரயம் (Ordering Cost per order)

CH – ஓர் அலகுப் பொருளை ஒரு வருடம் பாதுகாக்க ஏற்படும் கிரயம் (Holding Cost per Item per Annum)

2 – ஒரு மாறிலியாகக் காணப்படும்.

உ–ம்: வருடாந்தக் கேள்வி 1000 அலகுகள் ஒரு கட்டளைக்கான கிரயம் 15/= இருப்பு வைத்தற் கிரயம் அலகொன் றிற்கு வருடத்திற்கு ரூபா 0.75

01. பொருளாதாரக் கட்டளைக் கணியத்தைக் கணிக்க?

$$\in OQ = \sqrt{\frac{2x1000x15}{0.75}}$$

$$= \sqrt{40000}$$

= 200 அலகுகள்

எனவே சிக்கனக் கட்டளைத் தொகை 200 அலகுகள் ஆகும்.

02. பொருளாதாரக் கட்டளைக் கணியத்தை அட்டவணை முறையில் கணிப்பிடுதல்

இருப்புக் கட்டுப்பாட்டு மொத்தக் கிரயம், மொத்த கட்டளைக் கிரயம், மொத்த இருப்பு வைத்தற் கிரயம் என்பவற்றினை ஒரு அட்டவணையில் குறிப்பதன் மூலம் சிக்கனக்கட்டளைத்தொகை கணிப்பிடப்படுவது பொருளாதாரக் கட்டளைக் கணியத்தை அட்ட வணை முறையில் கணிப்பிடுதல் எனப்படும்.

உ–ம்: மேலே சமன்பாட்டு முறையில் காட் டப்பட்ட தரவுகளின் அடிப்படையில் பொருளாதாரக்கட்டளைக்கணியத்தை அட்டவணை முறையில் கணிக்க?

கட்டளைத் தொகை அலகுகள்	100	200	400	600	800	1000
சராசரிக் கையிருப்பு (அலகுகள்)	50	100	200	300	400	500
கட்டளைகளின் எண்ணிக்கை (தடவைகள்)	10	05	2.5	1.6	1.25	01
மொத்த கட்டளைக் கிரயம் (ரூபா)	150	75	37.54	24	18.75	15
மொத்த இருப்பு வைத்தற் கிரயம் (ரூபா)	37.5	75	150	225	300	375
இருப்புக் கட்டுப்பாடு மொத்தக் கிரயம் (ரூபா)	187.5	150	187.5	249	318.75	390

இங்கு 200 அலகுகளிலேயே கட்டளைக் கிரயமும், இருப்பு வைத்தற் கிரயமும் சமனாகக் காணப்பட்டு இருப்புக் கட்டுப்பாட்டு மொத்தக் கிரயம் குறைவாக உள்ளது.

எனவே சிக்கனக் கட்டளைத் தொகை 200 அலகுகள் ஆகும்.

03. பொருளாதாரக் கட்டளைக் கணியத்தை வரைபட முறையில் கணிப்பிடுதல்

இருப்புக் கட்டுப்பாட்டு மொத்தக் கிரயம், மொத்தக் கட்டளைக் கிரயம், மொத்த இருப்பு வைத்தற் கிரயம் என்பவற்றினை ஒரு வரைப்படத்தில் குறிப்பதன்மூலம் சிக்கனக் கட்டளைத் தொகைக் கணிப்பிடுவது பொருளாதாரக் கட்டளைக் கணியத்தை வரைபடத்தில் கணிப்பிடுதல் எனப்படும்.

eg: மேற்காட்டப்பட்ட தரவுகளின் அடிப்படையில் சிக்கனக்கட்டளைத் தொகையை வரைபடத்தில் காட்டுக.

மொத்தக் கிரய வளையியில் இழிவு நிலைக்குச் சமனான புள்ளியிலுள்ள கட்டளைத் தொகையே பொருளாதாரக் கட்டளைக் கணியம் ஆகும். எனவே இங்கு வரை பின்படி சிக்கனக் கட்டளைத் தொகை 200 அலகுகளாக காணப்படுகின்றது.

இவ்வாறு சமன்பாடு, அட்டவணை மற்றும் வரைபடம் போன்ற 03 முறைகளில் கணிக்கப்படுகின்ற பொருளாதாரக் கட்டளைக் கணியத்தின் முக்கியத்துவங்களாகப் பின்வருவனவற்றை கூறிக்கொள்ளமுடியும்.

- சரக்கிருப்பு தொடர்பான மொத்தக் கிரயத்தை இழிவுபடுத்திக் கொள்ளமுடிதல்
- ஒரே தடவையில் கட்டளையிடக்கூடிய தொகையின் அளவைத் தீர்மானிக்க உதவுதல்.



உசாத்துணை நூல்கள்

உயர்கணக்கீடு 2 - K.B கஜேந்திரன்

ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி தரம் 13



பொருளியல்

அரச வரவு செலவுத் திட்டம்: அண்மைய போக்குகள்

S. ஞானசந்திரன்,
உதவி விரிவுரையாளர்,
வவுனியா வளாகம்,
யாழ். பல்கலைக்கழகம்.

Dr. S. விஜயகுமார்,
சிரேஷ்ட விரிவுரையாளர்,
பொருளியல்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

ஒரு நாட்டின் வரவு செலவுத் திட்டமானது அந்நாட்டினது இறைக்கொள்கையினைப் பிரதிபலிக்கின்றது. இவ்வகையில் இறைக்கொள்கையினைத் தயாரித்தல் மற்றும் உரிய முறையில் அமுல்படுத்தலுக்கு அரசாங்கமே பொறுப்பாகும். வேகமாக வளர்ச்சியடைந்து வருகின்ற சந்தைப் பொருளாதாரங்களில் அரச தலையீடு அவசியமாக இருந்து வருகின்றது. பொருளாதார சிந்தனை வரலாற்றை எடுத்து நோக்கும்போது அரச தலையீடு அவசியம் என்றும் ஒருசாராரும், அரச தலையீடுஇன்றி பொருளாதாரங்கள் தன்னிச்சையாக இயங்கவேண்டும் என்று இன்னொரு சாராரும் வலியுறுத்தி வந்திருக்கின்றனர். குறிப்பாக பழம் பொருளியலாளர்கள் (அடம்ஸ்மித், றிக்காடோ) அரச தலையீடு பொருளாதாரங்களில் இருத்தல் கூடாது என வலியுறுத்தினர். அரச தலை யிடாக் கொள்கை (Laissez Faire Policy) என்பது பிரதான பொருளாதார தத்துவமாக (Economic Ideology) 17ம், 18ம் நூற்றாண்டுகளில் பின்பற்றப்பட்டது. அடம்மித் றிக்காடோ போன்றோர் பொருளாதாரங்களின் சிறப்பான செயற்பாட்டிற்கு தலையிடாக் கொள்கையை (Laissez Faire) பின்பற்றி, பொருளாதாரங்களை தன்னிச்சையாக செயற்பட்டால் அவை சிறந்த நிலையையும் நிறை தொழில் மட்டத்தையும் அடைந்து கொள்ளும் என வலியுறுத்தினர். எனவே தான் சர்வதேச வர்த்தகம் தொடர்பிலும் சுதந்திரமான கட்டுப்பாடற்ற தன்மை காணப்படவேண்டும் என்றனர். முழுநயக் கோட்பாடு, ஒப்பீட்டுநயக்கோட்பாடுகள் என்பவை சுதந்திரத் தன்மையை வலியுறுத்துபவையாகவே காணப்படுகின்றன. அரசு பாதுகாப்பு விடயத்திலும் சில அடிக்கட்டுமான உருவாக்கத்திலும் மாத்திரம் ஈடுபட வேண்டும் எனக் கூறப்பட்டது.

மாக்ஸ்சின் (Marx) முதலாளித்துவம் இறுதியில் தோல்விநிலைக்குச் செல்லும் என்றும் சோசலிசமே நின்று உலகில் நிலைக்கும் என்றும் அவர் கூறினார். அவ்வாறாயின் அவரது கொள்கை கூற்று ஏன் தோற்றுப்போனது என்ற வினாவை இங்கு பொருத்திப் பார்ப்பது சிறப்பானதாகும்.

பழம் பொருளியலாளரது தலையிடாக் கொள்கை நீண்டகாலமாக ஏற்றுக்கொள்ளப்பட்டாலும், 1930களில் ஏற்பட்ட பெருமந்தத்துடன் அவர்களது கொள்கை மீளாய்வு

செய்யப்பட வேண்டும் என்பதை தெளிவாக எடுத்துக்கூறுகின்றது. உயர்அளவின் வேலையின்மை மற்றும் பொருளாதார நெருக்கடிகள் 1930களில் பிரிட்டன் உட்பட்ட உலக பொருளாதாரங்களை மிகக் கடுமையாகப் பாதித்தது. பழம் பொருளியலாளர்கள் தன்னிச்சையாக அரச தலையீடு இன்றிய நிலைமையில் பொருளாதாரங்கள் மிகச் சிறப்பான நிலையில் காணப்படும் என்ற நிலை பொய்ப்பிக்கப்பட்டு விட்டது. எனவே புதியதொரு பொருளாதார சிந்தனையின் தேவைப்பாடு ஒன்று தோன்றுவதை நாம் அவதானிக்க முடியும்.

எனவேதான் கெயின்ஸ் அரச தலையீட்டை வலியுறுத்தினார். உண்மையில் தூய முதலாளித்துவம் என்பதை நாம் காண்பது அரிது. கெயின்ஸ் முதலாளித்துவத்தை எதிர்க்கவில்லை ஆதரித்தார். அது சிறப்பானது என்றார். அதாவது தேவையான போது அரச தலையீடு பொருளாதாரங்களில் அவசியமானது என்பதனை வலியுறுத்தினார். அதாவது மொத்தக்கேள்வி முகாமைத்துவம் தொடர்பில் அரசின் தலையீட்டை வலியுறுத்தினார். முற்றுமுழுதாக அரசு எல்லாவற்றையும் கையிலெடுத்து ஆட்சி செய்யவேண்டும் என்பதை இவர் கூறவில்லை. மாறாக அரச தலையீடு அவசியம் என்கின்றார். இதை அடிப்படையாகக் கொண்டு தான் 1930களில் ஏற்பட்ட மந்த பிரச்சினைக்கு அவர் தீர்வுகளை முன்வைத்து வெற்றியும் கண்டார். தீவிரகர்த்தாவான Marx எதிர்வுகூறியது போல முதலாளிகள் தொழிலாளர்களை சுரண்டி வரும் இலாபத்தையும் மூலதனத்தையும் தன்வசம் குவித்துக்கொள்வர். மறுபுறம் தொழிலாளர்கள் மேலும்மேலும் கீழ் நிலைக்குத் தள்ளப்படுவார்கள். தொழிலாளர்களைக் கொண்டு உற்பத்தி செய்த பொருட்களை விற்று முதலாளிகள் பெரும் பணத்தை சம்பாதித்துவிடுவர். எனவே இதன் காரணமாக சுரண்டல் உச்சகட்டம் அடைந்து, தொழிலாளர்கள் முதலாளிகளுக்கு எதிராக போராடுவர். வர்க்க முரண்பாட்டின் உச்சம் காரணமாக இறுதியில் முதலாளிவர்க்கம் இல்லாமல் போகும் எனவும் சோசலிசம் நின்று நிலைக்கும் என்றும் எதிர்வுகூறினார் ஆனால் நடந்தது என்ன? தூய முதலாளித்துவம் பற்றிய சிந்தனைகளின் அடிப்படையிலேயே மார்க்ஸ் இவ்வாறான கருத்தை தெரிவித்துவிட்டார்போல் இருக்கிறது கெயின்ஸ் குறிப்பிடுவது போல தேவையான போது அரசு, பொருளாதாரங்களில் தலையிட்டு ஒழுங்குபடுத்தலை மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு செய்கின்றபோது மார்க்சின் எதிர்வுகூறலுக்கான சாத்தியப்பாடு இல்லாமல் போகின்றது. 2ம் உலக யுத்தம் அரச தலையீட்டை தேவைப்பாட்டை வலியுறுத்துகின்றது. 1990களில் ரஷ்ய ஜனாதிபதி மிகையில் கோர்பச்சேவ், பொரஸ்ரொய்கா, கிளாஸ் நெட் ஆகிய இருசீர்திருத்தங்களை பயன்படுத்தி, அமெரிக்க முதலாளித்துவத்தின் வார்த்தை ஜாலத்துக்கு அடிமையாகி சோசலிச சித்தாந்தத்தை உடைத்து எறிந்தார். இக்கட்டத்தில் சோவியத் ஒன்றியம் பல துண்டங்களாக உடைந்து முதலாளித்துவ அணுகுமுறையை நோக்கி நகர்ந்தது. ஏனைய கிழக்கு ஐரோப்பிய நாடுகளும் சந்தைப் பொருளாதாரத்தை தம்முடன் வரித்துக் கொண்டுவிட்டன. அவ்வாறாயின் மார்க்ஸ் கூறிய எதிர்வுகூறல் நடக்காது போனதற்கான காரணம் என்ன?

முதலாளித்துவ பொருளாதாரங்களில் தேவையானபோது சமூகநீதி, நியாயம் கருதி அரச தலையீடு காணப்பட்டமையால் முதலாளித்துவம் நின்று நிலைக்கிறது. இப் போது உலகில் இருப்பது ஓர் கலப்பு முதலாளித்துவம் என்பதை மனதில் இருத்திக் கொள்ள வேண்டும். அரச பங்களிப்பு பின்வரும் விடயங்கள் தொடர்பாக மிக அவசியமாகும்.

1. மூலதன ஒதுக்கீடும் பொதுப்பண்டங்களை வழங்குதலும்.
2. நீதித்தன்மை அல்லது சமத்துவத்தைப் பேணல்
3. பொருளாதார உறுதியைப் பேணல்
4. பொருளாதார வளர்ச்சியையும் அபிவிருத்தியையும் ஏற்படுத்தல்
5. உற்பத்தித்திறனை உயர்த்துவதற்கு பொதுத்துறையின் தலையீடு அவசியமாக இருந்து வரும் துறை கல்வி, சுகாதாரம் மீதான செலவாகும்.
6. சுற்றுப்புறச் சூழல் சீர்கேட்டினை தடுத்து நிறுத்துவதாகும்.

இந்தவகையில் இலங்கை அரசானது தனது வருமான மற்றும் செலவினக் கூறு களை அமைத்துக் கொள்கிறது. என்பதை நோக்குவோம். வரவு செலவுத் திட்டம் அல்லது பாதீடு என்பது எதிர்வரும் வருடத்துக்கு மதிப்பிடப்பட்ட செலவுகளின் அளவும் அதன் கட்டமைப்பும் அச்செலவுகளுக்கு நிதி பெற்றுக்கொள்ள திட்டமிட்டு மதிப்பீடு செய்யப் பட்ட வருமானத்தின் அளவும் அது பெறப்படும் வழிகளும், பற்றாக்குறை காணப்படின் அது குறியீட்டக்கூடிய வழிகளும் மிகை காணப்படின் அது பயன்படுத்தக்கூடிய வழிக ளும் அடங்கிய கணக்கு அறிக்கை வரவு செலவுத் திட்டமாகும். நிதி அமைச்சரால் வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டு வருடாந்தம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படு கின்றது. இவ்வரவுசெலவுத் திட்டத்தின் மூலம் ஒவ்வொரு அரசும் தேசிய பொருளா தாரத்தின் உற்பத்தி, நுகர்வு, வருமானம், சேமிப்பு, முதலீடு, பணவீக்கம், மொத்த கேள்வி, சென்மதி நிலுவை போன்றவற்றினை ஒழுங்குபடுத்திக் கொள்ளும். அரச வருமான மானது வரி அரச இறை, வரி அல்லாத அரசிறை என 2 வகைப்படும். ஏறத்தாள 88 வீதமான அரச வருமானங்கள் வரிகளினூடாகவே பெற்றுக்கொள்ளப்படுகின்றது. இதனுள் வரி, பெறுமதிசேர் வரி (VAT), கலால்வரி, இறக்குமதி வரி என்பன அடங்கு கின்றன. இவற்றுள் VAT வரியே இலங்கை அரசிற்கு கூடுதலான வருமானத்தை பெற்றுத் தருகின்றது. இது அரச வருமானத்தில் ஏறத்தாள 22% அல்லது 1/5 பங்காக உள்ளது. GDP இல் 2.9% ஆகஉள்ளது. அடுத்து கலால் வரி, வருமான வரி என்பன முக்கியம் பெறுகின்றன.

வருமான வரியானது GDP இல் 2.4% ஆக உள்ள அதேவேளை அரசிறையில் 18% இற்கு வகை கூறுகிறது. வருடாந்தம் நபர் ஒருவர் உழைக்கும் வருமானத்தில் முதல் ஐந்து இலட்சத்திற்கும் வரி விடுதலை அடுத்த ஐந்து முதல் பத்து இலட்சத்திற்கும் 4%, அடுத்து 10 முதல் 15 இலட்சம் வரை 8% எனச் சென்று 30 இலட்சத்திற்குப் பின் 24% என மாறா விகிதத்தில் உள்ளது.

அரச வருமானத்தில் 20% நேர்வரிகளிலிருந்தும் மிகுதி நேரில் வரிகள் மூலமும் பெறப்படுகின்றது. காரணம் இலங்கையில் வரிமானவரி செலுத்துவோர் குறைவாக உள்ளமை ஆகும். மேலும் வரி ஏற்ப்புத் தன்மை 1 வரிச்சலுகை மற்றும் வரி விடுதலை உயர்ந்த வருமானவரி எல்லை என்பவற்றைக் கூறலாம்.

அதேவேளை இலங்கையில் நேரில்வரி உயர்வாக இருக்கக்காரணம் இது. பொருட்கள் சேவைகள் மீது அவற்றின் விலையினூடாக அறவிடப்படுவதால் அனைவரும் செலுத்துகின்றனர் மற்றும் நாட்டின் ஜனாதிபதியிலிருந்து சாதாரண குடிமகன் வரை இந்த வரி செலுத்துகின்றனர்.

இனி அரச செலவீனங்கள் பற்றி நோக்கும்போது, குறித்த வருடத்தில் அரசு தனது செயற்பாடுகளை மேற்கொள்ள ஏற்படுத்திக்கொள்ளும் செலவீனங்கள் ஆகும். இதனுள் நடைமுறைச்செலவு மூலதனச்செலவு மற்றும் மீள்கொடுப்பனவு கழிந்த கடன் வழங்கல் என்பன காணப்படும்.

இதில் நடைமுறைச் செலவு என்பது குறிப்பிட்ட வருடத்தில் ஒரு நாட்டின் அரசு தனது அன்றாடச் செயற்பாடுகளை பேணுவதற்காக மேற்கொள்ளும் செலவீனங்களைக் கருதும். இவை மீண்டும் மீண்டும் ஏற்படுவதால் மீண்டெழும் செலவு என்றும் கூறுவ துண்டு. இதன் வகைகளாக பொருட்கள் பணிகள் மீதான நடைமுறைச்செலவு, வட்டிக் கொடுப்பனவு, நடைமுறை மாற்றலும் உதவிக்கொடுப்பனவு என்பனவாகும். இங்கு நடைமுறை மாற்றங்கள் என்பது பொருட்களையோ சேவைகளையோ பிரதி யீடாகப் பெற்றுக்கொள்ளாது மேற்கொள்ளும் நடைமுறைச் செலவீனங்களைக் கருதும். இதனால் இவை ஒரு பக்கம் கொடுப்பனவுகளாகும். இதில் சமூர்த்தி ஓய்வூதியம், வளமாக்கி உதவிக் கொடுப்பனவு, ஏனையவை அடங்கும்.

இந்நடைமுறைச் செலவானது பெயரளவு நியதிகளில் அதாவது 2012 இல் 1131 BR இலிருந்து 2013 இல் 1205 BR ஆக 6.6% ஆல் உயர்வடைந்துள்ளது. ஆனால் GDP இன் வீதமாக 2012 இல் 14.9% இலிருந்து 2013 இல் 13.9% ஆக குறைவடைந்துள்ளது.

அடுத்து மூலதனச் செலவு என்பது ஒரு நாட்டின் அரசு தனது மூலதனப் பொருள் இருப்பை அதிகரிக்கும் நோக்கில் மூலதனச் சொத்துக்களை உருவாக்கவும் கொள்வனவு செய்யவும் ஏற்படுத்திக்கொள்ளும் செலவுகளைக் கருதும். இது GDP இன் வீதமாக 5.2% ஆகவுள்ளது. இதில் உண்மைச் சொத்துக்களின் கையேற்பு, மூலதன மாற்றல்கள் என்பவை முக்கிய பகுதிகளாகும். இச்செலவீனத்தின் பொருளாதார முக்கியத்துவமாக பின்வரு வனவற்றை குறிப்பிடமுடியும்.

1. நாட்டின் முதலிருப்பு மட்டம் உயரும்.
2. அடிப்படை உட்கட்டமைப்பு வசதி பெருகும்.

3. உற்பத்தித்திறன் உயரும்.

4. பொருளாதார வளர்ச்சி ஏற்படும்.

5. பொருளாதார அபிவிருத்தி ஏற்படும்.

அண்மையாண்டுகளில் அரச வருமானம், அரச செலவு என்பவற்றை GOP இன் % ஆக வருமாறு காட்டிக்கொள்ளலாம்.

அரச வருமானம் 2012 – 2014

	2012	2013	2014
1. **வரி அரசிறை**	12	13	12.8
i. வருமான வரி	2.3	2.6	2.9
ii. VAT	3.0	3.3	3.1
iii கலால் வரி	3.0	2.8	2.7
iv இறக்குமதி வரி	1.1	1.1	1.0
v ஏனைய வரி	2.7	3.2	3.3
2. **வரியில்லா அரசிறை**	1.9	1.5	1.6
மொத்த அரசிறை	13.9	14.5	14.5

அரச செலவீனங்கள் 2012 – 2014

	2012	2013	2014
நடைமுறைச் செலவீனம்	14.9	14.6	13.4
சம்பளம் கூலிகள்	4.6	4.8	4.1
வட்டிக் கொடுப்பனவு	5.4	5.1	4.4
நடைமுறை மாற்றல்	3.1	3.1	3
மூலதன செலவீனம்	5.3	5.7	6.5
மீள் கொடுப்பனவு கழித்த கடன் வழங்கல்	0.3	0.2	0.2
மொத்தச் செலவும் தேறிய கடன் வழங்கலும்	20.5	20.5	20

இனி நடைமுறைக் கணக்கினை நோக்கும்போது இது 2012 இல் 1% பற்றாக் குறையை பதிவுசெய்துள்ள அதேநேரம் 2013 இல் 0.8% ஆக குறைவடைந்து 2014 இல் 1.1% மிகையை அதாவது நேர்க்கணிய அரச சேமிப்பாக மாறியுள்ளது. இது வரவு செலவுத்திட்டத்தின் ஒரு திருப்திகரமான நிலையாகும்.

மேலும் சமூகமீதி என்பது தொடர் பற்றாக்குறையாகவே இருந்துவந்துள்ளது. அண்மையாண்டுகளில் இதன் போக்குகளாக

2010 – 7.9%

2011 – 6.9%

2012 – 6.5%

2013 – 5.9%

2014 – 5.5%

என தொடர்ந்து குறைவடைந்தும் இதே நேரம் எதிர்கணியமாகவும் உள்ளது.

அடுத்து நிதியிடல் மூலங்களை நோக்கும்போது உள்நாட்டு வெளிநாட்டு மூலங்கள் இதில் குறிப்பிடக் கூடியன. அரசு பாதீட்டுப் பற்றாக்குறைக்கு உள்நாட்டிலிருந்து பெறுகின்ற கடன்கள் உள்நாட்டு நிதியிடல் எனவும், வெளிநாடுகளிலிருந்து பெறுகின்ற கடன்கள் வெளிநாட்டு நிதியிடலிலும் அடங்கும். உள்நாட்டுக் கடன்களில் சந்தை சார்ந்த கடன்கள், சந்தை சாராத கடன்கள் என்பன முக்கியமானவை. சந்தை சார் கடன்களில் வங்கிக் கடன்கள் வங்கிசாராக் கடன்கள் முக்கியமானவை.

Budget Balance and financing - % of GDP

	2012	2013
நடைமுறைக் கணக்கு மீதி	-1	0.8
முதன்மைக் கணக்கு மீதி	-1.1	0.8
மொத்த மீதி	-6.5	5.9
மொத்த நிதியிடல்	+ 6.5	+ 5.9
வெளிநாட்டு நிதியிடல்	3.8	1.4
உள்நாட்டு நிதியிடல்	2.7	4.5
சந்தைக் கடன்கள்	2.7	4.4
வங்கிக் கடன்கள்	1.7	3.4
வங்கி சாராக் கடன்கள்	0.9	1.0
சந்தை சாராக் கடன்கள்	-	0.1

அண்மையாண்டுகளில் இலங்கை அரசினைப் பொறுத்தவரை நிதியிடலில் உள் நாட்டு நிதியிடலையே நம்பியுள்ளது. மொத்த நிதியிடலில் இது 76% ஆகும். உள் நாட்டு நிதியிடலிலும் சந்தைக் கடன்களே கூடுதலாகவுள்ளது. சந்தை சாராக் கடன்

கள் மிகக் குறைந்ததாகவே காணப்படுகின்றது. மேலும் வங்கி சார்ந்த சந்தைக் கடன் கூடுதலாகவுள்ளமையும் அவதானிக்கலாம். இதன் விளைவுகளாக வணிக வங்கி களில் கடன்பெற்றால் அவை பண ஆக்கம் செய்யும். மேலும் தனியார் துறைக்கான கடன் வாய்ப்புக்கள் குறைய அது முதலீடுகளைக் குறைக்கும். பணவீக்கம் ஏற்படும்.

மேலும் அரச படுகடனின் அளவும் GDP இன் வீதமாக குறைவடைந்து வரும் அதேவேளை பெயரளவு நியதிகளில் அதிகரித்துக் காணப்படுகிறது.

2005 - 91%

2010 - 82%

2011 - 79%

2012 - 78%

உண்மையில் படுகடன் அளவு அதிகரித்துச் சென்றாலும் GDP உயர்ந்து செல்வதால் GDP இன் % ஆக இது குறைவடைந்து செல்வதை நோக்கலாம்.

இறுதியாக நோக்கின், இலங்கையில் அண்மையாண்டுகளை வைத்து நோக்கப் பட்ட அரச வருமானங்கள் அதன் வகுதிகள் செலவீனங்கள் அதன் வகுதிகள், பாதீட்டு மீதிகள் அவற்றின் அண்மைய காலபோக்குகள், அவற்றுக்கான நிதியீட்ட மூலங்கள், அதில் கூடுதல் தங்கியிருப்பு மூலங்கள் மற்றும் அரச படுகடனின் போக்குகள் என்பன சிறப்பாக ஆராயப்பட்டுள்ளன. மொத்தத்தில் இலங்கையின் பாதீடு தொடர்ந்தும் பற்றாக் குறைப் பாதீடாகவே இருந்து வருகின்றமை குறிப்பிடக்கூடியது.



EDUCATION IS THE KINDLING OF A FLAME, NOT THE FILLING OF A VESSEL.

- SOCRATES

சர்வதேச வர்த்தகம்

செல்வி. ஸ். அனிஸ்எமிலா
2015 வர்த்தகப்பிரிவு

1. அறிமுகம்

நாடுகளிடையே சர்வதேச வர்த்தகம் நடைபெறுகின்றது என்பது தொடர்பில் பல் வேறு கோட்பாட்டு விளக்கங்கள் காணப் படுகின்றன. அதனடிப்படையில் நாம் தற் போது முழு நன்மைக் கோட்பாடு, ஒப்பீட்டு நன்மைக் கோட்பாடு எனும் இரு கோட்பா டுகளையும் எடுத்து நோக்குவோம். இவ் இரு கோட்பாடுகளும் மிகப்பழமை வாய்ந்த கோட்பாடுகள். ஆயினும் இன்றும் உலக நாடுகளிடையே நிலவும் சர்வதேச வர்த்த கத்தின் போக்குகளை விளக்கப் பயன்படு கின்றன.

முழு நன்மைக் கோட்பாடு

இக்கோட்பாடானது அடம்சிமித் அவர் களினால் அறிமுகப்படுத்தப்பட்டதாகும் உற் பத்தியில் நிலவும் செலவு நன்மையின் அடிப்படையில் (Lost Advantage) நாடுகளி டையே பரஸ்பர நன்மை தரக்கூடிய வர்த் தகம் இடம்பெறலாமென இக்கோட்பாடு கூறு கின்றது.

இதன்படி குறித்த ஒருநாடு மற்றைய நாட்டை விட குறைந்த உற்பத்திச் செல வில் ஒரு பொருளை உற்பத்தி செய்ய முடியு மாயின் அப்பொருளின் உற்பத்தி தொடர்பாக அந்நாடு முழுமையான நன்மையைக் கொண்டு இருப்பதாக கூறலாம்.

உ+ம்: ஓரலகு உள்ளீட்டைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யக்கூடிய வெளியீடுகளின் எண்ணிக்கை

நாடு	கோதுமை	தேயிலை
USA	(1000)	800
Srilanka	100	(1000)

இங்கு கோதுமை உற்பத்தியில் USA முழு நன்மையையும் தேயிலை உற்பத்தியில் இலங்கை முழு நன்மையும் கொண்டு காணப்படுகின்றது.

இந்நிலையில் இரு நாடுகளும் தமக்கு முழு நன்மை காணப்படும் பொருளில் சிறக்குமியல்பு பெற்று பரஸ்பர வர்த்தகத்தின் மூலம் அதிகளவு உற்பத்தியையும் அதிக ளவு நுகர்வு மட்டத்தையும் வளங்களின் வினைத்திறனான பயன்பாட்டையும் அடை யலாமென இக்கோட்பாடு கூறுகின்றது.

ஒப்பீட்டு நன்மை கோட்பாடு

டேவிட் ரிக்கார்டோ அவர்களினால் வெளியிடப்பட்ட கோட்பாடு இதுவாகும். முழு நன்மை கோட்பாட்டின் படி வர்த்தகம் இடம்பெற்று நாடுகள் நன்மையடைய வேண்டுமாயின் ஒரு நாடு ஒரு பொருள் தொடர்பிலும் மற்றைய நாடு இரண்டாவது பொருள் தொடர்பிலும் செலவு நன்மையை

கொண்டிருப்பது கட்டாயமாகும். மாறாக ஒரு நாடு இரு பொருள்களின் உற்பத்தி தொடர்பிலும் முழு நன்மையை கொண்டி ருந்தால் வர்த்தகம் இடம்பெற வாய்ப் பில்லை. ஆனால் டேவிட் ரிக்கார்டோ ஒரு நாடே இரு பொருள் தொடர்பாகவும் முழு மையான செலவு நன்மையினை கொண்டி ருந்தாலும் வர்த்தகம் இடம்பெற முடியு மென்றும் அதன் மூலம் பரஸ்பர நன்மை யினை அடையலாமென்றும் கூறுகின்றார்.

இதனை விளக்க அவர் பின்வரும் எடுகோள்களை கையாள்கின்றார்.

- ஊழியம் மட்டுமே ஒரேயொரு உற்பத்தி காரணியாகும்.
- பொருட்கள் அவற்றின் ஊழியச்செலவை அடிப்படையாக வைத்தே பரிமாறப் படுகின்றன.
- ஊழியம் கைத்தொழில்களுக்குள்ளே அசையும் நாடுகளுக்கிடையில் ஊழிய அசைவில்லை.
- ஊழியம் ஓரினத் தன்மை வாய்ந்தது.
- நிலையான விளைவு விதி தொழிற்படல்
- இரு நாடுகளிலும் இரு பொருள்கள் மாத்திரமே காணப்படும்.
- வர்த்தகத்தில் தடையில்லை. அத்துடன் நிறைதொழில்மட்டமும் நிறை போட்டி யும் நிலவும்.

உ+ம்: ஓரலகு வெளியீட்டுக்கான உள்ளீடு களின் எண்ணிக்கை

நாடுகள்	புடவை	வைன்
இங்கிலாந்து	100	120
இந்தியா	90	80

இங்கு இந்தியா இரண்டு உற்பத்தி தொடர்பிலும் முழு நன்மையினை கொண் டுள்ளது.

இரு நாடுகளினதும் அமையச் செலவுகள் வருமாறு

நாடுகள் ஓரலகுப் புடவைக்குரிய அமையச் செலவு ஓரலகு வைன்னுக்குரிய அமையச் செலவு

நாடுகள்	ஓரலகுப் புடவைக் ரிய அமையச் செலவு	ஓரலகு வைன்க்குரிய அமையச் செலவு
இங்கிலாந்து	100/120 = 0.833வைன்	120/100 = 1.2 புடவை
இந்தியா	90/80 = 1.125 வைன்	80/90 = 0.88 புடவை

இங்கு இங்கிலாந்து புடவை உற்பத் தியில் ஒப்பீட்டு நன்மையையும் இந்தியா வைன் உற்பத்தியில் ஒப்பீட்டு நன்மையும் கொண்டுள்ளன. இதனால் இங்கிலாந்து இந்தியாவிற்கு புடவையை ஏற்றுமதி செய்து இந்தியாவிடமிருந்து வைனை இறக்குமதி செய்து கொள்ள முடியும்.

நாடுகளிடையே ஒப்பீட்டு நன்மை வேறு படுவதற்கான காரணமென்ன? ஒப்பீட்டு நன்மை ஏன் உருவாகின்றது என்பதற்குரிய இரு விளக்கங்கள்

1. உற்பத்தித் திறனில் அதாவது தொழில் நுட்ப அறிவில் நாடுகளிடையே காணப் படும் வேறுபாடு

2. நாடுகளில் உள்ள வளங்களின் கிடைப் பனவில் அதாவது வளநிரம்பலில் நிலவும் வேறுபாடுகள்

குறித்த ஒரு பொருள் உற்பத்தி தொடர் பான தொழில்நுட்ப அறிவு மற்றைய நாட்டை விட கூடுதலாக உள்ளபோது குறித்த நாடு குறைந்த செலவில் அதனை உற்பத்தி செய்ய

முடிவதால் ஒப்பீட்டு நன்மை உருவாகலாம். மறுபுறம் ஒரு குறித்த பொருள் உற்பத்தியில் செறிவாக பயன்படுத்தும் உற்பத்தி காரணி அல்லது வளம் குறித்த நாட்டில் அதிகம் இருப்பின் இந்நாடு குறித்த பொருள் உற்பத்தி தொடர்பில் ஒப்பீட்டு நன்மையை அடையலாம்.

ஒப்பீட்டு நன்மை கோட்பாட்டின்படி ஒவ்வொரு நாடும் தான் ஒப்பீட்டு நன்மை கொண்ட பொருள் தொடர்பில் சிறக்குமியல்பு அடைந்து அதனை ஏற்றுமதி செய்ய வேண்டும் ஒப்பீட்டு நன்மையற்ற பொருளை இறக்குமதி செய்யவேண்டும் என்பதே முடிவாகும்.

ஒப்பீட்டு நன்மை நிலவுவதற்கு நாடுகள் கட்டாயம் வேறுபட்டு அமைய வேண்டும். ஒரே மாதிரியான தொழில்நுட்ப அறிவு கொண்ட ஒரே மாதிரியான வள நிரம்பல் கொண்ட நாடுகளுக்கிடையே வர்த்தகம் இடம்பெற முடியாது. எனினும் வேறுபட்ட தொழில்நுட்ப அறிவு வளக்கி டைப்பனவு என்பவற்றைக் கொண்ட நாடு களுக்கிடையில் இது சாத்தியமாகும் உதார ணமாக அபிவிருத்தி அடைந்த நாடுகளை யும் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளை யும் கூறலாம். எனவே அபிவிருத்தி அடைந்த நாடுகளுக்கும் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கும் இடையில் வர்த்தகத்தை விளக்க ஒப்பீட்டு நன்மை கோட்பாட்டை சிறப்பாக பயன்படுத்தலாம்.

ஆனால் இன்றைய உலகில் வர்த்தக போக்குகளை ஆராயுமிடத்து அபிவிருத்தி அடைந்த நாடுகளிடையே நிலவும் வர்த்த கமும் கணிசமான அளவு அதிகரித்து இவ்வாறான வர்த்தக போக்குகளை விளக்க ஒப்பீட்டு நன்மை கோட்பாடு போதுமானதாக இல்லை.

2. சமமான நாடுகளிடையே நிலவும் வர்த்தகத்திற்கான காரணங்கள்

இங்கே சமமான நாடுகள் என்பது ஒரு பரந்த கருத்தில் உபயோகிக்கப்படும் ஒரு சொற்றொடராகும். அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் பொருளாதார செயலாற்றம் காரணிகளின் தன்மை, தொழில்நுட்பஅறிவு வாழ்க்கைத்தரம் என்பன பெரும்பாலும் ஒரே மாதிரியானவையாகும். அதேபோன்றே அபிவிருத்தி அடைந்தநாடுகளிலும் மேற்படி காரணிகள் ஒரே மாதிரியானவையாகும். எனவே இவ்வாறு ஒரேமாதிரியான நாடு களிடையே வர்த்தகம் நிலவுவதற்கு பல காரணங்கள் உண்டு.

1. சுவை வேறுபாடுகள்

- ஒரே மாதிரியான நாடுகளாக இருந்தாலும் மக்களின் சுவை வேறுபாடுகள் காரணமாக அவற்றுக்கிடையில் வர்த்தகம் இடம்பெறலாம்.

2. அளவுத் திட்ட சிக்கனங்கள்

- ஒரே மாதிரியான நாடுகள் எல்லா பொருட்களையும் உற்பத்தி செய்யக் கூடிய இயலுமை கொண்டிருப்பினும் எல்லாவற் றையும் உற்பத்தி செய்யாது ஒரு குறிப்பிட்ட வீச்சில் உள்ள பொருட்களை மாத்திரம் உற்பத்தி செய்து ஏனையவற்றை இறக்குமதி செய்யலாம்.

3. புவியியல் ரீதியாக அருமைத்தன்மை மற்றும் வருமான மட்டம்

- புவியியல் ரீதியாக அண்மித்த நாடுகள் இடையே வர்த்தகம் நிலவுவது தற்போது அவதானிக்கப்பட்டு வரும் ஒரு விடயமாகும். அத்தோடு ஒரே மாதிரியான தலாவருமான மட்டங்களைக் கொண்ட நாடுகள் மத்தியில் அதிகளவு வர்த்தகம் இடம் பெறுவதையும் அவதானிக்க முடிகிறது.

3. வர்த்தக தடைகளும் தாராள மயமாக்கலும்

சர்வதேச வர்த்தகம் தடைகளற்று இடம்பெறுவதன் மூலம் நாடுகளின் உற்பத்தியாளர்களும் நுகர்வோர்களும் உற்பத்தி மற்றும் பரிமாற்றத்தின் ஊடாக நன்மைகளை அனுபவிக்கலாம் என்பது பலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகும். ஆனால் உலகின் எந்தவொரு நாடும் வர்த்தகத்தை சுதந்திரமாக இயங்க அனுமதிப்பதில்லை. மாறாக தீர்வைக் கட்டுப்பாடுகளையும் தீர்வை இல்லாக் கட்டுப்பாடுகளையும் விதித்து இறக்குமதியை முயற்சிக்கின்றன.இதற்கு ஆதரவாக பின்வரும் வாதங்கள் முன்வைக்கப்படுகின்றன.

1. இளநிலைக் கைத்தொழில்களை பாதுகாத்தல்
2. உள்நாட்டு வேலைவாய்ப்புக்களை பாதுகாத்தலும் உருவாக்கலும்
3. பாதகமான சென்மதி நிலுவையிலிருந்து மீட்சிபெறல்
4. வர்த்தக மாற்றுவீத சாதகமற்ற தன்மையை குறைத்தல்
5. உபாயரீதியில் முக்கிய துறைகளை முன்னேற்றுதல்
6. வெளிநாட்டு சந்தைகளில் போட்டித் தன்மையை அதிகரிக்கும் நோக்கம்
7. தேசிய பாதுகாப்பு நோக்கம்

இன்று உலக நாடுகளில் இவ்வாறே சர்வதேச வர்த்தகமானது சிறப்பாக செயற்படுத்தப்படுகின்றது.

உசாத்துணை நூல்கள்

- அறிவுத் தேடல் (இதழ் - 31)
- பொருளியல் நூல் 6 (V.பரமேஸ்வரன்)
- கற்றல் கற்பித்தல் கையேடு - தரம் - 13



வெளிவாரி விளைவுகள்

செல்வி. பொ.மாலின் பெல்ஷியா
2015 வர்த்தகப்பிரிவு

உற்பத்தி / நுகர்வு நடவடிக்கையின் காரணமாக அவ் உற்பத்தி அல்லது நுகர்வு நடவடிக்கையுடன் தொடர்புடையோர் தவிர்ந்த ஏனையோர் அல்லது 03ம் தரப்பினர் எவ்வித நட்டஈட்டினையும் பெற்றுக்கொள்ளாது தாங்கிக் கொள்ளும் தீமை அல்லது எந்தவித கொடுப்பனவுகளையும் செலுத்தாது பெற்றுக் கொள்ளும் நன்மை வெளிவாரி விளைவு எனப்படும்.

வெளிவாரி விளைவினை மூன்றாம் தரப்பு விளைவு, அயலவர் விளைவு என பல பெயர் கொண்டு அழைப்பர்.

பொருளாதார நடவடிக்கையின் அடிப் படையில் வெளிவாரி விளைவானது பின் வரும் இருவகைப்படும்.

1. உற்பத்தியில் வெளிவாரி விளைவு
2. நுகர்வில் வெளிவாரி விளைவு

அதேவேளை விளைவுகளின் அடிப் படையில் வெளிவாரி விளைவுகள் பின்வரும் இரு வகைப்படும்.

1. நேர்கணிய வெளிவாரி விளைவு
2. எதிர்கணிய வெளிவாரி விளைவு

மேற்படி இரு அடிப்படைகளையும் வைத்து வெளிவாரி விளைவினை பின்வரும் நான்கு வகைப்படுத்தலாம்.

1. உற்பத்தியில் நேர்கணிய வெளிவாரி விளைவு
2. உற்பத்தியில் எதிர்கணிய வெளிவாரி விளைவு
3. நுகர்வில் நேர்கணிய வெளிவாரி விளைவு
4. நுகர்வில் எதிர்கணிய வெளிவாரி விளைவு

உற்பத்தியில் நேர்கணிய வெளிவாரி விளைவு

உற்பத்தியாளர்கள்/உற்பத்தி நிறுவ னங்களின் உற்பத்தி நடவடிக்கையின் காரணமாக ஏனையோர் அல்லது 03ம் நபர்கள் எந்தவித கொடுப்பனவினையும் செலுத்தாது பெற்றுக்கொள்ளும் நன்மை உற்பத்தியில் நேர்கணிய வெளிவாரி விளைவு எனப்படும்.

eg - ரயில் சேவை வழங்கப்பட்டால் வீதியில் ஏற்படும் நெருக்கடி, வீதி விபத்துக்கள், மாசடைதல் குறைவடைதல்.

பூ வியாபாரத்தின் பொருட்டு பூந்தோட்டம் அமைப்பதால் அயலில் உள்ள தேன் உற்பத்தியாளருக்கு தேன் உற்பத்தி கூடுதல்

உற்பத்தியில் நேர்கணிய வெளிவாரி விளைவு காணப்படும்போது குறை உற்பத்தி ஏற்பட்டு சந்தை தோல்வியடையும். இதனை பின்வருமாறு வரைபடத்தில் காட்டலாம்.



வரைபடத்தின்படி சந்தையின் உத்தம சமநிலையானது MPC = MPB என்னும் நிலையில் A புள்ளியில் சமநிலையடைந்து Q என்றும் உற்பத்தி இடம்பெறுகின்றது. ஆனால் சமூகம் எதிர்பார்க்கும் உத்தம நிலையானது Msc = MSB என்றும் நிலையில் B புள்ளியில் சமநிலையடைந்து Q_1 என்ற உற்பத்தியினை எதிர்பார்க்கின்றது. எனவே இங்கு சமூகம் எதிர்பார்க்கப்படும் உற்பத்தியினைவிட சந்தை குறைவாக உற்பத்தி செய்வதனால் $Q-Q_1$ என்ற அளவு குறைஉற்பத்தி ஏற்பட்டு சந்தை தோல்வியடைகின்றது. இதனால் சமூக நலனில் ஏற்பட்ட இழப்பு ABC என்ற முக்கோணம் ஆகும்.

உற்பத்தியில் எதிர்கணிய வெளிவாரி விளைவு

உற்பத்தியாளர்கள்/உற்பத்தி நிறுவனங்களின் உற்பத்தி நடவடிக்கையின் காரணமாக ஏனையோர் அல்லது மூன்றாம் நபர்கள் எந்தவித நட்டஈட்டினையும் பெற்றுக் கொள்ளாது தாங்கிக்கொள்ளும் தீமை அல்லது செலவு உற்பத்தியில் எதிர்கணிய வெளிவாரி விளைவு என்பபடும்.



உதாரணம்:-

1. தொழிற்சாலை கழிவுநீர், ஆறுகள், நீர் நிலைகளில் விடப்படுவதனால் நீர் மாசடைதல்.

2. மரக்கைத்தொழில் காரணமாக இயற்கைக் காடுகள் வெட்டப்படுவதனால் மண் அரிப்பும், மழைவீழ்ச்சி குறைதலும்.

உற்பத்தியில் எதிர்கணிய வெளிவாரி விளைவு காணப்படும்போது மிகை உற்பத்தி ஏற்பட்டு சந்தை தோல்வியடையும். இதனை பின்வருமாறு வரைபடத்தில் காட்டலாம்.

வரைபடத்தின் சந்தையின் உத்தம சமநிலையானது, MPC = MPC என்னும் நிலையில் A புள்ளியில் சமநிலையடைந்து Q_1 என்னும் உற்பத்தி இடம்பெறுகின்றது. ஆனால் சமூகம் எதிர்பார்க்கும் உத்தம நிலையானது MSC = MSB என்னும் நிலையில் B புள்ளியில் சமநிலையடைந்து Q_1 என்ற உற்பத்தியினை எதிர்பார்க்கின்றது. எனவே இங்கு சமூகம் எதிர்பார்க்கும் உற்பத்தியினைவிட சந்தை மிகையாக உற்பத்தி செய்வதனால் $Q-Q_1$ என்ற அளவு மிகை உற்பத்தி ஏற்பட்டு சந்தை தோல்வியடைகின்றது. இதனால் சமூக நலனில் ஏற்பட்ட இழப்பு ABC என்ற முக்கோணம் ஆகும்.



நுகர்வில் நேர்கணிய வெளிவாரி விளைவு

நுகர்வோர் அல்லது தனிநபர் நுகர்வு நடவடிக்கை காரணமாக ஏனையோர் அல்லது மூன்றாம் நபர்கள் எவ்வித கொடுப்பன வினையும் செலுத்தாமல் பெற்றுக் கொள்கின்ற நன்மை நுகர்வில் நேர்கணிய வெளிவாரி விளைவு எனப்படும்.

1. தொற்றுநோய் தடுப்பூசி ஏற்படுவதனால் ஏனையோர் நோயிலிருந்து பாதுகாக்கப்படுதல்

2. கல்வி சார்ந்த தொலைக்காட்சி நிகழ்ச்சியினால் மாணவர் பலரும் நன்மையடைதல்.

நுகர்வில் நேர்கணிய வெளிவாரி விளைவு காணப்படும்போது குறை நுகர்வு

ஏற்பட்டு சந்தை தோல்வியடைகின்றது. இதனை பின்வருமாறு வரைபடத்தில் காட்டலாம்.

வரைபடத்தின்படி சந்தையின் உத்தம சமநிலையானது MPC = MPB என்னும் சமநிலையில் A புள்ளியில் சமநிலையடைந்து Q என்னும் நுகர்வு இடம்பெறுகின்றது. ஆனால் சமூகம் எதிர்பார்க்கும் உத்தம நிலையானது MSC = MSB என்னும் நிலையில் B புள்ளியில் சமநிலையடைந்து Q_1 என்ற நுகர்வினை எதிர்பார்க்கின்றது. எனவே இங்கு சமூகம் எதிர்பார்க்கும் நுகர் வினைவிட சந்தை குறைவாக நுகர்வினைச் செய்வதனால் $Q-Q_1$ என்ற அளவு குறை நுகர்வு ஏற்பட்டு சந்தை தோல்வியடைகின்றது. இதனால் சமூக நலனில் ஏற்பட்ட இழப்பு ABC என்ற முக்கோணம் ஆகும்.

நுகர்வில் எதிர்கணிய வெளிவாரி விளைவு

நுகர்வோர் அல்லது தனிநபரின் நுகர்வு நடவடிக்கை காரணமாக ஏனையோர் அல்லது மூன்றாம் நபர்கள் எந்தவித கொடுப்பன வினையும் செலுத்தாமல் பெற்றுக் கொள்ளும் தீமை நுகர்வில் எதிர்கணிய வெளிவாரி விளைவாகும்.

உதாரணம்

1. புகைப்பிடிப்பதனால் சூழ உள்ளவருக்கு ஏற்படும் உடல் உள நலப் பிரச்சினைகள் / பாதிப்புக்கள்.
2. மதுபான நுகர்வினால் ஏற்படும் சட்ட விரோதச் செயல்கள்.

நுகர்வில் எதிர்கணிய வெளிவாரி விளைவு காணப்படும் போது மிகைநுகர்வு ஏற்பட்டு சந்தை தோல்வியடைகின்றது. இதனைப் பின்வருமாறு வரைபடத்தில் காட்டலாம்.

வரைபடத்தின்படி சந்தையின் உத்தம சமநிலையானது MPC=MPB என்னும் நிலையில் புள்ளி Aயில் சமநிலையடைந்து Q என்னும் நுகர்வு இடம்பெறுகின்றது. ஆனால் சமூகம் எதிர்பார்க்கும் உத்தம சமநிலையானது MSC = MSB என்னும் சமநிலையில் B புள்ளியில் சமநிலையடைந்து Q_1 என்ற நுகர்வினை எதிர்பார்க்கின்றது.



எனவே இங்கு சமூகம் எதிர்பார்க்கும் நுகர் வினைவிட சந்தை அதிகமான நுகர்வினைச் செய்வதனால் $Q\text{-}Q_1$ என்ற அளவு மிகை நுகர்வு ஏற்பட்டு சந்தை தோல்வியடைகின்றது. இதனால் சமூகநலனில் ஏற்பட்ட இழப்பு ABC என்ற முக்கோணம் ஆகும்.

வெளிவாரி விளைவினைச் சீர்செய்யும் நடவடிக்கை

1. அரசாங்கம் மேற்கொள்ளும் நடவடிக்கை

- விஷேட வரி அல்லது மறைமுக வரி விதித்தல் (எதிர்கணிய வெளிவாரி விளைவு காணப்படும் போது)
- மானியங்களினை வழங்குதல் (நேர் கணிய வெளிவாரி விளைவு காணப்படும் போது)
- சட்டங்களை விதித்தல்
- தண்டம் விதித்தல்
- அரசு தானே சில பண்டங்களினை வழங்குதல் (பொதுப்பண்டம் மற்றும் அரைகுறை பொது பண்டம்)
- பங்கீட்டு நடவடிக்கை
- விலையில் உள்வாங்கச் செய்தல்
- உடைமை, உரிமைகளை உறுதிப்படுத்துதல்
- தகவல்கள் அல்லது விழிப்புணர்வுகளை ஏற்படுத்துதல்.

2. நிறுவனங்கள் தாமாகவே மேற்கொள்ளும் நடவடிக்கை

- தொழிற்சாலைகளில் புதிய இயந்திரங்கள் உபகரணங்களினைப் பொருத்துதல்
- பாதிப்புக்களினை ஈடுசெய்வதற்காக இலாபத்தில் ஒரு பகுதியினை ஒதுக்குதல்

உசாத்துணை நூல்கள்

- Richard G. Lipsey (1971), an introduction to positive econo -mics
- S. Vijakumar (2010) micro and marcro economics theories

சந்தைச் சமநிலை மாற்றங்கள்

செல்வி செ.யஸ்ரினா
2015 வர்தகப் பிரிவு

போட்டிச் சந்தையில் கேள்வி நிரம்பல் ஆகியவற்றினால் நிர்ணயிக்கப்படும் சந்தைச் சமனிலையானது அக்கேள்வி நிரம்பல்களில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்ப மாற்றமடைகின்றது. இதுவே சந்தைச் சமனிலை மாற்றங்கள் ஆகும். சந்தைச் சமனிலை மாற்றங்கள் பின்வரும் 3 மாற்றங்களாகக் காணப்படும்.

1. கேள்வி மாற்றமடைதல்
2. நிரம்பல் மாற்றமடைதல்
3. கேள்வி, நிரம்பல் ஆகிய இரண்டும் மாற்றமடைதல்.

கேள்வி மாற்றமடைதல்

1. நிரம்பல் மாறாத போது கேள்வி அதிகரித்தல்



நிரம்பல் மாறாத போது கேள்வி அதிகரிப்பதனால் சந்தையில் மிகை கேள்வி ஏற்பட்டு சமனிலை விலையானது P1 ஆக அதிகரிக்கின்றது. சமநிலைத்தொகையும் Q1 ஆக அதிகரிக்கின்றது.

2. நிரம்பல் மாறாதபோது கேள்வி குறைவடைதல்.



நிரம்பல் மாறாதபோது கேள்வி அதிகரிப்பதனால் சந்தையில் மிகை கேள்வி ஏற்பட்டு சமனிலை விலையானது P1 ஆக குறைவடைகின்றது. சமனிலைத் தொகையும் Q1 ஆக குறைவடைகின்றது.

நிரம்பல் மாற்றமடைதல்

1. கேள்வி மாறாத போது நிரம்பல் அதிகரித்தல்



கேள்வி மாறாத போது நிரம்பல் அதி கரிப்பதனால் சந்தையில் மிகை நிரம்பல் ஏற்பட்டு சமனிலை விலையானது P1 ஆக குறைவடைகின்ற சமனிலைத் தொகை Q1 ஆக அதிகரிக்கின்றது.

2. 

றை

கேள்வி மாறாத போது நிரம்பல் குறை வடைவதனால் சந்தையில் மிகைக் கேள்வி ஏற்பட்டு சமனிலை விலையானது P1 ஆக அதி கரிக்கின்றது. சமனிலைத் தொகை Q1 ஆக குறைவடைகின்றது.

கேள்வியும் நிரம்பலும் மாற்றமடைதல்

1. 

வில்

கேள்வி அதிகரிப்பால் ஏற்படும் மிகைக் கேள்வியும் நிரம்பல் அதிகரிப்பால் ஏற்படும் மிகை நிரம்பலும் சமனாக காணப்படுவத னால் சமனிலை விலை மாறாது இருக்க சமனிலைத் தொகை மட்டும் அதிகரிக்கின்றது.

2. 

வில்

கேள்வி குறைவதால் ஏற்படும் மிகை நிரம்பலும், நிரம்பல் குறைவதால் ஏற்படும் மிகைக் கேள்வியும் சமனாக காணப்படுவ தனால் சமனிலை விலை மாறாது இருக்க சமனிலைத் தொகை மட்டும் குறைவடை கின்றது.

3. 

ால்

கேள்வி அதிகரிப்பதால் ஒரு மிகைக் கேள்வியும், நிரம்பல் குறைவதால் ஏற்படும் ஒரு மிகைக் கேள்வியும் மனிலை விலையை அதிகரிக்கின்றது. ஆனால் சமனிலைத் தொகை மாற்றமடையவில்லை.

4. 

ாவி

கேள்வி குறைவதால் ஒரு மிகை நிரம்பலும், நிரம்பல் அதிகரிப்பால் ஒரு மிகை நிரம்பலும் ஏற்பட்டு சமனிலை விலையைக் குறைக்கின்றது. ஆனால் சமநிலைத் தொகை மாற்றமடையவில்லை.

5. கேள்வி அதிகரிக்கும் அளவை விட நிரம்பல் அதிகரிக்கும் அளவு குறைவாக இருத்தல்.



கேள்வி அதிகரிப்பால் ஏற்படும் மிகைக் கேள்வியை விட நிரம்பல் அதிகரிப்பதால் ஏற்படும் மிகைநிரம்பல் குறைவாகக் காணப்படுவதனால் சமனிலை விலையும் சமனிலைத் தொகையும் அதிகரிக்கும்.

6. கேள்வி அதிகரிக்கும் அளவை விட நிரம்பல் அதிகரிக்கும் அளவு கூடுதலாக இருத்தல்.



கேள்வி அதிகரிப்பதால் ஏற்படும் மிகைக் கேள்வியை விட நிரம்பல் அதிகரிப்பதால் ஏற்படும் மிகை நிரம்பல் கூடுதலாக இருப்பதனால் சமனிலை விலை குறைவடைய சமனிலைத் தொகை அதிகரிகும்.

7. கேள்வி குறைவடையும் அளவை விட நிரம்பல் குறைவடையும் அளவு குறைவாக இருத்தல்.



கேள்வி குறைவதால் ஏற்படும் மிகை நிரம்பலை விட நிரம்பல் குறைவதனால் ஏற்படும் மிகைக் கேள்வி குறைவாக இருப்பதனால் சமனிலை விலை குறைவடைகின்றது. சமனிலை தொகையும் குறைவடைகின்றது.

8. கேள்வி குறைவடையும் அளவைவிட நிரம்பல் குறைவடையும் அளவு கூடுதலாக இருத்தல்.



கேள்வி குறைவதால் ஏற்படும் மிகை நிரம்பலை விட நிரம்பல் குறைவதனால் ஏற்படும் மிகைக் கேள்வி கூடுதலாக இருப்பதனால் சமனிலை விலை அதிகரித்து சமனிலை தொகை குறைகின்றது.

உசாத்துணை நூல்:

- Change In Market Equilibrium (N.B.Kajitharan)
- அறிவுத் தேடல் இதழ் - 31

பணநிரம்பல்

செல்வி. இ.செறின் நிலுஷிகா
2015 வர்த்தகப் பிரிவு

குறித்த ஒரு தினத்தில் குறித்த நாட்டின் மக்களிடம் உள்ள மொத்தப் பணத்தின் அளவு அந்நாட்டின் பண நிரம்பல் எனப்படும். இது இருப்புசார் எண்ணக்கருவாகும். பண நிரம்பல் தொடர்பாகப் பயன்படுத்தப்பட்ட வரைவிலக்கணங்கள் காலத்துடன் பெரும் மாற்றம் அடைந்து வந்துள்ளன. பிரதானமாக இரு அம்சங்கள் இது தொடர்பில் செல்வாக்கு செலுத்துகின்றன.

1. நிதிக் கட்டமைப்பில் ஏற்பட்ட மாற்றம்
2. கோட்பாட்டு ரீதியில் அமைந்த மாற்றம்

இலங்கையில் பணநிரம்பலானது மதிப்பிடப்படும் முறையினை அடிப்படையாகக் கொண்டு பின்வருமாறு வகைப்படுத்தப்படுகின்றது.

1. குறுகிய பண நிரம்பல் (M_1)
2. விரிந்த பண நிரம்பல் (M_2)
3. திரட்டப்பட்ட விரிந்த பணநிரம்பல் (M_2b)
4. மேலும் விரிந்த பண நிரம்பல் (M_4)

குறுகிய பண நிரம்பல் (M_1)

குறித்த வருடஇறுதியில் அரசு, வங்கிகள் என்பன தவிர பொதுமக்கள் வசம் உள்ள தாள், உலோக நாணயங்களையும் பொதுமக்களின் பெயரில் வர்த்தக வங்கிகளில் உள்ள கேள்வி வைப்புக்களையும் உள்ளடக்கியது குறுகிய பண நிரம்பல் ஆகும்.

$$M_1 = C_p + DD_p$$

C_p - பொது மக்களுக்குரிய புழக்கப்பணம்

DD_p - பொது மக்களுக்குரிய கேள்வி வைப்பு

விரிந்த பண நிரம்பல் (M_2)

குறுகிய பண நிரம்பல் உடன் பொது மக்களின் பெயரில் வர்த்தக வங்கிகளில் உள்ள சேமிப்பு, தவணை வைப்புக்களை சேர்க்க வருவது விரிந்த பண நிரம்பல் ஆகும்.

$$M_2 = M_1 + TSD_p$$

$M_1 \Rightarrow$ குறுகிய பண நிரம்பல்

$TSD_p \Rightarrow$ வணிகவங்கிகளில் பொதுமக்களுக்குரிய நிலையான வைப்பு, சேமிப்பு வைப்புக்கள்

இலங்கை மத்திய வங்கியின் ஐந்தொகையையும் வணிக வங்கிகளின் திரட்டிய மீதிகளையும் அடிப்படையாகக் கொண்டு விரிந்த பணநிரம்பலை நிச்சயிப்பதில் செல்வாக்கு உடைய காரணிகளை இனங்காணமுடியும். அக்காரணிகள் பின்வருமாறு.

NFA_B - வங்கிமுறையின் தேறிய வெளி நாட்டுச் சொத்து

NCG_B - வங்கி முறையினால் அரசுக்கு வழங்கப்பட்ட கடன்

CPS_{KB} - வணிக வங்கிகளால் தனிப்பட்ட துறையினருக்கு வழங்கப்பட்ட கடன்கள்

NOA_B - வங்கிமுறையின் ஏனைய சொத்துக்கள்

திரட்டப்பட்ட விரிந்த பண நிரம்பல் (M_2b)

விரிந்த பணநிரம்பலுடன் வங்கிகளில் காணப்படுகின்ற வதிவற்றோர் வெளிநாட்டு புழக்கப்பணக்கணக்கில் பொதுமக்களுக்குரிய நிலையான. சேமிப்பு வைப்பு என்பவற்றின் 50% உடன் வெளிநாட்டு புழக்கப்பண வங்கி அலகுகளில் உள்ள வதிவாரின் வைப்பின் அளவினை சேர்க்க வருவது திரட்டப்பட்ட விரிந்த பண நிரம்பல் ஆகும்.

$$M_2b = M_2 + TSD_{NRFC} + RD_{FCBU}$$

திரட்டப்பட்ட விரிந்த பணநிரம்பலை நிச்சயிக்கும் காரணிகளாவன,

NFA - திரட்டிய வங்கி முறையின் தேறிய வெளிநாட்டுச் சொத்து

NDA - திரட்டிய வங்கி முறையின் தேறிய உள்நாட்டுச் சொத்து

NOA - திரட்டிய வங்கி முறையின் ஏனைய தேறிய சொத்துக்கள்

மேலும் விரிந்த பண நிரம்பல் (M_4)

திரட்டிய விரிந்த பணநிரம்பலுடன் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கியில் உள்ள தனியார் துறையின் தவணை சேமிப்பு வைப்பு. (RD_{LSb}) பதிவுசெய்யப்பட்ட நிதிக் கம்பனிகளில் உள்ள தனியார் துறையின் சேமிப்பு வைப்பு (RD_{RFC}) என்பவற்றை சேர்க்க வருவது மேலும் விரிந்த பண நிரம்பல் ஆகும்.

$$M4 = M_2b + RD_{Lsb} + RD_{RFC}$$

உதாரணம் ⟹ இலங்கையின் நிதித்துறை தொடர்பான கருதுகோள் ரீதியான தரவுகள் பின்வருமாறு (மில்லியன் ரூபா)

- வணிகவங்கியில் உள்ள கேள்வி வைப்பு 1000/=
- வணிகவங்கிகளில் உள்ள போலிப் பணம் 550/=
- பொது மக்களிடமுள்ள புழக்க சட்டமுறைப் பணம் 750/=
- வணிக வங்கிகளில் உள்ள வெளிநாட்டு வங்கி கணக்குகள் 150/=
- வணிக வங்கிகளிடம் உள்ள ஒதுக்குப் பணம் 100/=

1. நாணயத்தளத்தினை கணிக்குக.

$$H = 750 + 100$$
$$= 850 \text{ million}$$

2. குறுக்கிய பணநிரம்பல் (M_1) யாது?

$$M_1 = C_p + DD_p$$
$$= 750 + 1000$$
$$= 1750 \text{ million}$$

3. விரிந்த பண நிரம்பல் (M_2) யாது?

$$M_2 = M_1 + TSD_p$$
$$= 1750 + 550$$
$$= 2300 \text{ million}$$

4. திரட்டிய விரிந்த பணநிரம்பல் (M_2b) யாது?

$$M_2b = M_2 + RD_{FCBU}$$
$$= 2300 + 150$$
$$= 2450 \text{ million}$$

5. மேலும் விரிந்த பணநிரம்பல் (M_4) யாது?

$$M_4 = M_2b$$
$$= 2450 \text{ million}$$

பணநிரம்பலானது பின்வரும் காரணிகள் மூலம் தீர்மானிக்கப்படுகின்றது.

1. மத்திய வங்கியின் உள்நாட்டு, வெளி நாட்டு சொத்துக்கள்
2. வணிக வங்கிகளின் உள்நாட்டு, வெளி நாட்டு சொத்துக்கள்
3. அரசாங்க கையிருப்பில் உள்ள காசு நிலுவை
4. வரிவுற்றோர் அந்நிய நாணய கணக்கு நிலுவை
5. வதிவுள்ளோர் வெளிநாட்டுநாணய வங்கிப் பிரிவில் வைத்திருக்கும் போலிப்பணம்.
6. ஏனைய கிட்டிய பணத்தின் பெறுமதிகள்

பண கூட்டுக்களை தீர்மானிக்கும் காரணி களை இரு முறைகளில் பரீட்சிக்க முடியும்.

- சொத்து மற்றும் பொறுப்புப் பிரவேசம்
- உயர்வலுப் பணப் பிரவேசம்

உயர்வலுப் பணத்தை இரண்டு விதமாக விளக்க முடியும்.

- சொத்துக்கள் அடிப்படையில்
- பொறுப்புக்கள் அடிப்படையில்

உயர்வலுப் பணத்தைத் தீர்மானிக்கும் காரணிகள்

1. மத்திய வங்கி அரசுக்குக் கொடுத்த தேறிய கடன்
2. மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டுச் சொத்து
3. மத்திய வங்கியின் தேறிய ஏனைய சொத்துக்கள்
4. மத்திய வங்கியினால் வணிக வங்கி களுக்கு வழங்கப்பட்ட கடன்கள்.

பயன்பாட்டின் அடிப்படையில் உயர்வலுப் பணத்தின் கட்டமைப்பு பின்வருமாறு அமையும்.

1. சுற்றோட்டத்தில் உள்ள நாணயங்களும் தாள்களும்
2. வர்த்தக வங்கிகளால் மத்திய வங்கியில் பேணப்படும் வைப்புக்கள்
3. அரசைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நிறுவ னாங்களுக்குரிய மத்திய வங்கியில் உள்ள வைப்புக்கள்

பண நிரம்பலுக்கும் உயர்வலுப் பணத் துக்கும் இடையிலான விகிதம் பணப்பெருக்கி யாகும். பண நிரம்பல், உயர்வலுப்பணம், பணப்பெருக்கி என்பவற்றுக்கிடையேயான தொடர்பினை சமன்பாடுகள்மூலம் காட்ட லாம்.

M - பணக்கூட்டு

MH/K - பணப்பெருக்கி

H- உயர்வலுப் பணம்

$$M = K \times H$$

பணநிரம்பல் = பணப்பெருக்கி X அடிப்படைப்பணம்

$$H = M/K \text{ அடிப்படைப்பணம்} = \frac{\text{பணநிரம்பல்}}{\text{பணப்பெருக்கி}}$$

$$K = M/H \text{ பணப்பெருக்கி} = \frac{\text{பணநிரம்பல்}}{\text{அடிப்படைப் பணம்}}$$

பணப்பெருக்கியின் வகைகளைப் பின்வருமாறு காட்டலாம்.

1. குறுகிய பணப்பெருக்கி = $\frac{M1}{H}$
2. விரிந்த பணப்பெருக்கி = $\frac{M2}{H}$
3. திரட்டிய விரிந்த பணப்பெருக்கி = $\frac{M_2 b}{H}$
4. மேலும் விரிந்த பணப் பெருக்கி = $\frac{M_4}{H}$

பணப்பெருக்கி எப்போதும் ஒன்றை விடக்கூடிய பெறுமதியைக் கொண்டிருக்கும். கீழ்வரும் சூத்திரத்தின் மூலம் பணப்பெருக்கியில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை இனங்காணலாம்.

$$K = \frac{1 + C}{C + E + R}$$

பணப்பெருக்கி = [1 + சட்டமுறைப் பணத்திற்கும் வங்கி வைப்புக்கும் இடையிலான விகிதம் (c)] / [c+ மிகை ஒதுக்கு மற்றும் வங்கி வைப்புகளுக்கிடையிலான விகிதம் (E)+ சட்டரீதியான ஒதுக்கு மற்றும் வங்கி வைப்புக்கிடையிலான விகிதம் (R)]

மேல் உள்ள சூத்திரத்தின் படி பணப்பெருக்கியின் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை கீழ்த்தரப்படும் வகையில் காட்டலாம்.

1. சட்டமுறைப் பண இருப்பு (C)
2. மிகை ஒதுக்கு விகிதம் (E)
3. சட்டமுறையான ஒதுக்கு விகிதம் (R)

உசாத்துணைநூல்கள் :

- ஆசிரியர் கைநூல்
- பொருளியல் அறிமுகம் - I பாகம் - II, பேராசிரியர். டனி அத்தபத்து



போலி நாணயத்தாள்களும் பாதுகாப்புக் குறியீடுகளும்

செல்வி ந. டிலக்சியா
(2015) வர்த்தகப்பிரிவு.

பணம் – நாணயம் – போலிநாணயம்

கொடுக்கல் வாங்கல்களுக்கென்று பொதுவாக எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப் பட்ட பரிமாற்று ஊடகம் பணமாகும். நாணயம் என்பது கொடுக்கல் வாங்கல்களுக்கு என்று மத்திய வங்கியால் வெளியிடப்படும் தாள் குற்றிகளைக் கருதும்.

போலி நாணயத்தாள் என்பது

போலி நாணயத்தாள் என்பது ஒரு நாட்டில் நாணயத்தை வெளியிடுவதற்கு சட்டரீதியிலான அதிகாரத்தைக் கொண்டுள்ள மேலாண்மையொன்றினால் வெளியிடப்பட் டுள்ள நாணயத்தாளைப் போலி செய்து மோசடியான விதத்தில் உருவாக்கப்பட்டுள்ள ஒரு நாணயத்தாளின் மீள்உருவாக்க மாகும். போலி நாணயத்தாள்கள் உற்பத்தி செய்யப்படுதல் உலகம் பூராகவும்அனைத்து நாடுகளிலும் காணக்கிடைக்கின்றது. இலங் கையினுள் சுற்றோட்டத்தில் விடப்பட்டுள்ள நாணயத்தை வெளியிடுகின்ற மேலாண்மை அதிகாரம் 1949ஆம் ஆண்டின் 58ம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் மூலம் இலங்கை மத்திய வங்கிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதற்கிணங்க நாணயச் சபையினதும் நிதி அமைச்சரினதும் அங்கீகாரத்துடன் மத்திய வங்கி சுற்றோட்டத்திற்கு தேவையான நாணயத் தாள்களையும் நாணயக் குற்றி களையும் வெளியிடுகின்றது. அவ்வாறான தொரு அங்கீகாரமன்றி சுற்றோட்டத்தில் விடப்படுகின்ற நாணய தாள்களும் நாண யக் குற்றிகளும் போலி நாணயங்களாகக் கருதப்படும்.

போலி நாணயங்களின் சுற்றோட்டம் ஒரு நாட்டின் பொருளாதாரத்தில் பெருமளவு பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும். அதன் மூலம் பொதுமக்களுக்கு மத்தியில் நாட்டின் நாணயம் தொடர்பான நம்பிக்கை குன்ற லாம். ஆதலால் போலி நாணயங்களின் சுற்றோட்டத்தைத் தடுத்தல் அல்லது குறைத் தல் மத்திய வங்கிக்குரியதான சிறப்பியல்பு வாய்ந்ததொரு பொறுப்பாகும். போலிநாணயத் தாள்களை உற்பத்தி செய்தல் தண்டனை முறைச் சட்டக் கோவையின் கீழ் தண்டனைக் குரியதொரு குற்றமாக குறிப்பிடப்பட்டுள்ளது அதனாலாகும்.

அநேகமான நாடுகளை போன்று இலங்கையிலும் தற்போது போலி நாணயத் தாள்கள் உற்பத்தி செய்யப்படுவதையே காணக்கூடியதாயுள்ளது. போலி நாணய குற்றிகள் உற்பத்தி செய்யப்படுவதைக் காண முடியாதுள்ளது. ஆதலால் சுற்றோட்டத்தின் பொருட்டு நாணயங்கள் உற்பத்தி செய்யப் படுகின்றபோது பல்வேறான பாதுகாப்புக் குறியீடுகளை இடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதோடு, இதற்கென பெரும் செலவை ஏற்க நேரிட்டுள்ளது. பொதுமக்க ளுக்கு போலியல்லாத நாணயத்தாள்களை

அடையாளம் காண்பதற்கு உதவியாயமைகின்ற இலங்கையின் நாணயத் தாள்களில் காணக்கிடைக்கின்ற பாதுகாப்புக் குறியீடுகள் தொடர்பில் வாசகர்களை விழிப்புணர்வூட்டுதல் இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இலங்கையின் நாணயத் தாள்களிலுள்ள பாதுகாப்புக் குறியீடுகள்

ஆரம்பத்திலிருந்து இன்றுவரை இலங்கை மத்திய வங்கியால் வெளியிடப்பட்டுள்ள நாணயத்தாள் தொகுதிகளின் பொருட்டு பல்வேறு பாதுகாப்புக் குறியீடுகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. மேற்படி பாதுகாப்புக் குறியீடுகளை பிரதானமாக இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். அவையாவன

கடதாசி உற்பத்தி செய்யப்படுகின்ற சந்தர்ப்பத்தில் இடப்படுகின்ற பாதுகாப்புக் குறியீடுகள் மற்றும் அச்சிடும் சந்தர்ப்பத்தில் இடப்படுகின்ற பாதுகாப்புக் குறியீடுகள் என்றவாறாகும்.

கடதாசி உற்பத்தி செய்யப்படுகின்ற சந்தர்ப்பத்தில் இடப்படுகின்ற குறியீடுகளை பின்வருமாறு பல்வேறு விதமாகக் காட்டலாம்.

1. 100% பருத்தி கலக்கப்பட்ட விசேட கடதாசி
2. நீர்வரிக் குறியீடு (Watermark)
3. பாதுகாப்பு நூல் (Security Thread)
4. உறுதியாக்கப்பட்ட ஓரங்கள் (Cornerstones)
5. நிறம் தீட்டப்பட்ட மெல்லிய நார்கள் (Colour fibres)

அச்சிடப்படும் சந்தர்ப்பத்தில் இடப்படுகின்ற குறியீடுகள்.

விசேடமான கடதாசியின் மீது நாணயத்தாள் அச்சிடப்படுகின்றபோது இக் குறியீடுகள் இடப்படுகின்றன.

இன்டக்லியோ அச்சிடல் (Intaglio Prints)

நுண்ணிய எழுத்துக்கள் (Micro Prints)

ஊடறுத்துக் காணுகின்ற குறியீடு (See - through Feature)

புளோரசன்ற் அச்சிடல் (Fluorescent Prints)

பிரகாசிக்கின்ற நாடா (Iridescent Band)

நாணயத்தாள்களை அச்சிடுகின்ற கடதாசி

1950 முதல் இன்றுவரை இலங்கையில் சுற்றோட்டத்தின் பொருட்டு உற்பத்தி செய்யப்பட்ட அனைத்து நாணயத்தாள்களும் (ரூபா 200 பொலிமர் நாணயத்தாளை தவிர) 100/ பருத்தி கலக்கப்பட்ட கூழைப் பயன்படுத்தியே உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. ஆதலால் சாதாரண கடதாசியைவிட கெட்டியான தன்மையும் வழுவழுப்பற்ற தன்மையும் நாணயத்தாள்களுக்குக் கிடைப்பதோடு நீண்டகால இருப்பையும் கொண்டதாக இருக்கும். இந்த சிறப்பியல்பு வாய்ந்த தன்மையின் காரணமாக போலியற்ற நாணயத் தாளை விரல் நுனிகளால் உணரப்படுகின்ற தொடுகையின் மூலம் அடையாளம் காண்பதற்கு இயலுமாயுள்ளது. இந்த சிறப்பியல்பு வாய்ந்த கடதாசி மிகவும் பாதுகாப்பான முறையில் உற்பத்தி செய்யப்படுவதாலும் அவ்வாறான கடதாசியை பொதுவாக சந்தையில்பெற முடியாதுள்ளதாலும் போலிநாணயத் தாள்களை உற்பத்தி செய்வதற்கு சாதாரண கடதாசியை பயன்படுத்தவே எப்போதும் முயற்சியெடுக்கப்பட்டுள்ளது.

நீர்வரிக் குறியீடு

நீர்வரிக் குறியீடு கடதாசி உற்பத்தி செய்யப்படுகின்ற சந்தர்ப்பத்திலேயே தொழில் நுட்ப ரீதியில் இடப்படுகின்ற பாதுகாப்புக் குறியீடு ஒன்றாகும். திடீரெனப் பார்க்கின்ற போது இதனைக் காணமுடியாதிருந்த போதிலும் நாணயத்தாளை வெளிச்சத்

தின் பக்கம் பிடித்துப்பார்க்கின்றபோது இதனை அவதானிக்கமுடியும். முதலாவது நாணயத்தாள் தொகுதியிலிருந்து 1981 வரை வெளியிடப்பட்ட நாணயத்தாள்களில் நீர்வரிக் குறியீடாக, இரத்தினபுரி மாவட்டக் கொடியிலுள்ள சிங்கத்தின் உருவமே இடப்பட்டது. காலத்துக்கு காலம் நாணயத்தாள்களில் பாதுகாப்புக் குறியீட்டை மேம்படுத்துகின்ற கொள்கைக்கு இணங்க இலங்கை மத்திய வங்கி 1987ம் ஆண்டிலிருந்து வெளியிட்டுள்ள நாணயத்தாள்களுக்கு எவராலும் இலகுவாக அடையாளம் காணக்கூடியதான இலங்கை தேசிய கொடியின் சிங்கத்தின் உருவம் இடப்பட்டுள்ளது. ஆயினும் 1991ம் ஆண்டளவில் போலி நாணயத்தாள்கள் உற்பத்தியில் அதிகரிப்பைக் காணக்கூடியதாயிருந்தமையால் நீர்வரிக் குறியீடு மேலும் மேம்படுத்தப்பட்டதோடு, அதற்கிணங்க தேசிய கொடியில் சிங்கத்தின் கையிலுள்ள வாள் குறிப்பாகத் தென்படக்கூடிய விதத்தில் இடப்பட்டுள்ளது.

2010ஆம் ஆண்டின் புதிய நாணயத்தாள் தொகுதியில் நீர்வரிக் குறியீடு நாணயத்தாள்களின் முகப்பின் இடதுபுறத்தில் அச்சிடப்பட்டுள்ளதோடு நீர்வரிக் குறியீடாக ஒவ்வொரு நாணயத்தாளினதும் முகப்பின் வலதுபுறத்தில் அச்சிடப்பட்டுள்ள பறவையின் உருவத்தின் பிரதி உருவமொன்று இடப்பட்டுள்ளமை சிறப்பம்சமாகும். இதற்கிணங்க இதுவரை வெளியிடப்பட்டுள்ள நாணயத் தாள்களில் போலன்றி இத்தொகுதியின் நாயணத் தாள்களில் நீர்வரிக் குறியீடு நாணயத் தாளின் பெறுமதிக்கு ஏற்ப ஒன்றிலிருந்து ஒன்று வேறுபட்டதாயுள்ளது. அதேபோன்று இதற்கு மேலதிகமாக அந்த ஒவ்வொரு நீர்வரிக் குறியீட்டிற்கும் பக்கத்திலேயே அத்தாள் நாணயத்தின் பெறுமதி இலக்கத்தில் நிலைக்குத்தாக நீர்வரிக் குறியீடாக இடப்பட்டுள்ளது. இதுவரை இடப்பட்டுள்ள அனைத்து நீர்வரிக் குறியீடும் முப்பரிமாண வடிவில் தென்படக்கூடியதாக உள்ளடக்கப்பட்டுள்ளதோடு இப பணப்பு தொடர்பில் அதிக கவனத்தைச் செலுத்துவதன்மூலம் போலி நாணயத் தாள்களிலிருந்து போலியல்லாத நாணயத் தாள்களை அடையாளம் காணுதல் மிக இலகுவாகும்.

பாதுகாப்பு நூல்

பாதுகாப்பு நூல் கடதாசி உற்பத்தி செய்யப்படுகின்றபோது நாணயத்தாளில் புகுத்தப்படுவதோடு அதனையும் நாணயத் தாளை வெளிச்சத்தின் பக்கம் பிடித்துப் பார்க்கின்றபோதே அவதானிக்கமுடியுமாயிருக்கும். மூன்றாவது நாணயத்தாள் தொகுதி வெளியிடப்படுவதைத் தொடர்ந்தே இலங்கையில் முதற்தடவையாக நாணயத்தாள்களுக்கு பாதுகாப்பு நூல் அறிமுகப்படுத்தப்பட்டது. அதாவது 1956ஆம் ஆண்டிலிருந்தாகும். அச்சந்தர்ப்பத்தில் அனைத்துப் பெறுமதிகளிலான நாணயத்தாள்களின் பொருட்டும் கறுப்புநிற மெல்லிய நிலைக்குத்தான கோடொன்று நாணயத்தாளில் உட்புகுத்தப்பட்டது. இது நாணயத்தாளில் நிலைக்குத்தாகத் தென்படுகின்றது. 1981ஆம் ஆண்டிலிருந்து அச்சிடப்பட்ட நாணயத் தாள்களின் பொருட்டு "CENTRAL BANK OF SRILANKA" என்பதும் குறித்த நாணயத் தாளின் பெறுமதியும் இலக்கத்தில் மிகவும் நுண்ணியதாக அச்சிடப்பட்ட மெல்லியதான ஒரு பொலியெஸ்டர் நாடாவைப் போன்று பாதுகாப்பு நூல் இடப்பட்டுள்ளது. 1987ஆம் ஆண்டிலிருந்து ரூபா 500 மற்றும் ரூபா 1000 ஆகிய உயர் பெறுமதியைக் கொண்ட நாணயத்தாள்களில் பாதுகாப்பு நூல் மேம்படுத்தப்பட்டுள்ளதோடு இது 1.5 மீ.மீ அளவு அகலத்தைக் கொண்டதாக நாணயத்தாளில் நிலைக்குத்தாகச் செல்கின்றதான இடைக்கிடை வெளியே தென்படுகின்ற "ஸ்டார்டஸ்ட்"

எனப்படும் வெள்ளி நிறத்திலான நாடா வாகும். நாணயத்தாளை ஒரே தடவை யில் பார்க்கின்றபோது இந்த நூல் இடைக் கிடை வெளியே தென்பட்ட போதிலும் ஒளி யின் பக்கம் பிடித்து பார்க்கின்றபோது அது நாணயத் தாளின் ஊடாக தொடர்ச்சியாகச் செல்வதை தெளிவாக காணலாம்.

2003ம் ஆண்டிலிருந்து 2006ஆம் ஆண்டு வரை வெளியிடப்பட்ட ரூபா 500 மற்றும் ரூபா 1000 நாணயத் தாள்களில் இந்தப் பாதுகாப்பு நூல் "ஸ்டார்வைட்" நூலாக மேலும் மேம்படுத்தப்பட்டதோடு அதற்கிணங்க ரூபா 1000 நாணயத் தாளில் 4 மி.மீ அகலத் துடன் கூடியதாக பிரம்புக் கூடையொன்றின் பின்னலுக்கு சமமான வடிவத்தில் உட்புகுத் தப்பட்டுள்ள வெள்ளிநிற நாடா ஒன்றும் ரூபா 500 நாணயத் தாளுக்கு 3 மி.மீ. அகலத்தைக் கொண்ட இலங்கையின் டேசி மலரின் வடிவம் உள்ளடங்கிய வெள்ளிநிற நாடாவொன்றும் நாணயத்தாளில் இடைக் கிடை வெளிப்பட்டுத்தென்படும் விதத்தில் நிலைக்குத்தாகத் தொடர்ச்சியாகச் செல்கின்ற வாறு இடப்பட்டுள்ளது. அபிவிருத்தியடைந்து வருகின்ற தொழில்நுட்பத்தின் முன்னிலை யில் போலி நாணயத் தாள்கள் அச்சிடு வதில் அதிகரிப்பைக் காணக்கூடியதாயிருந் தமையால் மேற்படி பாதுகாப்பு நூல் 2006ம் ஆண்டில் "ஸ்டார்குரோம்" எனப்படும்பாதுகாப்பு நூலாக மேம்படுத்தப்பட்டது. இது புதிதாக வெளியிடப்பட்ட ரூ 2000 நாணயத் தாளுக்கே முதன் முதலாக அறிமுகப்படுத்தப்பட்டது. அதன் பின்னர் இது ரூபா 1000 நாணயத் தாளின் பொருட்டு 4 மி.மீ மற்றும் ரூபா 500 நாணயத்தாளுக்கு 3 மி.மீ என்றவாறு நாணயத்தாளில் இடைக்கிடை வெளியே தென்படுகின்றவாறு இடப்பட்டதோடு நாண யத்தாளை மேல்நோக்கியும் கீழ் நோக்கியும் அசைத்து நூலை நோக்குகின்றபோது அது பச்சை மற்றும் சிவப்பு நிறங்களாக மாற்றமடைந்து தென்படுவதை அவதானிக்க லாம். அதேபோன்று இந்த நாடாவின் மீது நாணயத் தாளின் பெறுமதியும் CBSL என்ற எழுத்துக்களும் அச்சிடப்பட்டுள்ளன.

11வது நாணயத் தாள் தொகுதியிலும் அதிக பெறுமதிகளைக் கொண்ட நாணயத் தாள்களில் அதாவது ரூபா 5000, ரூபா 1000 மற்றும் ரூபா 500 நாணயத்தாள்களில் இடைக்கிடை வெளியே தென்படக்கூடிய "ஸ்டார்குரோம்" பாதுகாப்பு நூல் இடப்பட் டுள்ளதோடு அவை முறையே 3 மி.மீ, 2.5 மிமீ மற்றும் 2மி.மீ அகலத்தைக் கொண்டுள்ள நாணயத்தாளை மேல் நோக்கியும் கீழ்நோக்கியும் அசைத்து நோக்கு கின்றபோது இந்நூல் பச்சை மற்றும் சிவப்பு நிறங்களாக மாற்றமடைந்து தென்படு கின்றது. இத்தொகுதியின் ஏனைய நாணயத் தாள்களுக்கு சாதாரண பாதுகாப்பு நூல் இடப்பட்டுள்ளதோடு இது நாணயத்தாளி னுள் புகுத்தப்பட்டுள்ளது. இந்த நாணயத்தாள் தொகுதியின் அனைத்து நாணயத்தாள் களிலும் பாதுகாப்பு நூலின் மீது நாணயத் தாளின் பெறுமதியும் CBSL என்ற எழுத்துக்களும் அச்சிடப்பட்டுள்ளன.

பலப்படுத்தப்பட்ட மூலைகள்

நாணயத்தாளின் நான்கு மூலை களும் பலமுள்ளதாய் இருத்தல் நாணயத் தாளின் நீண்டகால இருப்புக்கு உதவியா யமைகின்றது. ஆதலால், 2006ஆம் ஆண்டில் அப்போது புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட ரூபா 2000 நாணயத்தாளே பலப்படுத்தப் பட்ட மூலைகளைக் கொண்டதாக முதற் தடவையாக வெளியிடப்பட்ட நாணயத் தாளாகும். இந்த பலப்படுத்தப்பட்ட மூலைகள் நாணயத் தாளின் நான்கு மூலைகளிலும் சதுரக்கூட்டினுள் மூலைவிட்டமாக அமைந்த கோடுகளைக் கொண்டுள்ளதோடு இதனை

வெளிச்சத்தின் பக்கம் பிடித்துப்பார்க்கின்ற போது நீர்வரிக் குறியீட்டைப்போன்று தென்படும் இந்த பலப்படுத்தப்பட்ட மூலை கள் தாள் நாணயங்களுக்கான பாது காப்புக் குறியீடாகவும் முக்கியத்துவம் வாய்ந்த தாயுள்ளது. புதிய நாணயத்தாள் தொகுதி யின் அனைத்து நாணயத் தாள்களிலும் இப்பாதுகாப்புக் குறியீடு இடப்பட்டுள்ளது.

நிறம்தீட்டப்பட்ட மெல்லிய நார்கள்

கடதாசி உற்பத்தி செய்யப்படுகின்ற சந்தர்ப்பத்திலேயே கடதாசியில் உட்புகுத் தப்படுகின்ற சிவப்பு பச்சை மற்றும் நீல நிறங்களைக் கொண்ட 4 மி.மீ நீளத்தைக் கொண்ட மிக மெல்லிய நார்ப்பகுதிகள் மேலு மொரு விசேட பாதுகாப்புக் குறியீடாகும். இந்த நார்களை வெற்றுக் கண்களால் காண முடியுமாயுள்ளதோடு, புறஊதா நிறக் கதிர்கள் வெளிச்சத்தின் முன்னிலையில் வண்ண ஒளியில் பிரகாசிக்கும். இந்தப் பாதுகாப்புக் குறியீடு மத்தியவங்கியினால் நாணயத் தாள்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட புதிய பாதுகாப்புக் குறியீடாகும் என்பதோடு புதிய நாணயத் தாள்களிலும் காணக்கூடியதாயுள்ள ஒரு பாதுகாப்புக் குறியீடாகவும் உள்ளது. அதிக பெறுமதியைக் கொண்ட நாணயத் தாள்களில் இதனை மிகத் தெளிவாகக் காணலாம்.

இன்டெக்லியோ அச்சிடல்முறை (உயர்ந்துள்ள அச்சிடப்பட்ட பகுதிகள்)

விரல் நுனிகளால் நாணயத்தாளை தொடுகின்றபோது உயர்ந்துள்ள அச்சிடப்பட்ட பகுதிகளை விரல் நுனிகளால் நன்றாக உணரலாம். இதன்மூலம் நாணயத்தாளின் அந்த இடங்களில் வழுவழுப்பற்ற தன்மையை உணரமுடியும். போலி நாணயத்தாளில் அச்சிடல்கள் ஒரேவிதத்தில் மிருதுவானதாக அச்சிடப்பட்டிருக்கும். 1952ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட இரண்டாவது எலிசபெத் இராணியின் உருவப்படத்தை கொண்ட தான நாணயத்தாள் தொகுதியில் உள்ள டங்கியிருந்த ரூபா 5 நாணயத்தாள் தொடக்கம் இன்றுவரை அச்சிடப்பட்டுள்ள அனைத்து நாணயத்தாள்களிலும் குறிப்பிட்ட விசேட இடங்களில் இந்த உயர்ந்துள்ள அச்சிடல் பயன்படுத்தப்பட்டுள்ளது.

புதிய நாணயத்தாள் தொகுதியில் அனைத்து நாணயத்தாள்களினதும் முகப் பின் மத்தியில் அமைந்துள்ள அலங்கார வடிவமும் இலங்கை மத்திய வங்கி என்ற வாசகம் அடங்கிய பகுதியும் நாண யத்தாளின் பின்புறத்தில் கீழ் பகுதிகளும் இவ்விதம் உயர்ந்துள்ளதாக அச்சிடப்பட் டுள்ளதால் விரல் நுனிகளால் நாணயத் தாளின் இப்பகுதிகளைத் தொடுகின்றபோது நன்றாக உணரக்கூடியதாயுள்ளது. மேலும் அனைத்து நாணயத் தாள்களிலும் முகப்பின் இடது மற்றும் வலது பகுதிகளின் மத்திய பகுதியில் உயர்ந்துள்ள அச்சிடப்பட்ட வழுவழுப்பற்ற தன்மையைக் கொண்ட இரண்டு வரி அடையாளங்கள் இடப்பட் டுள்ளன.

நுண்ணிய எழுத்துக்கள்

இந்த நுண்ணிய எழுத்துக்களை உருப்பெருக்காடியின் (Magnifying Glass) உதவியைக் கொண்டே வாசிக்க முடியுமா யிருக்கும். போலி நாணயத்தாள்களுக்கான நிழற் பிரதிகளை எடுக்கின்றபோது, ஸ்கேன் இயந்திரங்களைப் பயன்படுத்தி மீள உரு வாக்குகின்றபோது இந்த அச்செழுத்துக்களை தெளிவாகப் பிரதிபண்ண முடியாது. பிரதமர் பண்டாரநாயக்கவின் மார்பளவு உருவப் படத்தைக் கொண்ட நாணயத்தாள் தொகுதியிலிருந்து (1961) இற்றைவரை வெளியிடப்பட்ட அனைத்து நாணயத்தாள் களிலும் நுண்ணிய எழுத்துக்களில் அச்சிடப்

பட்ட பகுதிகள் உள்ளடங்கியுள்ளன. பண்டார நாயக்க நாணயத் தாள் தொகுதியின் நாணயத் தாள்களின் பின்புறத்தில் இலங்கை மத்திய வங்கி என்பதன் சிங்கள வாசகம் நுண்ணிய எழுத்துக்களால் அச்சிடப்பட்டுள்ளது. தற்போது பயன்படுத்தப்படுகின்ற நாணயத்தாள் தொகுதியின் நாணயத்தாள்களின் முகப்பில் இலங்கை மத்திய வங்கி என்ற வாசகத்திற்கு மேலே "CENTRAL BANK OF SRILANKA" என்ற வாசகம் நுண்ணிய எழுத்துக்களால் அச்சிடப்பட்டுள்ளது. புதிய நாணயத்தாள் தொகுதியின் நாணயத் தாள்களில் முகப்பின் இடது பக்கத்தில் வண்ணத்துப்பூச்சியின் படத்துக்குப் பக்கத்தில் நுண்ணிய எழுத்துக்களில் அச்சிடப்பட்ட CBSL என்ற எழுத்துக்கள் உள்ளதை உருப்பெருக்காட்டியின் மூலம் அவதானிக்கலாம்.

ஊடறுத்துக் காணப்படுகின்ற குறியீடு

நாணயத்தாளின் முகப்பில் சிறிய வரைபடமொன்றின் ஒருசில பகுதிகள் மாத்திரம் அச்சிடப்பட்டுள்ளதோடு வரைபடத்தின் எஞ்சிய பகுதிகள் அவற்றிற்கு சமபக்கங்களுள்ளதாக நாணயத்தாளின் பின்புறத்தில் அச்சிடப்பட்டுள்ளது. நாணயத்தாளை வெளிச்சத்தின் பக்கம் பிடித்துப் பார்க்கின்றபோது நாணயத்தாளின் இருபுறமும் அவ்வரைபடத்தின் பகுதிகள் ஒன்றுடனொன்று சமபக்கமுள்ளதாக அமைவதன் மூலம் முழுமையான வரைபடம் அமைவதை அவதானிக்கலாம். 1991இன் பின்னர் அச்சிடப்பட்ட நாணயத்தாள்களுக்கு இந்தப் பாதுகாப்புக் குறியீடு இடப்பட்டுள்ளது.

புதிய நாணயத்தாள் தொகுதியின் அனைத்து நாணயத் தாள்களிலும் அந்த நாணயத்தாளில் பெறுமதியைக் குறிக்கும் இலக்கங்கள் நாணயத் தாளின் இருபுறமும் சமபக்கமாக அமையக்கூடிய வகையில் அச்சிடப்பட்டுள்ளதோடு இலக்கங்களின் அரை வாசி வீதம் இருபுறமும் தனித்தனியாக நிறம் தீட்டப்பட்டுள்ளது. நாணயத்தாளை வெளிச்சத்தின் பக்கத்தில் பிடித்துப் பார்க்கின்ற போது இந்த நிறப் பகுதிகள் ஒன்றுடனொன்று சமபக்கமாக அமைவதன் மூலம் முழுமையான இலக்கங்களாகத் தென்படுகின்றன.

புளோரசன்ற் அச்சிடல்

இது புளோரசன்ற் சாயத்தின் மூலம் விசேடமானதொரு அச்சிடலாக நாணயத் தாள்களில் உட்புகுத்தப்பட்டுள்ள பாதுகாப்புக் குறியீடொன்றாகும். என்பதோடு, புறஊதா நிறக் கதிர்களின் முன்னிலையில் பிரகாசிக்கின்றன. 1961ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட பிரதமர் பண்டாரநாயக்கவின் மார்பளவிலான உருவப்படத்துடன்கூடிய நாணயத்தாள் தொகுதி முதல் இன்றுவரை வெளியிடப்பட்டுள்ள அனைத்து நாணயத் தாள்களிலும் இந்த விசேட பாதுகாப்புக் குறியீடு பயன்படுத்தப்பட்டுள்ளது. 1991முதல் இது வரை வெளியிடப்பட்டுள்ள அனைத்து நாணயத்தாள்களிலும் அந்நாணயத்தாளின் பெறுமதி புளோரசன் குறியீடாக இடப்பட்டுள்ளது. ரூபா 5000 நாணயத்தாளில் "ஜெயினி" எனப்படுகின்ற சிவப்பு நிறத்தில் பிரகாசிக்கின்ற புளோரசன்ற் அச்சிடல் பயன்படுத்தப்பட்டுள்ளது.

பிரகாசிக்கின்ற நாடா

இது ரூபா 2000 நாணயத்தாளில் பின்புறமாக தங்க நிறத்தில் அச்சிடப்பட்டுள்ள 12.மி.மீ அகலத்தைக் கொண்ட ஒரு நாடாவாகும். இது நாணயத்தாளின் பின்புறத்தில் நிலைக்குத்தாக இடப்பட்டுள்ளதோடு நாணயத்தாளின் மேலே இருந்து கீழ் நோக்கி தொடர்ச்சியாக செல்கின்றது.

தற்காலத்தில் பயன்படுத்தப்படுகின்ற நாணயத் தாள்களில் உள்ளடங்கியுள்ள பாதுகாப்புக் குறியீடுகளைப் பற்றி தெளிவான தொரு புரிந்துணர்வைப் பெற்றுக்கொள்ளுதலும் அதேபோன்று புதிய நாணயத்தாள்களில் புதிதாக சேர்க்கப்பட்டுள்ள பாதுகாப்புக் குறியீடுகள் தொடர்பாக விழிப்புணர்வைப் பெறுதலும் பணத்தைப் பயன்படுத்துகின்ற அனைவருக்கும் முக்கியமானதாயுள்ளது. அதன்மூலம் போலி நாணயத்தாள்கள் தமது கைகளை வந்தடைவதைத் தடுத்து நட்டமும் அசௌகரியங்களும் ஏற்படுவதைத் தவிர்க்க முடியுமாயிருக்கும். ஒரு பாதுகாப்புக் குறியீட்டுக்கு மட்டுப்பட்டதாயிராது பல பாதுகாப்புக் குறியீடுகள் தொடர்பில் கவனம் செலுத்துதல் போலி நாணயத்தாள்களை அடையாளம் காண்பதற்கு உதவியாயிருக்கும்.

சந்தேகத்துக்கிடமான ஒரு நாணயத் தாள் உங்களது கைகளை வந்தடைகின்ற போது இலங்கை மத்திய வங்கியின் நாணயத் திணைக்களத்திற்கு ஆற்றுப்படுத்துவதன் மூலம் அது மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட போலியல்லாத ஒரு நாணயத் தாளா என்பதை உறுதிசெய்துகொள்ள முடியும். ஏதேனுமொரு விதத்தில் ஒரு நாணயத்தாளை போலி நாணயத்தாள் என்பதை அறிந்துகொண்டு அதனை இன்னுமொருவருக்கு வழங்க முற்படுவதும் போலி நாணயத்தாளை உற்பத்தி செய்வதைப் போன்றே குற்றவியல் நடவடிக்கை முறையில் சட்டக்கோவையின் கீழ் கடும் தண்டனையைப் பெறக்கூடிய ஒரு குற்றச் செயலாகும்.

போலி நாணயத்தாள்களாக உங்களால் அடையாளம் காணக்கூடிய நாணயத் தாள்களை சமர்ப்பிக்கின்ற நபர்களைப் பற்றிய தகவல்களை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு அறிவித்தல் முக்கிய மாகும்.

நாட்டிலுள்ள பொதுமக்களுக்கு ஏற்புடையதான பொதுச்சட்டம் தொடர்பாக அறியாதிருத்தல் சட்டத்தை மீறுகின்ற தவறிலிருந்து தப்புவதற்குக் காரணமாக அமையாது என்பதைப் போன்றே போலியல்லாத நாணயத் தாள்களில் பொதுமக்களுக்காக இடப்பட்டுள்ள பாதுகாப்புக் குறியீடுகள் தொடர்பாக அறியாதிருத்தல், போலி நாணயத்தாள் பயன்பாடு தொடர்பிலான நட்டங்கள் மற்றும் சட்ட நடவடிக்கைகளிலிருந்து தப்புவதற்கு காரணமாக அமையாது என்பதை பணத்தைப் பயன்படுத்துகின்ற அனைவரும் நினைவில் இருத்திக் கொள்ளுதல் வேண்டும். அவ்வாறெனின், இலங்கையில் பணத்தைப் பயன்படுத்துகின்ற அனைத்துப் பிரசைகளும், போலி நாணயத்தாள்கள் தமது கைகளை வந்தடைவதைத் தவிர்க்கும் பொருட்டு நாணயத்தாள்களின் பயன்பாட்டின் போது அந்நாணயத்தாள்களின் போலியற்ற தன்மை தொடர்பில் மிகவும் கவனமாயிருத்தல் வேண்டும்.

உசாத்துணை :

- பொருளியல்நோக்கு, 2010 பரமேஸ்வரன்

குறுக்கெழுத்துப் புதிர்

செல்வி எஸ்.அனிஸ்ஸமிலா
(2015) வர்த்தகப் பிரிவு



மேலிருந்து கீழ்

01 பொருளியலில் மாற்றமடையக் கூடிய விலைமட்டம், வட்டிவீதம் என்பன இதுவாகும்.

04 வணிகத்தின் பண்டமாற்று குறைபாட்டை நீக்க எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்படும் ஒரு பரிமாற்று ஊடகமாகும்.

05 நிறுவனத்தின் விற்பனைக்குப் பின் மீதியாக எஞ்சியிருக்கும் சரக்குகள் மற்றும் ஆரம்பச் சரக்குகள் இதுவாகும்.

03 தனக்குத் தேவைப்படும் மூலதனத்தை பங்குகளாக பிரித்து வழங்கி பணம் திரட்டி கம்பனி சட்டத்திற்கமைய உருவாக்கப்படும் அமைப்பு.

02 பொருள்/ சேவைகள் இறுதி நுகர்வோரை சென்றடையச் செய்யும் விநியோகமானது இவ்வாறு அழைக்கப்படும்.

கீழிருந்து மேல்

07 தரத்தை பேண ஒரே தொழிலில் ஈடுபடும் ஊழியர்கள் சந்தித்து கலந்துரையாடும் தரவட்டமானது இவ்வாறு அழைக்கப்படும்.

08 நிறுவனத்தை உருவாக்க முன் உழைத்த இலாபம், பகிரப்படாத இலாபம், பொது ஒதுக்கம் என்பன இதனுள் அடங்கும்.

06 கம்பனியை கூட்டிணைக்க கம்பனிப் பதிவாளரிடம் இதனையும் சமர்ப்பிக்கவேண்டும்.

இடமிருந்து வலம்

09 கம்பனியின் மூலதனம் பல சிறிய அலகுகளாக பிரிக்கப்பட்டிருக்கும் அவ்வாறு பிரிக்கப்பட்டிருக்கும் ஒரு சிறிய அலகாகும்.

12 பொருளியலில் அருமைப் பிரச்சினையில் இருந்து தோன்றும் மற்றுமொரு பிரச்சினை இதுவாகும்.

15 தனிப்பட்டவர்களின் செலவிடக்கூடிய வருமானத்தில் நுகர்வுக்கு செலவிடப்படாத எஞ்சிய பகுதி இதுவாகும்.

10 பொது விலைமட்டத்தில் ஏற்படுகின்ற தொடர்ச்சியான அதிகரிப்பு இதுவாகும்.

11 கம்பனியின் பிரசுர முடிவுக் கணக்குகளில் வருமானக் கூற்று இவ்வாறு பெயரிடப்படுகிறது.

13 வணிகங்களில் ஒன்றான கூட்டுறவு அமைப்பில் காணப்படும் பெறுமதிகளில் இதுவும் ஒன்றாகும்.

14 நிறுவனத்தின் உற்பத்தி வியாபாரக் கணக்குகளின் நேர்செலவில் இதுவும் அடங்கும்.

வலமிருந்து இடம்

16 தனியுடமையில் தனியொருவராலும், ஏனைய வணிகங்களில் பலராலும் வணிகத்தை ஆரம்பிக்க இடப்படும் பணம் அல்லது சொத்துக்களாகும்.

19 குறித்த உற்பத்திப் பொருள் அதற்குரிய நியமங்களுக்கு அமைவாக தயாரித்து வழங்கப்படல் இதுவாகும்.

17 விலைச் சுட்டெண்ணுக்கு அவசியமான முக்கிய அம்சங்களில் இதுவும் ஒன்றாகும்.

21 வாக்களிக்கும் பங்குதாரர் கூட்டத்திற்கு வராத சந்தர்ப்பத்தில் அவருக்குப் பதிலாக கூட்டத்திற்கு சென்று வாக்களிக்கும் உரிமையுடையவர்.

18 வரையறையற்ற விருப்பங்களை பூர்த்தி செய்ய முற்படும்போது சமூகத்திடமுள்ள வளங்கள் பற்றாக்குறையாக காணப்படுதல் இதுவாகும்.

20 அமைச்சரின் செயலாளர் கணக்குகளை பேணுவதுடன் நிதியாண்டு முடிவுற்றவுடன் நிதி பற்றிய அறிக்கை தயாரிக்க வேண்டுமென கூறுவது இதுவாகும்.

சமூக வலைத்தளங்களும் கையாளும் முறைகளும்

செல்வி பி. ஸ்ரெபினியா
2015 வர்த்தகப் பிரிவு

21ம் நூற்றாண்டிலே தகவல் தொழில் நுட்ப வளர்ச்சியினால் தொடர்பாடல் வசதி யும் அதிகளவில் வளர்ச்சியடைந்து இவ்வுலக மானது பூகோளமயமாதல் என்பதனுள் உள்ளடக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் இணையத்தின் பயன்பாடு மேல்நோக்கிக் காணப்படுகின்றது. இவ் இணைய வலைத் தளங்களிலும்கூட சமூக வலைத்தளங்களின் ஆதிக்கமே உயர்ந்த மட்டத்தில் காணப்படு கின்றது.

அவ்வாறான சில இணையத்தளங் களின் ஊடாக இவ்வுலகமானது ஒரு கிராமம் என்ற வகையில் சுருங்கி பூகோள மயமாக்கப்பட்டுள்ளது. அத்துடன் இன்றைய காலகட்டத்தில் இச்சமூக வலைத்தளங் களினை பயன்படுத்தாது எவருமே காணப்பட மாட்டார்கள். எல்லோரிடமும் இச்சமூக வலைத்தளங்களின் ஏதேனும் ஒரு வலைதள கணக்கு (Account) ஆவது காணப்படும்.

இவ்வாறு ஏதாவது ஒரு சமூக இணைய வலைத்தளத்திலாவது இன்றைய கணினி பயனர்கள் தங்களுக்கென பதிவு ஒன்றைக் கொண்டுள்ளனர். இதன் மூலம் தங்களை நண்பர்களுக்கு தெரியப்படுத்தவும், நண்பர்களுடன் தொடர்புகொள்ளவுமான பணிகளை மேற்கொள்கின்றனர். அந்த வகையில் Facebook மற்றும் twitter சமூக இணையத்தளங்கள் முன்னணியில் உள்ளன. இவற்றை நாடி தங்களுக்கென கணக்குப் பதிவு ஒன்றை அமைப்பது மிக மிக எளிது. ஆயினும் இக்கணக்குகளை முடித்துக்கொள்வது அவ்வளவு எளிதான வழியாகக் காட்டப்படவில்லை. அவ்வாறு பதிவை ரத்துச் செய்து முடித்துக்கொள்ளும் எண்ணம் ஏற்பட்டாலும் நாம் ஏற்கனவே அவற்றில் அமைத்த பதிவுகளையும் நம் தொடர்புகளையும் பதிந்து எடுத்து வைத்துக் கொள்ள ஆசைப்படுவோம். நாம் மேற் கொண்ட தொடர்புகள் நமக்கு எந்த நாளும் நினைவில் இருப்பது உற்சாகம் தரும் என்பதற்காக இந்த ஆவல் அனைவருக்கும் ஏற்படுவதுண்டு.

எனவே நீங்கள் முதலில் உங்கள் Facebook கணக்கில் உள்ள தொடர்பு தகவல்கள் அனைத்தையும் தேர்ந்தெடுத்து பிரதி செய்து ஒரு உறையினுள் பதிவுசெய்து கொள்ளலாம். அடுத்து கணக்குகளை நீக்கும் வழியை நாடுவோம்.

1. Facebook - முகப்புத்தகம்

இன்றைய நிலையில் மக்களால் அதிகம் பயன்படுத்தப்படும் சமூக இணையத் தளம் .இதுவாகத்தான் இருக்கும். இதில் உள்ள பதிவினை முடிவிற்குக் கொண்டுவர எண்ணினால் உங்களுக்கு இரண்டு வழிகள் தரப்படுகின்றன.

நீங்கள் இச்சமூக வலைத்தளத்தி லிருந்து விலகுவதால் எவற்றை எல்லாம்

இழக்கிறீர்கள் என்று தெரியாமல் இருந்தால் தற்போதைக்கு இதனை மூடிவிட்டு பின் ஒரு நாளில் மீண்டும் இதனைப் புதுப்பிக்கலாம்.

அதற்கான வழி வருமாறு

முதலில் "Deactivation" பக்கத்திற்குச் செல்லவும். சென்றவுடன் நீங்கள் முகப்புத்தக நண்பர்களை இனித் தொடர்பு கொள்ள முடியாது. இது உங்களுக்கு இசைவா? என ஒரு செய்தி தரப்படும். அதே நேரத்தில் நீங்கள் ஏன் முகப்புத்தக தளத்தினை விட்டு வெளியேறுகின்றீர்கள் என கட்டாயமாகக் காரணத்தை பதியவேண்டும். இதனை முடித்த பின்னர் "Confirm" என்பதில் கிளிக் செய்தால் உங்கள் அக்கவுண்ட் பதிவு மறைந்து விடும்.

இனி மீண்டும் நீங்கள் பதிவினைப் புதுப்பித்தால் மட்டுமே நண்பர்களுடன் நீங்களும். நீங்கள் உங்கள் நண்பர் களுடனும் முகப்புத்தகம் வழியாகத் தொடர்பு கொள்ளமுடியும். இதனை புதுப்பித்துக் கொள்ள வழமை போன்று login செய்தாலே போதுமானது ஆகும்.

நிரந்தரமாக Facebook தொடர்பு வேண்டாம் என நினைக்கும்போது அதனை நீக்குவதற் கான வழிமுறை வருமாறு:

முதலில் "Account removal" பக்கத்திற்குச் செல்லவேண்டும். இங்கு Delete my account" என்ற பட்டனில் click செய்திட வேண்டும். click செய்தவுடன் மீண்டும் உங்கள் கடவுச் சொல்கேட்டு உறுதி செய்துகொள்ளப்படும். பின்னர் அங்கு கிடைக்கும் கேப்சா சோதனையை மேற் கொள்ளவேண்டும். இதற்குப் பின்னரும் உங்கள் கணக்கு இரு வாரங்களுக்கும் இருக்கும். இந்தக் காலத்தில் அந்த கணக்கைப் புதுப்பிக்க நீங்கள் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் உங்கள் கணக்கு காலாவதியாகி நீக்கப்படும்.

2. Twitter– டுவிட்டர்

அடுத்ததாக பிரபலமாக இயங்கும் சமூக இணைய தளம் Twitter இதிலிருந்து விலகும் முடிவினை எடுத்து விட்டீர்களா? Twitter இணையத்தளத்திற்கு வழக்கம் போலச் செல்லுங்கள். உங்கள் கணக்கு பதிவில் நுழையுங்கள் இணையத் தளப் பக்கத்தில். வலது மேல் மூலையில் காணப்படும் சிறிய சக்கர iconனில் click செய்திடுங்கள் இப்போது கிடைக்கும் பக்கத்தில் கீழாகக் காட்டப்படும் "Deact ivate my Account" என்ற தொடர்பில் Click செய்திடுங்கள்.

இப்பொழுது உங்களுக்கு ஓர் எச்ச ரிக்கை கிடைக்கும். தற்காலிகமாக உங்கள் கணக்குப் பதிவு நீக்கப்படுவதாகவும் தொடர்ந்து 30 நாட்கள் எந்த செயற்பாடும் மேற்கொள்ளப் படவில்லை என்றால் உங்கள் பதிவு நீக்கப் படும் என்றும் ஓர் செய்தி காட்டப்படும். இந்த 30 நாட்களில் மீண்டும் Twitter இணையத் தளத் தொடர்பு தேவை என நீங்கள் எண்ணி னால் வழக்கம் போன்று Login செய்து அதனை பயன்படுத்திக் கொள்ளமுடியும்.

3. Google +

Google இணையத்தளத்தின் ஒரு பிரிவான google + பிரிவில் உள்ள உங்கள் கணக்கினை முழுவதுமாகவே நீங்கள் நீக்கிவிடலாம். இதற்கு முதலில் கூகுள் இணை யத்தளம் (www.google.com) செல்லுங் கள். வலதுமூலையில் உள்ள உங்கள் கணக்குப் பக்கத்தில் Click செய்திடவும். இங்கு 03 தெரிவுகள் கிடைக்கும். மேலாகப் பார்க்கையில் 02 தெரிவுகள் மட்டுமே இருப்ப தாக தெரிந்தாலும் 03 தெரிவுகள் கிடைக்கும்.

நீங்கள் google + தொடர்பிலிருந்து விலக விரும்பினால் "Delete profile and remove related Google features" என்ற பக்கத்தில் Click செய்திடவும்.

இப்பொழுது இதனை தேர்ந்தெடுப்ப தால் ஏற்படும் விளைவுகள் பட்டியலிடப் படும். கூகுள் தளத்தில் பல இடங்களில் உங்களால் தொடர்புகொள்ளமுடியாது என எச்சரிக்கை கிடைக்கும். இவற்றில் எந்த சேவை எல்லாம் தேவை இல்லையோ அவற்றை தெரிவு செய்திடவும். பின்னர் "Remove selected" என்பதில் click செய்திடவும். இதற்குப் பதிலாக "Delete your entire google profile" என்பதில் click செய்தால், youtube மற்றும் google + முதற்கொண்டு பல சேவைகளை நீங்கள் இழக்க வேண்டியதிருக்கும். உங்கள் கணக் கினை முழுமையாக நீக்க எண்ணி னால் உங்கள் அக்கவுண்ட் பிரிவில் "Account management" என்பதில் உள்ள "Close account and delete all services and information associated with it" என்ற பக்கத்தில் Click செய்திடவும்.

பல நிலைகளில் உள்ள தகவல்களை இந்த தெரிவு தேர்ந்தெடுக்கையில் நீக்க வேண்டியிருப்பதால், மீண்டும் உங்களிடம் உறுதி செய்திடும் தெரிவு கேட்கப்படும். எனவே கூகுள் தரும் பல சேவைகளில் Adsense. youtube வரை எவை எல்லாம் வேண்டாமோ, அவற்றில் click செய்து, உறுதி செய்திடவும். உறுதி செய்திடுகையில் மீண்டும் உங்கள் கடவுச்சொல் கேட்கப்பட்டு உறுதி செய்யப்படும் மீண்டும் ஒரு முறை "yes, I want to delete my account" என்ற பொத்தானில் click செய்திட வேண்டிய திருக்கும்.

மேலும் மேலே காட்டியுள்ள இணைய தளங்களுடன் "Instagram" மற்றும் "flickr" போன்ற சமூக தளங்களும், இன்னும் சிலவும் பலரால் பயன்படுத்தப்படுகின்றன. அவற்றிலிருந்து நம் பதிவுகளை நீக்குவது எளிதான வழியாகத் தரப்பட்டுள்ளது. எப்போது தேவை இல்லை என்று உணர்கிறோமோ, அப்போதே நம்மால் ஏற்படுத்தியுள்ள தகவல் களை பிரதி எடுத்துப் பின்னர் பதிவை நீக்கி விடலாம்.

இதன் தொடர்பில் இன்னொரு தகவ லையும் இங்கு காணலாம். இது போன்ற கணக்குகளை நீக்குவதற்கென "account killer" என்ற ஒரு Programme உள்ளது. இதனை http://www.account killer". com என்ற முகவரியில் உள்ள இணையத் தளத்திலிருந்து இலவசமாகத் தரவிறக்கம் செய்துகொள்ளலாம். இந்த தளத்தில் இணை யத்தளங்களில் உள்ள கணக்குகளை நீக்கு வதில் உள்ள சிக்கல்களின் அடிப்படையில் அனைத்து தளங்களும் ஓயிட்லிஸ்ட், கிரேலிஸ்ட் மற்றும் பிளாக் லிஸ்ட் என 03 வகைப்படுத்தப்பட்டுள்ளன. Bயிட் லிஸ்ட் மிக எளிதான வழிகளைக் கொண்டுள்ள தளங்களையும், பிளாக் லிஸ்ட் சுற்றி வளைத்துச் செயல்பட்டு நீக்கும் தளங் களையும் கொண்டுள்ளன.

இவ்வாறே சமூகத்தில் காணப்படும் பல்வேறு சமூக வலைத் தளங்களில் காணப் படுகின்ற கணக்குகளை நீக்குவதற்கான வழிமுறைகளும் விளக்கப்படுகின்றது.

உசாத்துணை நூல்கள்

http://en.m.wikipedia.org/wiki/ List - of - Social - net working - websites

கணினி ஊடுருவல் தாக்குதல்களும் பாதுகாப்பு வழிமுறைகளும்

செல்வி தி. கிளான்ஸி
(2015) வர்த்தகப்பிரிவு.

இத்தலைப்பினை ஆராய்வதற்கு கணினி வலைப்பின்னல் பற்றிய தெளிவான விளக்கம் அவசியமாகும். கணினி வலைப்பின்னல் என்பது ஒரு ஊடுகடத்துகை ஊடகம் ஒன்றின்மூலம் ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட கணினிகள் மற்றும் சாதனங்கள் ஆகியன அடங்கிய தொகுதியினை குறிக்கின்றது. இவ் வலைப்பின்னல் ஆனது

1. இடத்துரி வலைப்பின்னல் (LAN)
2. பெரும்பரப்பு வலைப்பின்னல் (MAN)
3. பெரும் நகர்பரப்பு வலைப்பின்னல் (WAN)

எனும் 03 முக்கிய பிரிவுகளைக் கொண்டுள்ளது. இணையம் ஆனது பெரும் நகர் பரப்பு வலைப்பின்னல் வகையைச் சேர்ந்ததாகும். இதன் மூலமே கணினி ஊடுருவல் தாக்குதல்கள் அதிகளவில் இடம்பெறுகின்றன.

கணினியானது ஒரு வலையமைப்புடன் தொடர்பில் இருக்குமாயின் பயனருக்கு கிடைக்கும் நன்மைகளுக்கு சமமான வகையில் அச்சுறுத்தல்களும் காணப்படுகின்றன. அவற்றுள் முக்கியமான விடயம் கணினி ஊடுருவல் தாக்குதல்களாகும். ஒரு மென்பொருள் நிபுணருக்கு இத்தகைய தாக்குதல்களை மேற்கொள்வதற்கு கணினி வலைப்பின்னல் இலகுவாக காணப்படுகின்றது. இதற்காக பிரத்தியேக கணினி மொழிகளான C, C++, Java போன்ற மொழிகள் பயன்படுத்தப்படுகின்றன.

பெரும்பாலும் கணினி ஊடுருவல் தாக்குதலானது பின்வரும் முறைகளிலேயே நடைபெறுகின்றது.

01. குறும்பர்கள் மற்றும் உடைப்பான்கள் (Hackers and Crakers)

கணினியினுள் அனுமதியின்றி பிரவேசித்து பாதிப்பான நடவடிக்கைகளை ஏற்படுத்துவதற்கென உருவாக்கப்பட்ட மென்பொருட்களினை குறிக்கின்றது. இவை கணினியிலுள்ள குறைபாடுகள் மற்றும் அதற்கான காரணங்களை கண்டறிந்து அவற்றிலிருந்து முறையற்ற பயனை பெறுகின்றன.

02. வேவுபார்த்தல் (Espionage)

உரிமையாளரின் அனுமதியின்றி இரகசிய தகவல்களை இதற்கென உருவாக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை பயன்படுத்தி பெறுதல்.

03. களவாக செவிமடுத்தல் (Eaves dropping)

இரகசிய தகவல்களை அனுமதியின்றி செவிமடுத்தலினை குறிக்கும்.

04. மனிதனின் இடைத்தாக்குதல் (Man in the middle attack)

சேவை பெறுநர், வழங்குநர் ஆகியோரது கணினிகளிற்கிடையில் புகுந்து சேவை வழங்குநருக்கு அங்கத்தவர்போல் செயற்

பட்டு பரிமாற்றப்படும் தரவுகளை தேடுவதற்கு, உள்ளிடுவதற்கு, அல்லது மாற்றியமைப்பதற்கு ஏற்ற சூழலினை உருவாக்கிக்கொள்ளும்.

05. IP அமர்வுகளை கடத்துதல் (IP Session Hijacking)

இணையத்தில் ஒரு ஏற்பு கணினியின் அமர்வை பலாத்காரமாக பெற்று மற்றைய ஏற்பு கணினிகளுடன் செய்தி பரிமாற்றத்தினை மேற்கொள்ளுதல்.

இத்தகைய தாக்குதல்களானது இணையத்தளங்களை குறிவைத்து அமையுமேயானால் அது பாரதூரமான விளைவினை ஏற்படுத்த வல்லது. இத்தாக்குதல்களானது பல அரச இணையத்தளங்களும் அங்கீகாரம் பெற்ற பல முக்கிய நிறுவனங்களின் இணையத்தளங்களும் இக்கட்டான பிரச்சினைக்கு முகம்கொடுக்கவேண்டிய சந்தர்ப்பத்தை உருவாக்கியுள்ளது அமெரிக்கா, இந்தியா, இங்கிலாந்து, சீனா, வியட்நாம் ஆகிய நாடுகளையும் Citibank, Epsilon, Sony போன்ற நிறுவனங்களையும் இதற்கு உதாரணமாக குறிப்பிடலாம்.

Bangladesh Grey Hat Hackers எனும் குழுவினால் அண்மையில் இலங்கையின் மூன்று முக்கிய அரச இணையத்தளங்களான சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு இணையத்தளம், நாடாளுமன்ற சபை முதல்வரின் இணையத்தளம், தயட்ட குருள்ள கண்காட்சி இணையத்தளம் என்பவை தாக்கப்பட்டு உத்தியோகபூர்வ தகவல்களிற்கு பதிலாக வேறு தகவல்கள் மாற்றப்பட்டுள்ளன. இதே போன்று அண்மையில் இலங்கை அரசின் செய்தி இணையத்தளமான www.news.lk இணையத்தளமும் தாக்கப்பட்டது. இவ்வாறான செயற்பாடு ஒரு இணையத்தளத்தின் நன்மதிப்பிற்கு இழுக்கை ஏற்படுத்தும். இத்தகைய கணினி ஊடுருவல் தாக்குதலானது ஒரு குற்றச்செயலாக கருதப்படுகின்றது. இலங்கை பாராளுமன்ற சட்டமான "Computer Crimes Act 24 of 2007" (கணினி குற்றவியல் சட்டம் 2007ம் ஆண்டின் 24ம் இலக்க) சட்டத்தின் படி ஒருவர் இவ்வாறான குற்றச்செயலை செய்தார் என நிரூபிக்கப்பட்டால் அவருக்கு குறைந்தது 2 வருடகால கடுங்காவல் தண்டனை வழங்கப்படுவதுடன் ரூபா 50000/= தொடக்கம் ரூபா 200 000/= வரை தண்டப்பணமும் அறவிடப்படும்.

இவ்வாறான தாக்குதல்களிலிருந்து கணினியினை பாதுகாப்பதற்கான வழிமுறைகள் கணினி வல்லுனர்களினால் உருவாக்கப்பட்டு இன்று பாவனையில் உள்ளன. அவற்றுள் சிலவற்றை பற்றிய தகவல்கள் பின்வருமாறு.

01. குறிமுறையாக்கம் (Encryption)

குறிமுறையாக்கம் எனப்படுவது ஒரு செய்தியினை வெளிநபர் புரிந்துகொள்ள முடியாதவாறு மாற்றியமைப்பதனை குறிக்கும். அச்செய்தியினை பெற்றுக்கொள்பவர் ஒரு சாவியினை பயன்படுத்தி வாசிக்கும் வகையில் மாற்றியமைப்பார்.

இக் குறிமுறைகளானது இணையத்தினூடான கொள்வனவுகள் (Internet Shopping), இணையத்தினூடான வங்கி பரிமாற்றங்கள் (Online banking transection) போன்ற சந்தர்ப்பங்களில் பயன்படுத்தப்படுகின்றது.

02. வலுவான கடவுச்சொல் பாதுகாப்பு (Strong Password Protection)

வலுவான இரகசிய எழுத்துக்களை உபயோகிப்பதன் மூலமும் கணினி ஊடுருவல் தாக்குதல்களிலிருந்து கணினியை பாதுகாத்துக் கொள்ளலாம். இரகசிய எழுத்துக்களை அடிக்கடி மாற்றுவது சிறந்த பயனை கொடுக்கும்.

03. தீச்சுவர் (Firewall)

அனுமதியற்றவர்களின் அணுகலிலிருந்து வலையமைப்பை பாதுகாக்க உதவுகின்றது. இது ஒரு வன்பொருளாகவோ அல்லது மென் பொருளாகவோ காணப்படலாம். வலைய மைப்பிற்கு உள்நுழையும் மற்றும் வெளிச் செல்லும் விடயங்களை இதன்மூலம் கட்டுப்படுத்தலாம்.

04. இலத்திரனியல் கையெழுத்து (Digital Signature)

ஆவணம் ஒன்றினை அனுப்புபவரின் அடையாளத்தினை உறுதிப்படுத்துவதற்கு இணையத்தில் பயன்படுத்தப்படுவது இலத்திர னியல் கையெழுத்து எனப்படும்.

05. நச்சுநிரல் எதிர்ப்பு மென்பொருள் (Antivirus Software)

இவை கணினிக்கு தீங்கினை விளை விக்கும் நச்சுநிரல் தாக்குதல்களிலிருந்து கணினியை பாதுகாக்க பயன்படுகின்றது. இம்மென்பொருளிலிருந்து சிறந்த பயனை பெற்றுக்கொள்வதற்கு Guard, Shield, Autoscan போன்ற பாதுகாப்பு முறைகளை தொழிற் பாட்டில் வைத்திருப்பதும் மென்பொருளினை அடிக்கடி இற்றைப்படுத்துவதும் (Update) அவசியமாகும்.

06. Honey pots and Sugarcanes.

தனிப்பட்ட கணினி வலையமைப்பை வேறுபடுத்தி போலியான ஓர் வலைய மைப்பை உருவாக்குவதனூடாக அனுமதி யற்றவர்களின் தரவு கையாளுகையை கண்காணிப்பதனை இது குறிக்கும்.

இவ்வாறான வழிமுறைகளினை உபயோ கித்து முழுமையான பாதுகாப்பினை பெற்றுக் கொள்வது சாத்தியமற்றதாக காணப்பட்டாலும் கணினி ஊடுருவல் தாக்குதல்களிலிருந்து கணினியை பாதுகாப்பதற்கு இவை பெரும் பங்காற்றி வருகின்றன.

உசாத்துணை

1. http://www.techbooks for free.com/intro-to-data-com/toc.htmltoc
2. http://www.youtube.com watch?v=uxn5xrmsa.v8

- சிறந்த முடிவுகள் அனுபவத்தில் இருந்து கிடைக்கின்றன. ஆனால் அனுபவமோ தவறான முடிவுகளின் பின்னரே கிடைக்கின்றது.
- கல்லின் மீது உளி விழும்போது கல் கலங்கினால் அழகிய சிலை உருவாகுமா? செதுக்கப்படுவதை சிதைக்கப்படுவதாக கருதலாமா?
- உள்ளத்தின் உறுதியே வெற்றிக்கு வித்து

The Pleasures of Learning

Miss S. Stebikka
2015 Commerce

As most Schools are set up today, learning is compulsory. It is an Ought: even worse, a must enforced by regular hours and rigid discipline. And the young sneer at the oughts and resist the musts with all their energy. The feeling often lasts through a lifetime. for too many of us, learning appears to be a surrender of our own will to external direction, a sort of enslavement.

This is a mistake. Learning is a natural pleasure, inborn and instinctive, one of the essential pleasures of the human race. Watch a small child, at an age too young to have had any mental habits implanted by training.

When Archimedes discovered the principle of specific gravity by observing his own displacement of water in a bathtub, he leaped out with delight, shouting "Heureka, heureka" ("I have found it, I have found it") The instinct which prompted his outburst, and the rapture of its gratification, are possessed by all children.

But if the pleasure of learning is universal, why are there so many dull, incurious people in the world? It is because they were made dull, by bad teach by isolation, by surrender to routine; sometimes, too, by the pressure of hard work and poverty; or by the toxin of riches.

Books are not lumps of lifeless paper, but minds alive on the shelves. From each of them goes out its own voice, as inaudible as the streams of sound conveyed by electric waves beyound the range of our hearing; and just as the touch of a button on our stereo will fill the room with music, so by opening one of these volumes, one can call into range a voice far distant in time and space, and hear it speaking, mind to mind, heart to heart.

But, far beyound books, learning means keeping the mind open and active to receive all kinds of experience. And so among the pleasures of learning, we should include travel : travel with an open mind, an alert eye and a wish to unders tand other people, other places, rather than looking in them for a mirror image of oneself.

This is hard advice to give to young satudents. They are explosive, exploratory and insurrectionary. Instead of integrating their lives, they would

rather seek outward, and even try to move in opposite directions simultaneously.

Much unhappiness has been suffered by those people who have never recognized that it is as necessary to make themselves into whole and harmonious personalities as to keep themselves clean, healthy and financially solvent. Wholeness of the mind and spirit is not a quality conferred by nature, or by God. It is like health, Virtue and knowledge. Man has the capacity to attain it, but to achieve it depends on his own efforts. It needs a long, deliberate effort of the mind and the emotions, and even the body.

During our earthly life, the body gradually dies; even the emotions become duller. But the mind in most of us continues to live, and even grows more lively and active, enjoys it self more, works and plays with more expansion and delight.

Many people have played themselves to death or eaten and drunk themselves to death. Nobody has ever thought himsel to death. The cheif danger confronting us is not age. It is laziness, sloth, routine, stupidity - forcing their way in like wind through the shutters, seeping into the cellar like swamp water. Many who avoid learning, or abandon it, find that life is drained dry.

No learner has ever run short of subjects to explore. The pleasures of learning are indeed pleasures. In fact, the worl should be changed. The true *name is happiness. You can live longest* and best and most rewardingly by attaining and preserving the happiness of learning.

Reference Book
The Readers Digest



Easy ways of presenting and explaining in English

Miss. T.Clancy

This article will give some guidelines to explain something in English and to speak in english during a presentation. It is understandable if you feel nervous or uneasy about having to explain samething in english. Because english is not your first language so that it is little difficult for you however, in your higher studies or in the office, you will be in many situations when you have to explain something. Here are some tips to make your explanation or presentation easier.

First you should not talk fast. when we work in a company with many different people, the hardest time we have is listening to someone when they talk fast with a bad accent here the problem is they do not realize how bad their accent affects the people who are not familiar with that language. If you speak slower, you can avoid this problem. Unless you are certain that your accent is understandable and always speak a little slower when you explain something.

Second you should speak clearly. It is very important to say each word clearly and emphaize the important words. even if they

they will understand the whole meaning with proper emphasis and clear pronounciation is very important.

Third prepare and practice ahead of time. Now a days technology is much improved. There fore it easier to record yourself using your mobile or recording devices and listen to the recording. After that you should get a friend knows english very well to judge you. It is the most important step you should do. Even though it will make your output clearer and better, that is not the reason i'm saying. The reason why this is so important because you are laying the foundation on proper way of communication in regards to intonation and pronounciation

For example if you don't do this you

you will continue to practice incorrectly. soon you will be someone who can talk fast but have terrible pronounciation. If you take the time to practice for several hours before each presentation you will be practicing the correct way to enhance your english abilities

The earlier said third step is primarily for presentation. when you have to give an explanation, you might not have time to prepare for it. If someone asks you a question,

to prepare before answering.

However if it is work related you have the ability to anticipate questions ahead of time. Think of your area of expertise and list many questions which you have heard from your friends and neighbours or co – workers. If you speak in your own language you know exactly how to speak without perparing for it. But in

list all your answers out and learn how to say it in english. If you do this, then anytime you get asked a question about your area, you can quickly respond.

Everyone gets nervous when they presents or explain in the languages which they are not familiar. But if they find out the easiest way it is the best solution for it.

References:

- www.wikihow.com
- www.forbes.com

குறுக்கெழுத்துப் புதிருக்கான விடைகள்

1 மா		3 க			9 ங்	கு	4 ப	று	
றி	2 ப	ம்	ன	த	ல	16 மு	ண	ற்	தி
	ங்	10 ப	ண	வீ	க்	க	ம்	சு	வி
	கீ	னி		லி	தி	21 ப	க	ச்	க
	டு	ண்	யா	டி	17 அ		க்	ர	6 அ
11 மு	ற்	ற	ட	க்	கி	ய	7 து	த	
	12 தெ	ரி	வு				8 ஒ		5 இ
13 சு	ய	உ	ரி	மை	ரு	18 அ			ரு
14 நே	ர்	கூ	லி		ம்	ர	19 த		ப்
	ம்	ய	தி	20 நி		15 சே	மி	ப்	பு

பல்கலைக்கழக அனுமதி 2013

1. மேரி கொலஸ்ரீனா கிளமன்ற்
2. மதுஷா யேசுதாஸ்

பல்கலைக்கழக அனுமதிக்கான அடிப்படை புள்ளி பெற்றோர் விபரம் - 2014

1. சுபாசினி யோகரட்ணம்
2. ஜனனி டிலுக்ஷா அலெக்ஸ் அமலரட்ணம்
3. யுனக்ஸ் றொன்சியா பாஸ்கரன்
4. வசந்தினி அடைக்கலதாஸ்
5. மரினா ஷாமினி எட்வேட் அன்ரன்
6. அஸ்வினி ஜெயராஜ்
7. ஜன்சிகா புனிதராஜ்
8. துர்க்காயினி சீவரட்ணம்
9. குபேதினி செல்வராசா
10. சௌமியா சிவனேசன்
11. நிஷாந்தினி அன்ரனி தேவராஜா
12. மக்சினா மரியல் போட்
13. சுகன்யா சகாயநாதன்
14. அருள் டிஷாரா தேவதாஸ்
15. பிரியந்தி கிறிஸ்துராஜா
16. ஜெயமலர் கொன்சன்ரைன் லூட்ஸ்
17. மேரி அனுஷ்கா டீன்குமார்
18. ஆன் சிந்துஜா எட்வேட் பங்கிராஸ்
19. சஜீவா குலசிங்கம்
20. பிறிஸ்கா நொபேர்ட்
21. அருள்மேரி றொபேர்ட் அன்ஸ்ரின்
22. துஷிற்றா சத்தியலிங்கம்
23. மேரி யோலன்ட் செல்வராஜ்
24. ருஷானி சந்ரகாந்தன்
25. லிடியா திஷானா ஜெராட் கினியூட்
26. மேரி யுடெக்சி அன்ரனி
27. ஜீனா கிறிஸ்ரீனா போல், போல் கிறேசியன் சூரியக்குமார்
28. கார்த்திகா ஸ்ரீபன் றெட்னீசன்
29. சுமிர்தா யோகராசா
30. வினுரா விக்டர்

அன்பு கனிந்த நன்றி....

காலத்தினாற் செய்த நன்றி - சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப்பெரிது என்ற

வள்ளுவர் வாக்கிற்கிணங்க எமக்கு நல்ல காலப் பொழுதையும், நேரத்தையும் தந்த இறைவனுக்கு முதற்கண் நன்றிகள்.

இந்நூலை வெளியிட அனுமதிதந்து ஆசிச்செய்தியையும் வழங்கி எமக்கு உறுதுணையளித்த எமது பாடசாலை அதிபர், மற்றும் உபஅதிபருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

எமது வணிக மன்றத்திற்கு தலைமை தாங்கி எம்மோடு எந்நேரமும்கூட இருந்து இத்தளிர் துளிர்க்க ஆக்கமும் ஊக்கமும் தந்த எமது மன்றப் பொறுப்பாசிரியர் திருமதி கௌரி சண்முகலிங்கம் அவர்களுக்கும் ஏனைய வணிக பாட ஆசிரியர்களுக்கும் எமது உளமார்ந்த நன்றிகள்.

எமக்கு நேர்காணல் வழங்கிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளிவாரிப்பட்டப் படிப்புக்கள் பரீட்சை அலகின் கல்வி இணைப்பாளர் திரு. கந்தையா சிவராஜா அவர் களுக்கும் எமது வணிக மன்றம் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

முதற் பிரதி பெற்றவருக்கும், சிறப்பு பிரதியினை பெற்ற அனைவருக்கும் எமது நன்றிகள்.

இத்தளிர் திறம்பட தமது ஆக்கங்களை தந்து உதவிய துறைசார் வல்லுனர்கள் மற்றும் மாணவர்களுக்கு எமது உளம் கனிந்த நன்றிகள்.

அத்துடன் எமது இவ்வணிகத்தளிரை அச்சிட்டு உரிய நேரத்தில் தந்துதவிய அன்ரா பிறிண்டேர்ஸ் நிறுவனத்தினருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து நிற்கின்றோம்.

இத்தளிருக்கு விளம்பரங்களினூடாக நிதி உதவியை வழங்கிய அனைத்து விளம்பரதாரர்களுக்கும் எமது நன்றிகள்.

இவ்வணிகத்தளிர் சிறப்பாக வெளிவர தமது உடல் உழைப்பையும் நேரத்தையும் செலவழித்த எமது வணிகத்துறையைச் சேர்ந்த பழைய மாணவர்கள் அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றிகள்.

வணிக மன்றம்
2015

புதிய பிரிவுகள் ஆரம்பம்

spectra skills

CIMA
AAT
Banking

MS Office /CAA,
Web Design
Hardware & Networking
Software Engineering
Computer Engineering
English(Spoken)

திறமைச் சித்தி அடைபவர்களுக்கு வேலைவாய்ப்புக்கள் பெற்றுத்தரப்படும்

கீழுள்ள வினாவுக்கான விடையுடன் உங்கள் பெயர், முகவரியையும் சேர்த்து **767520940** என்ற இலக்கத்திற்கு **07.Feb.2015** க்கு முன்னர் **SMS** செய்யும் அதிஷ்டசாலிகளுக்கு பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும்

ஒரு அணியில் உள்ள பிள்ளைகளில் 18 பேரின் உயரம் 160cm இலும் கூடவாகும். இவர்கள் அவ்வணியில் உள்ள பிள்ளைகளில் 3/7 பங்காகும். அவ்வணியில் உள்ள பெண்பிள்ளைகளின் எண்ணிக்கை ஆண்பிள்ளைகளின் எண்ணிக்கையின் 2/5 பங்காகும். இவ்வணியில் உள்ள பெண் பிள்ளைகளின் எண்ணிக்கை யாது?

a.6 b.12 c.18 d.24

Authorized Training Provider & Testing Center In Jaffna

CIMA Chartered Institute of Management Accountants

CA THE INSTITUTE OF CHARTERED ACCOUNTANTS OF SRI LANKA

IBSL

aat SRI LANKA

BRITISH COUNCIL

Microsoft

More Details : No -19, People's Bank 2nd Floor,Stanley Road,Jaffna. Call - 0767520940 / 21 222 1422

spectra skills

CIMA
AAT
Banking

MS Office C / C++
Web Design
Hardware & Networking
Software Engineering
Computer Engineering
English(Spoken)

PAANDIYANTHALVU
JEEVA BAKERY



173, Colombagam Road, Jaffna

கிறீன் பரடைஸ்
Green Paradyse

Thalankaval Pillaiyar Kovilady,
Postbox Lane,
Thirunelvely.
தலங்காவல் பிள்ளையார் கோவிலடி,
தபாலகப்பெட்டி ஒழுங்கை,
திருநெல்வேலி.
077 8590578

ANNAI BOOK DEPOT

7, New Market,
Hospital Road, Jaffna
021 222 9881

SANNA
ஸ்ரூடியோ & வீடியோ

பிறந்தநாள் கொண்டாட்டம், பூப்புனித நீராட்டு விழா, திருமணவிழா ஆகிய சகலவிதமான புகைப்படங்களையும் டிஜிற்நல் முறையில் செய்து கொடுக்கப்படும்.

T.P: 077 0878143

JEEVA BAKERY

ANNAI BOOK DEPOT

SANNA

Learning – Saving

HNB Singithi Lama

Keep learning - Keep saving

Learning can be rewarding when it's interesting, motivating and exciting. Now saving can be equally rewarding with HNB Singithi Lama because we reward and motivate our children with fascinating gifts, including loans to buy computers which would help them in their education.

You can now open an HNB Singithi Lama Account for your new born child up to 12 years of age.

What's more, you can open this account for just Rs. 500/- and keep saving as you wish.

Singithi Lama also rewards your little one with

- Scholarships worth Rs. 7 million
- Lovely gifts
- Loans to purchase computers

Conditions Apply

Open an HNB Singithi Lama Account for your child today

HNB Your Partner in Progress

Fitch Rating : AA-(lka)

HNB Head Office, HNB Towers, 479, T.B. Jayah Mawatha, Colombo 10.
Tel: 011 2661983 E-mail: bergiep@hnb.lk Web: www.hnb.net

Hatton National Bank is a Licensed Commercial Bank, supervised by the Central Bank of Sri Lanka. Hatton National Bank PLC - PQ 82

துஷா பல் மூக்குக் கண்ணாடியகம்

கணனி மூலம் இலவசமாக கண் பரிசோதனை செய்து குறைந்த விலையில்
தரமான கண்ணாடி பெற்றுக் கொள்ள நாடவேண்டிய இடம்...

இல. 544, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

Kumar Bake House
குமார் பேக் ஹவுஸ்
021 320 6392
Kumar Bake House

இல. 28, சென் செபஸ்ரியன் வீதி, பாசையூர் யாழ்ப்பாணம்
No. 28, St. Sebestian Road, Passiyoor, Jaffna

Brilliant Photo Studio & Video
பிறில்லியன்ற் போட்டோ ஸ்ரூடியோ
அன் வீடியோ

Album Makers

Excellence Professional Photography, Video Movi Making, Digital Imaging, Reproduction of Old Photos, And B/W To Colour

360/6, Main Street,
Jaffna.

T.P: 077 6161058
0212224681

மொறிஸ் மோட்டார் சைக்கிள் வேக்ஸ்

இல.: 179, கண்டி வீதி, யாழ்ப்பாணம்

உரிமையாளர்: B.E. மொறிஸ்

தொ.பே: 077 9233437

BAJAJ

Service Dealer For David Pieris Motor Company Ltd.



வணிகத்தளிர்
VANIKATHTHALIR

வணிக மாணவர் ஒன்றியம்
COMMERCE UNION

Print at: Andra Printers - 021 221 7279